₹10

fmpb

# அறைகூவல்

Volume 53 | Issue 6 | June 2023



# அறிவிக்க தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்!







தன் நாட்டிற்குப் புகழ் சேர்க்கும்வண்ணம் வெற்றிப் பதக்கங்களை அள்ளிக்குவித்த ஒரு அசாதாரணமான கால்பந்து விளையாட்டு வீரர், காகா. அவர் ஒரு சிறந்த கிறிஸ்தவரும்கூட. அவர் எப்பொழுது தன் விளை யாட்டுக் குழுவிற்காக கோல் (Goal) அடித்தாலும், பரத்திற்கு நேராய்க் கரங்கூப்பி, தனது வெற்றி இயேசுகிறிஸ்துவிடமிருந்து வந்தது என்பதை ஒப்புக்கொள்வார். அந்த வெற்றிக்கான நேர்காணலின் போது அவர் அணிந்திருந்த சட்டையில் காணப்பட்ட "நான் இயேசுவைச் சார்ந்தவன்!" என்ற வாக்கியம், அவரது நிலைப்பாட்டை மறைமுகமாக பிறருக்கு வெளிப்படுத்தியது. இவ்வாறு அவர் தனக்குச் சொந்தமான உடைமைகளின் மூலமாக தானிருக்கும் விளையாட்டுத்துறையில் பிறருக்கு தான் இயேசுவின்மீது கொண்டுள்ள நம்பிக்கையை அறிவிக்க முயலுவார். 1 பேதுரு 2:9-ல் நாம் வாசிக்கிறபடி, தேவன் நம்மை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்திருக்கிறார். தாவீது இந்த அந்தகார இருளை "அமுக்கான களிமண்" என்று விளக்குகிறார். நம் ஒவ்வொருவருடைய வாழ்விலும் நிச்சயம் இத்தகைய இருள் அல்லது அமுக்கான களிமண் போன்ற சூழ்நிலைகள் அனுபவமாக இருந்திருக்கும். தேவன் தமது மகத்துவங்களைப் பிறருக்கு அறிவிக்க அமுக்கான களிமண்ணாகிய நம் போன்ற மனிதர்களைத் தெரிந்தெடுத்திருக்கிறார். நாம் ஒளியினிடத்திற்கு வந்த நமது அனுபவங்களைப் பற்றி பிறரிடத்தில் பகர்ந்து கொள்ளும்போது, அவர்களும் இரட்சிப்பின் ஒளிக்குள் பிரவேசிக்க அது வழிவகுக்கும். இதற்காகவே தேவன் நம்மைத் தெரிந்தெடுத்திருக்கிறார். நமது இயக்கத்தின் ஆரம்பக்கால தலைவரான டாக்டர். சாம் கமலேசன் அவர்களும்கூட, "...கர்த்தர் பிறருக்கு எதைச் செய்திருக்கிறாரோ, அதை உனக்கும் செய்வார்... தம் கரங்களை விரித்து அவர் உன்னை மன்னிப்பார்..." என்ற அர்த்தங்கொண்ட It Is No Secret என்று தொடங்கும் ஓர் பழைய ஆங்கிலப்பாடலை அடிக்கடி பாடுவதுண்டு. இத்தகு நற்செய்தியை மக்கள் கேட்கும்போது, அவர்களும் தேவனுடைய ஒளியினிடத்திற்கு வருவார்கள். 1 பேதுரு 2:10-ன்படி, நாம் அவருடைய ஜனமென்றால், அவருடைய இரக்கங்களை முன்னிட்டு, அவரது மகத்துவத்தை அறிவிக்க நமக்குக் கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்பினையும் நாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

நமது இரட்சகராம் இயேசுவைக் குறித்து அறிவிக்க நமக்கு அவருடைய ஒப்பற்ற நாமம் (ஏசா.12:4), சுவிசேஷம் (லூக்.4:18), சமாதானம் (ஏசா.52:7), பாவமன்னிப்பு (அப்.13:38), இரட்சிப்பு (2 தீமோ.4:18) ஆகியவை தேவைப்படுகிறது. மேற்கூறப்பட்டுள்ள அம்சங்களோடு இயேசுவை நாம் நமது நல்நடக்கை மற்றும் நற்கிரியைகள் அதாவது, நற்சாட்சியுள்ள வாழ்க்கைமுறைகள் மூலம் அறிவிக்க வேண்டுமென 1 பேதுரு 2:12 கூறுகிறது. "சுவிசேஷத்தை எந்நேரமும் பிரசங்கி. தேவையெனில், சொற்பமான சொற்களையே அதற்குப் பயன்படுத்து." - இது ஃபிரான்சிஸ் ஆப் அசிசியின் கூற்று. ஏனெனில், நமது வார்த்தைகளை விட நமது வாழ்க்கைமுறையே அதிக வலிமையாய் பிறருடன் பேசும். கால்பந்து வீரர் காகாவைப் போல நாமும் அனுதின வாழ்வில் இயேசுவை நமது வாழ்க்கைமுறை மூலம் பிறருக்கு அறிவிக்க தேவன் விரும்புகிறார். தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டு, தங்களது வசதியான வாழ்வைத் துறந்து அழிந்துகொண்டிருக்கும் ஆத்துமாக்களுக்கு இயேசுவை அறிவிக்க தைரியமாக நமது தேசத்தின் முன்னணிக்குச் சென்றிருப்பவர்களை நாம் நமது அன்றாடக ஜெபங்களில் நினைவுகூர வேண்டும். அடிமையாகவோ அல்லது பரதேசியாகவோ அல்ல, தேவன் நம்மை அவருக்காக "தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதி யாயும், அவருக்குச் சொந்த ஜனமாயும்" தெரிந்துகொண்டிருக்கிறார். ஆகவே, நாம் புகழாரத்தின் உச்சியிலிருந்தாலும், வாழ்வின் விளிம்புநிலைக்குத் தள்ளப்பட்டிருந்தாலும் எப்படியாவது இயேசுவை நம் வாழ்வில் அறிவிக்க அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை மறந்துவிடாமல் செயல்படுவோம்.

**- மெர்சி செல்வின்** *(தகவல் தொடர்புத்துறை)*

கர்த்தரைத் துதியுங்கள்;
அவர் நாமத்தைத்
தொழுதுகொள்ளுங்கள்;
அவருடைய செய்கைகளை
ஜனங்களுக்குள்ளே அறிவியுங்கள்;
அவருடைய நாமம் உயர்ந்ததென்று
பிரஸ்தாபம் பண்ணுங்கள்.
*– ஏசாயா 12:4*

“சுவிசேஷத்தை அறிந்திராத
மக்களுக்கு, அதை அறிவிப்பது
என்பது திருச்சபையின்
பொதுவான செயல்பாடுகளின்
மற்றொரு அம்சமாக இருக்க
முடியாது. ஏனெனில், அதுதான்
தேவப்பிள்ளைகளின்
மையப் பிரதிபலிப்பாகவும்
அடையாளமாகவும்
இருக்க வேண்டும்.”
*– பிரான்சிஸ் சான்*

சகோதரரில் அநேகர் என்
கட்டுகளாலே கர்த்தருக்குள்
திடன்கொண்டு பயமில்லாமல்
திருவசனத்தைச் சொல்லும்படி
அதிகமாய்த் துணிந்திருக்கிறார்கள்.
*– பிலிப்பியர் 1:14*

“நாம் எச்சூழ்நிலையிலும்
வேத வார்த்தையை அறிவிக்க
கற்றுக்கொள்ளும்போது,
அது தேவனின் மறுஉருவாக்க
வல்லமையை நமக்குள்
வெளிப்படுத்துகிறது என்பதை
இன்னும் பல கிறிஸ்தவர்கள்
அறிந்திருக்கவில்லை.”
*– டெரெக் பிரின்ஸ்*


# அறைகூவல்

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்**
**மாதம் ஒருமுறை மலரும் சத்தியப் பூ**

ஆசிரியர்: S. ஜாண் பெர்லின்

| தனிப்பிரதி ரூ.10/- | வெளிநாடு |
| --- | --- |
| ஆண்டு சந்தா ரூ.48/- | ஆண்டு சந்தா ரூ.480/- |
| ஆயுள் சந்தா ரூ.500/- | ஆயுள் சந்தா ரூ.5000/- |

*தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு*



**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**
29, உயர்நிலைப்பள்ளி சாலை, அம்பத்தூர்,
சென்னை - 53. தொலைபேசி: 044-26570404
பேக்ஸ்: 044-26573353 கைபேசி: 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*


**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**

**நமது தரிசனம்:**
சந்திக்கப்படாத இந்தியர்களை இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தால் சந்திப்பது.

**நமது ஊழியம்:**
தேசமக்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கூறவும், சமுதாயத்தை மறுஉருப்படுத்த உதவி செய்யவும் இந்தியத் திருச்சபைகளை அதிக அளவில் ஈடுபட வைப்பதற்கான நோக்கத்தைப் பகிர்ந்து கொள்வது.

இந்தியத் திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தனது சேவைப்பணியை நாடெங்கும் தொடர்கிறது. சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் ஆகிய இவர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச்சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள். இதில் நீங்கள் இணைவதோடு பிறரும் இணைய அறிமுகம் செய்யுங்கள்.

**feedbackfmpb@fmpb.org**
உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம்.

# பொதுச்செயலாளரிடமிருந்து...

இயேசுகிறிஸ்துவை ஒருமுறைகூட அறியாத இந்தியரனைவரும் அவரை அறிந்திடச் செய்யும் உன்னதப்பணியில் எனது உடன் பங்காளிகளுக்கு, உயிர்த்தெழுந்த ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் நல்வாழ்த்துக்கள்!

தமிழ்நாடு, தர்மபுரி மாவட்டத்தின் அடர்ந்த காட்டிற்குள் அமைந்திருக்கும் பெட்டமுகிலாளம் என்ற கிராமத்தில் நமது முதல் மிஷனரி 1967-ம் ஆண்டு ஜூன் 9-ம் தேதி தனது காலடியை எடுத்து வைத்ததின் பொருட்டு, நம் இயக்கம் அதன் பயணத்தைத் தொடர ஆரம்பித்தது. ஊழிய வரலாற்றில் ஒரு மாபெரும் தடயத்தைப் பதிக்க அந்நாட்களில் அறிந்திராத இடத்தில் அந்த சிறிய அடியை எடுத்து வைக்க தேவன் கிருபை செய்தார். அத்துடன் அந்த சிறிய முயற்சியை தேவன் ஆசீர்வதித்து, 1000 மிஷனரிகளுடன் நம் இயக்கத்தை நாம் நேசிக்கும் தேசத்தின் 24 மாநிலங்களுக்கு எடுத்துச்சென்றுள்ளார்.

சகரியா 4:10 கூறுவது போல, “அற்பமான ஆரம்பத்தின் நாளை யார் அசட்டை பண்ணலாம்?'' என்கிற இவ்வசனம், கிறிஸ்துவோடு கிறிஸ்துவில் கிறிஸ்துவுக்காக நாம் முன்னெடுத்துவைக்கும் ஒவ்வொரு சிறிய அடியும் வரும்நாட்களில் மாபெரும் மாற்றத்தைக் கொண்டுவரும் என்பதை நமக்கு ஞாபகப் படுத்துகிறது. தேவப்பிள்ளைகளே, நீங்கள் ஜெபக்குழுக்களை நடத்துபவராகவோ அல்லது தேசத்திற்காக மன்றாடும் ஒரு ஜெபக்குழுவின் அங்கத்தினராகவோ அல்லது அநேக ஜெபக்குழுக்களை ஒருங்கிணைத்து நடத்தும் நபராகவோ இருக்கலாம். உங்களின் பங்களிப்பு எவ்வளவு சிறிதாக இருந்தாலும் அதைக் காண்கின்ற தேவன், தமது நாமம் மகிமைப்படும்படி அதை உன்னத நோக்கத்திற்காக எடுத்து பயன்படுத்துவார். எனவே, திடமனதாயிருங்கள்! 1 கொரிந்தியர் 15:58 கூறுவது போல, “ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியை யிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக.” கர்த்தர் அதற்கு நமக்கு உதவி செய்வாராக!



## களியக்காவிளை மிஷனரிப் பிரதிஷ்டை:

கன்னியாகுமரி, களியக்காவிளை சி. எஸ். ஐ திருச்சபையில் வைத்து 2023, ஏப்ரல் 22-ம் தேதி நடந்த ஒருநாள் கூடுகையில் 12 மிஷனரிகள் பிரதிஷ்டை செய்யப்பட்டனர். அத்திருச்சபைப் போதகர் அவ்வாராதனையை நடத்த, அதில் தேவ வார்த்தையைப் பிரசங்கிக்க தேவன் என்னைப் பயன்படுத்தியதோடு, அக்கூட்டத்தையும் நிறைவாய் ஆசீர்வதித்துத் தந்தார்.

## நந்தூர்பார் விடுதிப் பிரதிஷ்டை:

மகாராஷ்டிராவிலுள்ள நந்தூர்பார் சிறுமியர் விடுதிப்பிள்ளைகளுக்கு தங்குவதற்கு தேவன் ஒரு அழகிய விசாலமான கட்டிடத்தைக் கொடுத்திருக்கிறார். அக்கட்டிடம் நமது FMPB மிஷனரிகள், விசுவாசிகள் மற்றும் விடுதிப்பிள்ளைகள் முன்னிலையில் கடந்த ஏப்ரல் 25-ம் தேதி பிரதிஷ்டை செய்யப்பட்டது. இந்த நோக்கத்திற்காகப் பங்களித்த அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்.

## விரிவுப்பணி செயலர்கள் கூடுகை:

மேட்டுப்பாளையத்தில் குளிர்ச்சியான சூழலுடன் கூடிய அழகான வளாகமொன்றில் வைத்து நடைபெற்ற 2 நாட்கள் கூடுகையில் தமிழ்நாடு & பாண்டிச்சேரி விரிவுப்பணி செயலர்களும், அதன் கௌரவ செயலர்களும் தங்களது குடும்பங்களுடன் கடந்த நிதியாண்டு

ஊழியத்தைச் சிறப்பாக செய்து முடிக்க தேவன் பாராட்டிய கிருபைக்காக அவரை ஸ்தோத்தரிக்கவும், இந்த நிதியாண்டிற்கான ஊழியத்திட்டத்தை ஜெபத்தின் மூலம் அவரிடத்தில் அர்ப்பணிக்கவும் கூடி வந்தனர். தேவ நாம மகிமைக்காக மிகுந்த அர்ப்பணிப்புடனும், நேர்மையான உள்ளத்துடனும் நமது இயக்கத்தில் ஊழியத்தைச் செய்துவருகிற அனைத்து விரிவுப்பணி செயலர்களுக்கும், அவர்களது குடும்பத்தாருக்கும் நன்றி கூறுகிறேன்.

### உத்தரப்பிரதேசம் & ஜம்மு சந்திப்பு:

நமது பணித்தள செயலருடன் சேர்ந்து கடந்த மே 5 முதல் 11-ம் தேதிகள் வரை கான்பூர் மற்றும் ஜம்மு பகுதிகளிலிருக்கும் நமது மிஷனரிகளையும், சுதேச ஊழியர்களையும், அங்கு சுவிசேஷத்திற்கு எதிராக அதிகரித்து வரும் எதிர்ப்பின் நோக்கில் அங்குள்ள தற்போதைய நிலவரங்களைக் குறித்தும் நேரில் பார்த்தறிய சென்றிருந்தேன். பின்பு மே 7-ம் தேதி உத்தரப்பிரதேசத்திலுள்ள காட்டம்பூர் திருச்சபையில் யாவரும் இணைந்து தேவனை ஆராதித்தோம். சுற்றிலும் ஊழியத்திற்கு எதிரான நெருக்கடிகளின் மத்தியிலும் நமது மிஷனரிகளும் சுதேச ஊழியர்களும் உற்சாகமாக தேவப்பணியை நிறைவேற்றி வருகின்றனர்.

### நவஜீவன் சேவா மண்டல் பொறுப்பாளர்களுடன் சந்திப்பு:

நமது சிறுவர் பராமரிப்பு ஊழியத்தில் மேலும் அதிக ஒத்துழைப்பை ஈட்ட மே 15-ம் தேதியன்று தலைமையகத்தில் வைத்து நவ ஜீவன் சேவா மண்டல் பொறுப்பாளர்களுடன் ஒரு பயனுள்ள சந்திப்பை நடத்தினோம்.

### ஜூன் மாதம் நடைபெறவிருக்கும் முக்கியக் கூடுகைகளும் நிகழ்ச்சிகளும்:

**அஸோம் & பீஹார் பணித்தள விஜயம்:** கர்த்தருக்குச் சித்தமானால் ஜூன் மாதம் முதல் வாரத்தில் அஸோம் மற்றும் பீஹார் மாநிலங்களுக்குச் சென்று அங்குள்ள நமது மிஷனரிகளையும், அவர்கள் பணிபுரியும் பணித்தளங்களையும் பார்வையிட இருக்கிறேன். நமது ஊழியத்தை மேலும் மேம்படுத்தும் விதத்தில் இப்பணித்தள விஜயம் சிறப்பாய் அமைய உங்களது ஜெபங்கள் அவசியம் தேவைப்படுகின்றன.

**NELC மாடரேட்டருடன் சந்திப்பு:** வருகிற ஜூன் 8-ம் தேதி ஜார்க்கண்டிலுள்ள வடக்கு இவாஞ்சலிக்கல் லூத்தரன் சபை மாடரேட்டரைச் சந்திக்க திட்டமிட்டுள்ளோம். இச்சந்திப்பு பயனுள்ளதாக அமைய ஜெபியுங்கள்.

**இந்திய விகிளிஃப் நிறுவனத்தாருடன் சந்திப்பு:** நமது வேதாகம மொழிபெயர்ப்புப் பணியில் இந்திய விக்ளிஃப் நிறுவனம் நமக்கு நல்லாதரவு அளிக்கிறது. வருகிற ஜூன் 10-ம் தேதி சென்னையில் வைத்து அதன் நிறுவனத்தாருடன் ஊழியம் மற்றும் இயக்கத்தின் உறவுகள் பற்றி கலந்தாலோசிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.


**நிதி கண்காணிப்புக்குழு கூட்டம்:** நிதி கண்காணிப்புக்குழு கூட்டம் ஜூன் 11-ம் தேதி நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**செயற்குழு கூட்டம்:** ஜூன் 17-ம் மற்றும் 18-ம் தேதிகளில் 214-வது செயற்குழு கூட்டம் நடைபெறவுள்ளது. அதற்கு பிரயாணப்படும் செயற்குழு அங்கத்தினர்களின் பிரயாணப் பாதுகாப்பிற்காகவும், அக்கூட்டத்தின் ஒவ்வொரு நிகழ்ச்சி நிரலிலும் தேவ வழிநடத்துதலும் ஆலோசனையும் நிறைவாய்க் கிடைக்கவும் தயவாய் ஜெபியுங்கள்.

**குஜராத் பேராயருடன் சந்திப்பு:** கர்த்தருக்குச் சித்தமானால் வருகிற ஜூன் 27-ம் தேதி அகமதாபாத்தில் வைத்து நமது இயக்கப் பொறுப்பாளர்களாகக் கூடி வட இந்திய குஜராத் மறைமாவட்டப் பேராயர் மற்றும் அதன் தலைவர்களைச் சந்திக்கவிருக்கிறோம். அக்கூட்டத்தின் ஆசீர்வாதத்திற்காக ஜெபிக்கக் கேட்கிறோம்.

நமது இயக்கத்தின் ஊழியத்திற்குத் தாங்கள் ஏறெடுத்துவரும் ஜெபங்கள் மற்றும் காண்பித்து வரும் ஆதரவுகளுக்காக நன்றி கூறுகிறோம். ஒரு நாளைக்கு ஒருமுறையாவது நமது மிஷனரிகள் யாவரையும் தங்களது ஜெபங்களில் நினைவுகூருமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தேவ ஊழியத்தில் தங்கள் சக ஊழியன்,



**அருட்திரு. S. ஜாண் பெர்லின்**

# அறிவிக்க

## தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்!



*"நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்."*
*- 1 பேதுரு 2:9*

சிறிய நகரங்களில் தண்டோரா அடித்து செய்திகளைப் பறைசாற்றுபவனின் வாழ்வில் அந்தச் செய்தி அவனை உணர்ச்சி வசப்படுத்துவதோ, அவன் மனதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதோ இல்லை. நாம் நற்செய்தியை அறிவிக்கும்பொழுது, அது வெறும் உச்சரிக்கப்பட்ட வார்த்தைகள் அல்ல. மாறாக, நாம் அச்செய்தியின் மூலக்காரணரான திரியேகராகிய நம் ஆண்டவரையே அறிவிக்கிறோம். இந்த நற்செய்தியை அறிவிப்பவர் அச்செய்தியை நம்பினவராக, அதற்குக் கீழ்ப்படிந்து, தன் வாழ்விலே அதன் தாக்கத்தை அனுபவித்தவராக இருக்க வேண்டும்.

### செய்தியாளரின் தகுதியும் பொறுப்புகளும்:

1 பேதுரு 2:9-ன்படி நற்செய்தி அறிவிக்கின்ற நாம் குறிப்பாக தெரிந்தெடுக்கப்பட்டவர்கள். அவ்வாறு தெரிந்தெடுக்கப்படுவது ஒரு பாக்கியம் மட்டுமல்ல, கடினமான பொறுப்பும்கூட. நாம் ராஜாதி ராஜாவாகிய தேவனுக்குச் சொந்தமான ராஜரீக கூட்டத்தாராகவும், ஆசாரியக் கூட்டத்தாராகவும் இருக்கிறோம். ஆசாரியத்துவம் என்பது ஒரு மத்தியஸ்தர் செய்யும் பொறுப்பாகும். ஆசாரியராக இருப்பவர் ஆண்டவருக்கும் மக்களுக்கும் இடையே செயல்படும் பொறுப்பை வகிக்கிறார். அவர் ஆண்டவருக்கு முன்பு மக்களின் பிரதிநிதியாகவும், ஆண்டவர் அருளும் நன்மைகளையும் கட்டளைகளையும் மக்களுக்குக் கொண்டுவந்து ஆண்டவரின் வழிகளைப் போதிக்கும் பொறுப்பை வகிப்பவராகவும் இருக்கிறார். நாம் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள், அழைக்கப்பட்டவர்கள், பரிசுத்த ஜாதி என்றெல்லாம் பல தனித்தன்மைகளுடன் வர்ணிக்கப்பட்டு கொண்டாடப்படுகிறோம். ஆனால், நடைமுறை வாழ்க்கையில் நமது தனித்தன்மைகள் நாம் நம்முடைய குழந்தைகளுக்கு வைக்கும் பெயர்கள், உடை உடுத்தும் விதங்கள், உண்ணும் உணவு வகைகள், பேசும் மொழி, கொண்டாடும் பண்டிகைகள், தொழுது கொள்ளும் விதங்கள் ஆகியவற்றால் மட்டும் வெளிப்படுத்தப்படுகிறதா? அல்லது நம் வாழ்வின் மதிப்பீடுகள் அதாவது தனித்தன்மைகள், தேவ கிருபையினால் மீட்கப்பட்ட நம் வாழ்வில் வெளிப்படும் நற்கிரியைகள் மற்றும் தேவை நிறைந்த மக்களைக் குறித்த கரிசனை ஆகியவற்றினால் வெளிப்படுத்தப்படுகிறதா? என்று சிந்தித்துப் பார்ப்போம்.

## அறிவித்தல் – வாய்மொழி மற்றும் வாழ்வியல் வழி:

அடிப்படையில் 'நற்செய்தி அறிவித்தல்' என்பது வாய்மொழி வாயிலாகச் செய்யப்படுவதையே குறிக்கும். நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பரலோக ராஜ்யத்தைக் குறித்த நற்செய்தியை அறிவித்தார். பவுல் நற்செய்தியை யூதர் அல்லாத மக்கள் மத்தியில் வாய்மொழி வாயிலாக அறிவித்தார். நம் நடைமுறை வாழ்க்கை எப்படி இருப்பினும் பரவா யில்லை வாய்மொழியில் நற்செய்தியைச் சிறப்பாக எடுத்துக்கூற தெரிந்தி ருந்தால் போதும் என்பதல்ல, வாய் மொழி மூலம் நற்செய்தி அறிவித்தல் மிகுந்த பயனுள்ள விளைவுகளைத் தருவதற்கு நாம் பின்வரும் கோட்பாடுகளை மனதில் கொள்ள வேண்டும்.

### 1. உலக கண்ணோட்ட கோட்பாடு:

நாம் எந்த சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கு நற்செய்தி அறிவிக்கின்றோமோ, அம்மக்களின் கலாச்சார நுணுக்கங்கள் மற்றும் உலக கண்ணோட்டம் ஆகிய வற்றை ஆராய்ந்து அல்லது கற்றறிந்து அவைகளைக் கருத்தில் கொண்டு அறிவிக்கும்பொழுது, அது அவர்களுக்குச் செய்தியைச் சரியாகப் புரிந்துகொள்ள உதவும். அத்தேனே பட்டணத்தில் பவுல் செய்த நற்செய்தி அறிவிப்பு இதற்கொரு சிறந்த எடுத்துக்காட்டு (அப்.17:16-34). யோவான் தனது நற்செய்தி நூலைத் தொடங்கும் விதம் கிரேக்கப் பின்னணியத்திலிருக்கும் மக்களின் உலக கண்ணோட்டத்தைக் கருத்தில் கொண்டு எழுதப்பட்டதை நாம் நன்கு காணலாம். நமது நற்செய்தி அறிவிப்பைக் கேட்கும் மக்கள் பாவம், மீட்பு, நித்திய வாழ்வு போன்ற இறையியல் சம்பந்தப்பட்ட போதனைகளைத் தங்களுடைய கண்ணோட்டத்தின் வாயிலாக பலவிதங்களில் புரிந்துகொள்ளக்கூடும். எனவே, நாம் சத்தியத்தை எடுத்துரைக்கும் போது அந்தப் பகுதியை ஆக்கியோன் எந்த அர்த்தத்தில் எழுதி இருக்கிறாரோ, அந்த அர்த்தம் சிதையாமல் அறிவிப்பது மிகவும் அவசியம். அதேபோல் செய்தி யைக் கேட்பவர்கள் எந்த விதத்தில் அதைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று ஆக்கியோன் விரும்புகிறாரோ, அதே விதத்தில் அர்த்தம் சிதையாமல் கேட்பவர்களைப் புரிய வைப்பதும் மிகவும் அவசியமானது. உதாரணமாக, கிறிஸ்துவை விசுவாசிக்கும்பொழுது அவர் நமக்கு அருளும் இரட்சிப்பு அல்லது மீட்பு அதாவது பாவமன்னிப்பு மற்றும் தேவனோடு வாழும் நித்திய வாழ்வைக் குறித்து நாம் மற்றவர்களிடம் பகர்ந்துகொள்ளும்போது, நாம் போதிப்பது ஒன்றாகவும், கேட்பவர் களின் கண்ணோட்டத்தின்படி அது பிறப்பு – இறப்பு – மறுபிறப்பு என்று ஜென்ம ஜென்மமாக தொடர் சங்கிலி போன்ற இந்த ஓயாத சுழல் ஓட்டத்திலிருந்து விடுபட்டு இறைவனோடு இரண்டற கலந்து விடுவதே மீட்பு அல்லது இரட்சிப்பு என்று கேட்பவர்கள் புரிந்துகொள்வது வேறொன்றாகவும் இருக்கும் தவறை தவிர்க்க வேண்டும்.

### 2. மொழிக் கோட்பாடு:

நற்செய்தி அறிவிப்பு மக்களின் தாய் மொழியில் இருப்பது விரும்பப்படத்தக்கது. பவுல் யூதர்களிடம் பேசும்பொழுது எபிரெய மொழியிலும், கிரேக்கர்களிடம் பேசும்பொழுது கிரேக்க மொழியிலும் பேசுவதை நாம் வேதாகமத்தில் காணலாம். பலதரப்பட்ட மொழிகள் இருப்பதை ஒரு பிரச்சினையாகக் கருதுவதற்குப் பதிலாக அவைகளைக் கொண்டாடுவதோடு, அவைகள் ஒவ்வொன்றையும் பாதுகாப்பதும் அவசியம். நாம் ஊழியம் செய்யும் மக்களின் தாய்மொழியில் நற்செய்தியையும் சத்தியங்களையும் அறிவியாமல் வேறு மொழியில் அறிவிப்பதற்கு, அம்மக்களின் மொழியைச் சிரத்தை எடுத்துப்படிக்க நமது விருப்பமின்மையும் சோம்பல்தனமும் ஒரு காரணமாக இருக்கக்கூடாது.

## 3. வாழ்க்கை சாட்சி கோட்பாடு:

அறிவிக்கப்படும் செய்தியானது அச் செய்தியை அறிவிப்பவரின் வாழ்க்கை சாட்சியோடு ஒத்துப்போக வேண்டும். நமது வெளிச்சம் நம்முடைய நற்கிரியைகளின் மூலம் பிரகாசிக்கும்போது நம்மைப் பார்ப் பவர்கள், நம்முடைய பரலோக தந்தையை மகிமைப்படுத்துவார்கள் என்பதை மத்தேயு 5:16-லிருந்து கற்றுக்கொள்கிறோம். தேவனைக் குறித்த உண்மைகள் எந்த ஒரு வார்த்தை வாயிலாக அறிவிக்கப் படாவிட்டாலும், தேவனுடைய படைப்பே எது சரி எது தவறு என்பதை நமக்கு வெளிப்படுத்திவிடும். இதைக் குறித்து பவுல் ரோமர் 1:18-20 வரை உள்ள வசனங் களில், குறிப்பாக வசனம் 20-ல் “காணப் படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானது முதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும்; ஆதலால் அவர்கள் போக்குச்சொல்ல இடமில்லை” என்று கூறுகிறார். மேலும் சங்கீதக்காரரும், “வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது... அவைகளின் சத்தம் பூமியெங்கும், அவைகளின் வசனங்கள் பூச்சக்கரத்துக் கடைசிவரைக்கும் செல்லு கிறது” என்று கூறுகிறார் (சங்.19:1,4). இவைகளெல்லாம் வார்த்தைகளற்ற அறிவிப்புகளாக அல்லது தேவனுடைய தன்மையை வெளிக்காட்டும் நிகழ்வுகளாக இருக்கின்றன. தேவனுடைய படைப்பு அவருடைய குணத்தையும், அதிசய அற்புதங்களையும் பிரதிபலிப்பது போல நம் வாழ்க்கையும் தேவனின் அன்பு, பரிசுத்தம், இரக்கம், தயவு மற்றும் வல்லமையை வெளிப்படுத்துகிறதா? நாம் வாய்மொழி யாய் அறிவிக்கும் செய்திக்கு நமது வாழ்க்கைமுறை முரண்படும்போது, அது நமது வாய்மொழி செய்தியைக் குறைவான செயல்திறன் கொண்டதாகவோ, குறைவான நம்பிக்கையூட்டுவதாகவோ, குறைவான ஈர்ப்புடையதாகவோ மாற்றிவிடுகிறது. 2 நாளாகமம் 15:9-ல் ஆசாவின் தேவனாகிய கர்த்தர் அவனோடிருக்கிறதைக் கண்டு இஸ்ரவேலின் ராஜ்யத்திலிருந்து திரளான ஜனங்கள் அவன் பட்சத்தில் யூதாவிற்கு வந்து சேர்ந்தார்கள் என்று அறிந்து கொள்ள முடிகிறது.

## ஒப்புமைகளும் உவமைகளும்:

நற்செய்தி அறிவிப்பதில் உவமைகள், உவமேயங்கள் மூலமாக மக்களுக்குச் சத்தியங்களை விளக்கிச் சொல்வது மிகவும் அவசியமானது. நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து அநேக உவமைகள் மூலம் உபதேசித்தார். உலகின் கிழக்குப் பகுதி களிலுள்ள நாடுகளில் மத குருக்கள் உவமைகள், ஒப்புமைகள் மூலம் தங்களின் சீடர்களுக்கும், பொதுமக்களுக்கும் தங்களது போதனைகளை அறிவித்தார்கள். இது ஆழ்ந்த அர்த்தம் கொண்ட போதனைகளை எளிதில் புரிந்துகொள்ள மக்களுக்கு ஏதுவாக இருந்தது. நாமும் வேதாகமத்தில் இருக்கும் நுணுக்கமான சத்தியங்களையும் போதனைகளையும் இவ்வாறு எடுத்துரைக்கும்பொழுது மக்கள் அவைகளை எளிதில் புரிந்து ஏற்றுக்கொண்டு தங்கள் மனதில் பதித்துக் கொள்வார்கள்.

## பிற மத நம்பிக்கைகளை மற்றும் கொள்கைகளை அறிந்து கொள்ளுதல்:

நற்செய்தியை அறிவிக்கும் நாமும் பிற மத நம்பிக்கைகளின் அடிப்படை தத்துவங்களைக் கேட்டும், படித்தும் புரிந்துகொள்ள வேண்டும். நாம் அவைகளை எவ்வளவு அதிகம் புரிந்து கொள்கிறோமோ, அந்த அளவிற்கு நமது சொந்த நம்பிக்கையின் சிறப்பை நாம் பாராட்ட இயலும். பகைமை அல்லது ஏற்றத்தாழ்வு மனப்பான்மை

இல்லாமல் அனைத்து பிற மத மக்களுடன் ஆரோக்கியமான உறவை வளர்க்கவும், அவர்களுடன் அர்த்தமுள்ள உரையாடல்களில் ஈடுபடவும், அவர்களுக்குத் தெரிந்த கருத்துக்களை மற்றும் சொற்றொடர்களைக் கொண்டு நமது நற்செய்தியின் நம்பிக்கைகளை அவர்களிடம் விளக்கவும் இது உதவியாக இருக்கும். அது மாத்திரமல்ல, நமது நம்பிக்கையின் கூறுகளுக்கு இது அதிக நம்பகத்தன்மையையும் அளிக்கிறது. ஏனெனில், நமது நம்பிக்கை அறியாமையினிமித்தம் உண்டானதல்ல; மாறாக, பலதரப்பட்ட நம்பிக்கைகளை அறிந்துணர்ந்து தெரிந்தெடுப்பு செய்ததாகும் என்பதை அவர்களும் அறிய ஏதுகரமாகும்.

### தேவாவியைச் சார்ந்திருத்தல்:

நற்செய்தியை அறிவிக்க நாம் தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டு அழைக்கப்பட்டிருப்பதால், நாம் நமது ஞானத்தையும் பெலத்தையும் மட்டும் சார்ந்திருக்காமல் தேவாவியின் வல்லமையையே சார்ந்து இருக்க வேண்டும். 1 கொரிந்தியர் 2:4,5-ம் வசனங்களில் பவுல் "உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு, என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது'' என்று எழுதுகிறார். நமது நற்செய்தி அறிவிப்பின் பொருள் கிறிஸ்துவாக இருக்கவேண்டும். நமது அறிவிப்பின் நம்பகத்தன்மை நாம் வாழும் வாழ்க்கைமுறையால் பெரிதும் நிர்ணயிக்கப்படுகிறது. வாய்மொழி மற்றும் வாழ்க்கை சாட்சிமுறை கொண்ட நமது நற்செய்தி அறிவிப்பு, தேவ நாமம் மகிமைப்படும்படி பிறர் வாழ்வையும் மாற்றட்டும். அதற்கு ஆண்டவர் நமக்குக் கிருபை பாராட்டுவாராக!

**– அருட்திரு. சுதர்சன் தாமஸ் ஜெயராஜ்,**
FMPB – *முன்னாள் பொதுச்செயலாளர் & வேதாகம மொழிபெயர்ப்பாளர் – ஹரியானா.*


**அவசர தேவை!**

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் 'சொத்து பராமரிப்புத்துறை'யில் தன்னார்வ ஊழியராகப் பணிபுரிய இத்துறை சம்பந்தமான அனுபவமிக்க (அ) கல்வித்தகுதி மிக்க நபர் தேவை.**

**தொடர்பு: FMPB - HRD**
**044-2657 0404**


## மகிமைக்குள் பிரவேசித்தார்



திரு. S. கோயில் பிள்ளை (வயது-85) அவர்கள், சென்ற 08.04.2023 அன்று தேவராஜ்யத்திற்குள் பிரவேசித்தார்கள். இவர் கன்னியாகுமரி மாவட்டம் – மேலசந்தையடி பகுதி ஜெபக்குழுத் தலைவராக கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாகச் சிறப்புடன் பணியாற்றியவர். வீடுகளைச் சந்தித்து ஜெபிப்பதிலும், காணிக்கை சேகரிப்பதிலும், ஜெபக் குழுக்களை நடத்துவதிலும் அர்ப்பணிப்புடன் செயல்பட்டவர்; நல்லதொரு ஜெபவீரர். அவர் விட்டுச்சென்றுள்ள அவரது மகள், மருமகன் மற்றும் பேரப்பிள்ளைகளின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.



# பொதுச்செயலாளரிடமிருந்து ஒரு திறந்த மடல்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் சந்தாதாரர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும், தாங்குவோர் அனைவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள்!

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஆதரவாளர் என்று தன்னைத்தானே அறிவித்துக்கொண்ட ஒருவரால், உண்மை நிலையைக் கண்டறியாமல் தீங்கிழைக்கும் நோக்கம் கொண்டு எழுதப்பட்ட ஒரு மின்னஞ்சல் எங்கள் கவனத்திற்கு வந்துள்ளது. அந்த மின்னஞ்சலில் எழுப்பப்பட்ட பிரச்சினைகள் எந்தக் குறிப்பிட்ட நிகழ்வுகளும் இல்லாமல் பொதுவான இயல்புடையதாக இருந்தன. நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் மூத்த தலைவர்களில் ஒருவர் அவரை எழுதியிருக்கிற பிரச்சினைகளை விவாதித்துத் தெளிவுபடுத்திக்கொள்ள குறிப்பிட்ட சம்பவ விபரங்களோடு ஓரிடத்தில் சந்திக்க வருமாறு கேட்டுக்கொண்டார்.

ஒரு இயக்கமாக, நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு அதன் நெறிமுறைகளையும் (ethos), இயக்கம் உருவாக்கி வைத்திருக்கும் நடைமுறைகளையும் எல்லாக் காலத்திலும் பின்பற்றுவதாக உறுதியெடுத்துள்ளது. முழுநேர ஊழியர்கள் ஒழுக்கத்தைக் கடைபிடிக்க வேண்டுமென்பது இயக்கத்தின் முக்கிய அம்சம். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு தனது கொள்கைகளில் ஒருபோதும் சமரசம் செய்து கொள்வதில்லை. ஆகவே, தற்போதைய தலைமைக்கு எதிராகக் கொடுக்கப்பட்டுள்ள பொதுவான புகாருக்குப் பதிலளிக்க இயல வில்லை. ஏனென்றால், குறிப்பிட்ட நிகழ்வுகளைக் கூறுங்கள் என்று கேட்டபொழுது, அதற்குப் பதில் ஏதும் அவர்களால் தர இயலவில்லை. எனவே, அதைக் குறித்து சரியான முறையில் தீர்வு காண்பதற்கு செயற்குழுவில் விவாதிக்க இயலவில்லை.

செயற்குழு உறுப்பினர்களின் தீவிர பங்கேற்புடன்தான் அவ்வப்போது முடிவுகள் எடுக்கப்படுகின்றன. சில பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டு, அதற்கான தீர்வுகள் அனைத்து அங்கத்தினர்களின் நலனுக்காகவும், ஊழிய முன்னேற்றத்திற்காகவும் செயல்படுத்தும் நிலையில் உள்ளன. ஓர் இயக்கத்திற்கு அதன் ஊழியர்கள் மத்தியில் ஒழுக்கத்தை நிலைநாட்டுவது மிகவும் முக்கியமான ஒன்று. அதனால்தான் தீர்மானங்கள் எடுக்கும்போது தனிப்பட்ட ஊழியரின் செயலாக்கம், மேலும் அவருடைய மேற்பார்வையாளரின் கருத்து மற்றும் தனிப்பட்ட நபரின் வேலையின் உண்மைத்தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு தனது ஊழியர்கள் மத்தியில் நிதி மற்றும் ஒழுக்கத்தைக் கடைபிடிப்பதில் அர்ப்பணிப்புடன் உள்ளது. நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அதன் தலைமையின் கவனத்திற்குப் பிரச்சினைகளைக் கொண்டுவரும்போது அதற்குப் போதுமான முக்கியத்துவம் கொடுக்கிறது. அதற்கான முடிவுகள் ஒரு விரிவான ஆய்வின் அடிப்படையிலும், உண்மைத்தன்மையின் அடிப்படையிலும் தீர்மானிக்கப்படுகின்றன. எனவே தான் நீங்கள் அறிந்திருக்கிறபடி ஒவ்வொரு பிரச்சினையிலும் இறுதி முடிவுகள் எடுப்பதற்கு நீண்ட காலம் பிடிக்கிறது.

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் சார்பில் நமது நிலைப்பாட்டை நீதிமன்றங்களில் எடுத்துரைப்பதற்காக நல்ல விசுவாசமுள்ள ஒரு வழக்கறிஞரை மிகவும் குறைந்த செலவில் நாம் வைத்திருக்கிறோம். வழக்கறிஞருக்குப் பெருந்தொகை வழங்கப்படுகிறது என்று

அவர்கள் கூறுவது உண்மையற்ற தவறான எண்ணத்தோடு பரப்பப்படுகின்ற ஒரு செய்தி மாத்திரமே. கொள்கை அடிப்படையில் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு எந்த வழக்கையும் தொடுக்காது. ஆனால், இயக்கத்தைவிட்டு வெளியேறிய அதிருப்தி ஊழியர்களால் தாக்கல் செய்யப்படும் வழக்குகளை மாத்திரமே நாம் எதிர்கொண்டு வழக்காடி வருகிறோம்.

கோவிட் – 19 பெருந்தொற்று ஏற்பட்ட காலத்தில் ஊழியர்கள் கவனிக்கப்படவில்லை என்ற தவறான தகவலை நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு நிராகரிக்கிறது. பெருந்தொற்றுக்கு முந்தைய மற்றும் பிந்தைய காலங்களில் பாதிக்கப்பட்ட அனைத்து ஊழியர்களுக்கும் மருத்துவ உதவிகள் உட்பட அனைத்து உதவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு ஊழியர்களும் நியாயமாக நடத்தப்படுகிறார்கள் என்றும், தன் நடவடிக்கைகளில் ஒரு வெளிப்படையான தன்மையை நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு உறுதி செய்கிறது என்பதையும் ஒவ்வொருவருக்கும் உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு அதனுடைய அறிவிக்கப்பட்ட நெறிமுறைகளுக்குட்பட்டு (ethos), அதன் முன்னேற்றத்திற்காகவும் ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் மகிமைக்காகவும் அர்த்தமுள்ள ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ள விருப்பத்தோடு இருக்கிறது.

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியங்களுக்காக தொடர்ந்து ஜெபியுங்கள். உதாரத்துவமாக ஆதரியுங்கள்.

கிறிஸ்துவின் பணியில்,
**அருட்திரு. S. ஜாண் பெர்லின்,** பொதுச்செயலாளர்.

# இப்பொழுது விற்பனையில்

## நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் வெளியீடுகள்

**மிஷனரிகளின் வாழ்க்கை**

திருச்சபை சந்திக்கும் சவால்களை அலசி ஆராய இந்த புதிய வெளியீட்டை வாங்கிப் பயன்பெறுங்கள்




- உலகமெங்கும் தேவ பணியினை நிறைவேற்றிய 50 மிஷனரிகளின் வாழ்க்கை வரலாறு **பாகம் – 1**
- நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் 50 மிஷனரிகளின் வாழ்க்கை வரலாறு **பாகம் – 2** ஆகியவை

மறக்கமுடியாத மாமனிதர்கள் என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளோம்.
FMPB–யின் மைல் கற்கள் மாபெரும் அறுவடை என்ற தலைப்பிலும் கிடைக்கும்.

**வாங்கிப் பயன்பெறுங்கள்!**

***கிறிஸ்துவுக்குள் பிரியமான அன்பர்களே, ஜார்க்கண்டிலுள்ள சந்தால் மற்றும் மால்தோ மக்களிடையே மருத்துவப்பணி செய்யும் மருத்துவ மிஷனரியான Dr. Mrs. வில்செட் கிறிஸ் MBBS, MD (OG) மற்றும் அவரது கணவர் Dr. D. தாமஸ் (Scientist in DRDO) அவர்களின் வாழ்க்கை மற்றும் தேவராஜ்யப் பணிக்காக அவர்கள் மேற்கொண்டுள்ள முன்னெடுப்பு, எமது ஆத்தும பாரத்தை அனல்மூட்டி புதுப்பிப்பதாக அமைந்தது. அதைக் குறித்து அவர்களுடனான***



# நேர்காணல் இதோ...!



**கேள்வி:** உங்களது இரட்சிப்பு மற்றும் ஊழிய அழைப்புப் பற்றி கூற முடியுமா?

**Dr. Mrs. வில்செட் கிறிஸ்:** நான் தமிழ்நாடு, நாகர்கோவிலிலுள்ள சி.எஸ்.ஐ. பாரம்பரியத்தைச் சார்ந்த கிறிஸ்தவள். எனது 10-ம் & 12-ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வின் நாட்களிலும் சபையில் நடைபெறும் அனைத்து கூட்டங்களிலும் நான் பங்கேற்க தவறிய தில்லை. எனது மருத்துவப்படிப்பின் முதலாம் ஆண்டில் இரட்சிப்பின் அனுபவம் பெற்றேன். வேத வசனங்களுக்குக் கீழ்ப்படிவது என்பது எனது முதன்மையான விருப்பம். தேவராஜ்யப் பணிக்காக உழைப்பதற்கும், சமூகத்தில் தாழ்ந்தோருக்கு உதவி செய்வதற்கும் எனது படிப்பு பயன்பட வேண்டும் என்பது எனது கனவு. என் பள்ளி நாட்களில் எனது தந்தை இறந்துபோனதால், நான் வீட்டில் மூத்தவள் என்கிற காரணத்தால் எனக்கடுத்த சகோதர, சகோதரிகளின் படிப்பு மற்றும் அவர்களது திருமணம் குறித்த பாரம் என்மேல் விழுந்தது. அதன் மத்தியிலும் கர்த்தர் என்னைப் பாதுகாத்து சரியான வழியிலே நடத்தினார்.

**கேள்வி:** ஒரு பெரிய மருத்துவமனையில் நீங்கள் மருத்துவராகப் பணியாற்றி சுகபோகமாக வாழ்ந்திருக்கலாம்; ஆனால், இந்த ஆதிவாசி மக்களிடையே மருத்துவராகப் பணியாற்ற தீர்மானித்தது ஏன்?

**Dr. Mrs. வில்செட் கிறிஸ்:** எனது மருத்துவ உயர் படிப்பிற்குப்பின், 1999-ம் ஆண்டில் எங்களுக்குத் திருமணமாகி, கொச்சியிலுள்ள லிசி மருத்துவமனை நிறுவனமொன்றின் 1200 படுக்கை வசதிகளுடைய ஒரு பெரிய கிறிஸ்தவ மருத்துவமனையில் 10 ஆண்டுகளாகப் பணிபுரிந்தேன். அங்கு நான் நன்றாகப் பணிசெய்வதற்கான ஒழுங்கு மற்றும் உறுதியான கிறிஸ்தவ நெறிமுறை கொண்ட மருத்துவம் பற்றிய நடைமுறை அறிவைப் பெற்றேன். 2007-ல் கொச்சியிலுள்ள நமது இயக்க ஜெபக்குழுவினரோடு இணைந்து ஜார்க்கண்டிற்குப் பணித்தள விஜயம் செய்தபோது, ஒரு 7 மாத கர்ப்பிணி பெண் எங்களுக்கு தேநீர் பரிமாறினார். மறுவாரத்தில் அவர் மூளை மலேரியா காய்ச்சலினால் மரணமடைந்தார் என்ற செய்தி என்னைப் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. எனவே, நானும் எனது கணவரும்

ஜெபித்து ஒருவருடம் ஜார்க்கண்ட் சென்று ஊழியம் செய்ய வேண்டும் என்று தீர்மானித்தோம். ஆயினும், பற்பல காரணங்களினால் எனக்கு மால்தோ பகுதிக்குச் செல்ல விருப்பமில்லாததால் அது 2013 வரை தாமதமானது. அக்கட்டத்தில் தேவன் என்னோடு தெளிவாகப் பேசியதால், அவரது அழைப்பிற்கு ஆம், என்று சொல்லி ஆயத்தப்பட தொடங்கினேன்.





**கேள்வி:** நீங்கள் தீர்மானித்தவுடன் ஊழியத்திற்கு வர முடிந்ததா? அதற்கு எப்படிப்பட்ட சவால்கள் உங்கள் முன் இருந்தன?

**Dr. Mrs. வில்செட் கிறிஸ்:** இல்லை. உடனே வர முடியாத சூழ்நிலையே எனக்கு இருந்தது. ஏனெனில், எங்களது மகனின் படிப்பு, அவன் தங்குவதற்கான விடுதி வாய்ப்புகளைக் கண்டுபிடிப்பது, மற்றும் எங்களைத் தனிமையில் கஷ்டப்பட்டு வளர்த்த எனது பெலவீனமான முதிர்வயது தாயார் ஆகியன யாவும் பெரும் சவாலாக நின்றன. மார்ச் 2014-ல் நான் எனது வேலையை ராஜினாமா செய்துவிட்டு, 2 வருடங்கள் கர்த்தருடைய சமுகத்தில் காத்திருந்தேன். பின்பு மார்ச் 2016-ல் நான் ஊழியத்திற்குச் செல்வதற்கான வாசல்கள் திறந்தன. ஆகவே, 2016 ஜூலையில் FMPB-ல் இணைந்து பணியாற்ற ஆரம்பித்தேன்.

**கேள்வி:** நீங்கள் ஜார்க்கண்டில் பார்க்கும் இம்மக்களின் நிலை என்னவாக இருக்கிறது?

**Dr. Mrs. வில்செட் கிறிஸ்:** இங்கு அநேக போலியான நபர்கள் இம்மக்களின் ஏழ்மையையும், அறியாமையையும் நன்குப் பயன்படுத்தி, தவறான முறையில் பணம் சம்பாதித்துக் கொண்டிருக்கின்றனர். போதிய மருத்துவமனை மற்றும் சாலை வசதிகள் இல்லாத மலைப்பாங்கான பகுதிகளில் மால்தோ மக்கள் வாழ்ந்து வருகின்ற காரணங்களால் மந்திரவாதிகள் மற்றும் கை மருந்துகளை நம்பி அம்மக்கள் வாழ்வதோடு, சுகவீன மானவர்களைச் சிகிச்சைக்காக மருத்துவமனைகளுக்குப் பல மைல் தூரங்கள் சுமந்துச் செல்லும் அவலநிலைகளும் இருக்கின்றன. சாதாரணமாக நமது மருத்துவமனை இருக்கும் இடத்திற்கு மக்கள் நடந்து வர 2 (அ) 3 மணி நேரங்களாகும். அவ்வாறு வர இயலாத பிற நேரங்களில் விசுவாசிகள் தேவனை நம்பி ஊக்கமாக ஜெபித்து தங்கள் பெலவீனங்களிலிருந்து சுகம் பெறுவதுமுண்டு. இவ்வாறு அவர்கள் மத்தியில் நாங்கள் பணியாற்ற ஆரம்பித்தப்பின் பல அற்புதங்கள் நிகழ்வதைக் காண்கிறோம்.

**கேள்வி:** அண்ணன், உங்கள் இரட்சிப்பின் அனுபவம் மற்றும் ஊழிய அழைப்பைப் பற்றி கூற முடியுமா?

**Dr. D. தாமஸ்:** நான் 12-ம் வகுப்புப் படிக்கும்போது, சகோ. அகஸ்டின் ஜெபக் குமாருடைய செய்தியின் மூலம் இரட்சிக்கப்பட்டேன். எனது பொறியியல் பட்டப்படிப்பிற்குப் பின் கொச்சியிலுள்ள NPOL, பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனத்தில் எனக்கு வேலை கிடைத்தது. நான் அங்குள்ள சபையின் வாலிபர் ஊழியங்களில் ஈடுபாடு கொண்டேன். பின் திருமணமாகி குடும்பமாக நாங்கள் அங்குள்ள FMPB எர்ணாகுளம்

விரிவுப்பணி பிரிவு ஊழியங்களிலும் ஈடுபட்டு, ஜெபக்குழுக்களை ஆரம்பித்து, ஊழியங்களைக் குறித்து நண்பர்கள் மற்றும் சபைகளில் தமிழ் மற்றும் மலையாள மக்களுக்கு அறிமுகம் செய்துவந்தோம். என் மனைவி 2016-ல் ஜார்க்கண்டிற்குச் சென்ற பின், நான் கொச்சியில் இருந்தபடியே பல உதவிகளை அவர்களுக்குச் செய்து வந்தேன். 2021-ல் என் பணியிலிருந்து விருப்பு ஓய்வு பெற்று, ஜார்க்கண்டிற்குச் சென்று என் மனைவியுடன் இணைந்து தற்போது தேவப்பணியைச் செய்துவருகிறேன்.

**கேள்வி:** இங்கு ஜார்க்கண்டில் இப்போது உங்களது பணி எப்படி இருக்கிறது?

**Dr. Mrs. வில்செட் கிறிஸ்:** ஆரம்பத்தில் நாங்கள் 3 கிராமப்புற சிகிச்சையகங்கள் மற்றும் அடிப்படை வசதிகொண்ட ஒரு மருத்துவமனையுடன் ஒரு ஓட்டுனர் மற்றும் 2 SSLC படித்த பெண்பிள்ளைகளைக் கொண்டு வாராந்திர அளவில் எங்கள் பணியைத் தொடங்கினோம். பின்பு தேவன் மெதுவாக மக்களை எங்களுடன் சேர்த்தார். ஒவ்வொரு ஆண்டும் சுமார் 10,000 முதல் 12,000 வெளி நோயாளிகளுக்கும், 200 முதல் 300 உள் நோயாளிகளுக்கும் சிகிச்சை அளிக்கிறோம். அநேக மக்கள் சுகம்பெற்று ஆறுதலடைந்து, தங்களது விசுவாசத்தில் பலப்படுத்தப்பட்டதின் விளைவாக தேவ நாமம் மகிமைப்பட்டது. 2020-ல் FMPB 10 படுக்கைகள், ஒரு பிரசவ அறை மற்றும் ஒரு அறுவை சிகிச்சை அறை கொண்ட மருத்துவமனையைத் திறந்தது.

**கேள்வி:** உங்களது அவசர தேவை என்ன?

**Dr. Mrs. வில்செட் கிறிஸ்:** இங்கு பல நோய்களுடன்கூடிய மகப்பேறு மரணமும் அதிகமாய்க் காணப்படுகிறது. எனவே, ஆவிக்குரிய அணுகுமுறை கொண்ட நல்ல திறமை யான மருத்துவப் பணியாளர்கள் தேவை. நாம் பாகூர், கொட்டா, சாஹிப்கஞ்ச் ஆகிய 3 மாவட்டங்களிலுள்ள 600 மால்தோ கிராமங்களையும், 8 லட்ச சந்தால் இன மக்களையும் சுவிசேஷத்தினால் சந்தித்துள்ளோம். நம் தேவனைச் சந்திப்பதற்கு ஒரு கூட்ட மக்களை ஆயத்தப்படுத்த, இந்திய தேச முழுவதிலுமிருந்து அதிகமான மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் துணை மருத்துவக்கல்வி பயின்றோர் இன்று அவசியம் தேவை. இப்பணி தொழில் ரீதியான ஊக்கத்தைவிட முழுமையான சுகத்தை இம்மக்களுக்குக் கொடுக்க வேண்டு மென்ற நல்லாவிக்குரிய உந்துதலைத் தரக்கூடிய பணியாகும். அதாவது, எவரும் நித்திய வாழ்வை இழந்து விடக்கூடாது என்ற கரிசனை நம்மை அவர்களுக்குச் சுவிசேஷம் அறிவிக்க தூண்டுவது போல இம்மக்கள் படும் துன்பம் நாம் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய பராமரிப்பைக் கொடுப்பதற்கும் நம்மைத் தூண்ட வேண்டும்.

**கேள்வி:** இவர்கள் மத்தியில் பணி செய்வதை நீங்கள் எவ்வாறு உணருகிறீர்கள்?

**Dr. Mrs. வில்செட் கிறிஸ்:** "கடினமான பாதையில் தேவனோடு நடப்பது, அதிலும் சிறியோரும் இழந்தோரும் ஆறுதலடைவதையும், சுகமடைவதையும், அவர்களது வாழ்க்கை மீண்டும் தங்களின் இரட்சகரிடம் திரும்புவதையும் காணும்போது அதிக மகிழ்ச்சியாக இருக்கிறது."

*இந்த நேர்காணல் பல இளைய உள்ளங்கள் மத்தியில் கிரியை செய்யும் என கர்த்தருக்குள் நம்புகிறோம். இவர்களது மகன் திரு. ஹட்சன் சாமுவேல் B.Tech., படிப்பை தற்போது I.I.T. புவனேஸ்வரில் படித்து முடித்திருக்கிறார். இக்குடும்பத்தை நமது அனுதின ஜெபத்தில் தாங்குவோம்.*

# பெரியமலை தினம் 2023




கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான ஜெபப் பங்காளர்களே!

நமது இயக்கத்தின் தாரக மந்திரமாகிய 'போ அல்லது அனுப்பு' என்ற நோக்கத்தை 'சென்றும் அனுப்பியும்' தாங்கி வருகின்ற உங்கள் அனைவரின் பங்களிப்பிற்காக கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக! சந்திக்கப்படாத இந்தியர்களை நாம் இந்தியர்களாய் சுவிசேஷத்தினால் சந்திப்பதற்காக தேவன் வழிநடத்தி உருவாக்கிய இயக்கம் தான், நமது நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு இயக்கம். இவ்வியக்கத்தின் அடித்தளம், நமது முதல் பணித்தளம் பெரியமலை. ஒவ்வொரு வருடமும் ஜூன் 9-ம் நாளை பெரியமலை தினமாக நாம் அனுசரித்து தேவனுக்கு நன்றி கூறி, அவர் நம்மை வழிநடத்திய அருமையான, அற்புதமான செயல் திட்டங்களையும், அதின் நிறைவுகளையும் நினைவுகூர்ந்து கொண்டாடுகின்றோம். இதற்கு 1967-ல் இயேசுவை ஒருமுறைகூட அறிந்திராத மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்பட்ட நமது தர்மபுரி மாவட்டம், பெரியமலையில் தொடங்கிய சுவிசேஷ ஊழியம் தான், முக்கிய காரணம். இன்று இந்த ஊழியம் நமது பாரதத்தின் 24 மாநிலங்களில் பரந்து விரிந்துள்ளது.

"அற்பமான ஆரம்பத்தை யாரால் அசட்டை பண்ணக்கூடும்?" என்பதற்கிணங்க இன்று 56 ஆண்டுகள் நிறைவு பெற்று 45 திருச்சபைகளுடன் தேன்கனிக்கோட்டை பிராந்தியமாகத் திகழ்கின்றது, இந்தப் பகுதி. நாம் இடைவிடாமல் ஆராதிக்கும் தேவன் ஏராளமான அற்புதங்கள், அதிசயங்கள், விடுதலைகளை ஈந்து அநேகருடைய அறிவுக்கண்களைத் திறந்து, தமது விசுவாசிகளை நிறைவான, செழிப்பான சமுதாயத்தில் நல்ல அங்கீகாரத்துடன் வாழ்ந்துவரும்படி உயர்த்தி இருக்கிறார். அநேகர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டது மட்டுமின்றி, நான்கு தலைமுறையினராக அவர்கள் கிறிஸ்துவைத் தங்களது தெய்வமாக தமது பகுதிகளில் சாட்சிகளாக வாழ்ந்து அறிவித்து கொண்டிருக்கிறார்கள். நமது பெரியமலை பகுதியைச் சார்ந்த 27-க்கும் அதிகமான வாலிபப்பிள்ளைகள் ஆண்களும் பெண்களும் வட இந்திய ஊழியங்களில் நமது இயக்கத்திலும், பிற ஊழிய இயக்கங்களிலும் இணைந்து தேவனுக்காய் பணிசெய்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் 40-க்கும் மேற்பட்டவர்கள் சுதேச ஊழியர்களாக இன்றும் நம்முடன் பணிசெய்து கொண்டிருக்கிறார்கள். தற்பொழுது தமிழ்நாடு மண்டலம் மூன்று பிராந்தியங்களாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. பெட்டமுகிலாளம் என்ற இடத்தில் கட்டப்பட்டுள்ள நமது ஆலயத்தில் பெரியமலை ஊழியரின் மூலம் தவறாமல் ஆராதனைகள் நடைபெற்று வருகின்றன. நமது ஜெபக்குழு அங்கத்தினர்களும் இங்கே கூடி ஜெபிக்கின்றனர். மூன்று பிராந்தியங்களின் கூடுகைகள், பயிற்சிகள் முறையாக நடைபெற்று வருகின்றன.

2030-க்குள்ளாக 4,40,000 பேருக்குச் சுவிசேஷம் அறிவிக்கவும், 880 கிராமங்களில் புதிதாகச் சுவிசேஷம் பறைசாற்றப்படவும், 88 ஆராதனைக்குழுக்கள், 44 திருச்சபைகள், 22 சுதேச மற்றும் 22 முழுநேர ஊழியர்களை உருவாக்கவும், 4,400 பேரை விசுவாச மந்தைக்குள் சேர்க்கவும் திட்டமிட்டுள்ளோம். இதற்காக தாங்கள் ஏறெடுக்கின்ற ஜெபங்களுக்காக நன்றி கூறுகிறோம்.

*"... நாம் தேசத்தில் பலுகும்படிக்கு, இப்பொழுது கர்த்தர் நமக்கு இடம் உண்டாக்கினார் என்று சொல்லி, அதற்கு ரெகொபோத் என்று பேரிட்டான்." - ஆதி.26:22*

**- அருட்திரு. T. ஆல்பின்,** தமிழ்நாடு மண்டலச் செயலர்.

# நிலத்திலே விழுந்த கோதுமை மணி!



**திரு. K. தியாகராஜன்**
(1944 - 2023)

திரு. K. தியாகராஜன் அவர்கள் நமது இயக்கத்தின் ஓய்வுப்பெற்ற மிஷனரி ஆவார். இவர் கிறிஸ்துவை அறியாத சிவகாசியைச் சார்ந்த திரு. கந்தசாமி & திருமதி. மேரி அம்மாள் தம்பதியருக்கு மகனாக 10.05.1944-ல் பிறந்தார். இவருடைய தந்தை செகந்திராபாத்தில் தங்கி, இந்திய விமானப்படைத்துறையில் பணிபுரிந்தவர். திரு. தியாகராஜன் தனது SSLC மற்றும் டிப்ளமோவில் மெக்கானிக்கல் பொறியாளர் படிப்பையும் நிறைவு செய்தபோது, இவருடைய தந்தை இவரை இந்திய விமானப்படைத்துறையில் வேலைக்குச் சேர ஊக்கப்படுத்தினார். எனவே, 1964-ல் இவர் அவ்வேலையில் சேர்ந்தார். அப்பணிக்கான பயிற்சி தாம்பரத்தில் வைத்து நடந்தபோது, லேமென் இவாஞ்சலிக்கல் ஃபல்லோஷிப் நடத்திய சுவிசேஷ கூட்டமொன்றில் பங்கேற்கும் வாய்ப்பு இவருக்குக் கிட்டியது. கிறிஸ்துவை அறியாதவராக அக்கூட்டத்திற்குச் சென்ற இவர் அங்கிருந்து திரும்பிவரும்போது கிறிஸ்துவைப் பின்பற்றுபவராக திரும்பிவந்தார். அக்கூட்டத்தில் இவர் இரட்சிக்கப்பட்டு, தேவப்பிள்ளையானார். பின்பு பெந்தெகொஸ்தே மிஷன் (CPM) சபைக்குச் சென்று, கிறிஸ்துவில் நன்கு வளரலானார்.

பின்பு ஆந்திரப்பிரதேசத்திலுள்ள கலிகுண்டா என்ற இடத்தில் விமானப்படை வேலைக்கென்று நியமிக்கப்பட்டார். அங்கே கிறிஸ்தவ ஐக்கியத்திற்கு வாய்ப்பில்லாததால், இவர் கிறிஸ்துவை விட்டு தூரம் சென்றார். இவ்வாறு காலம் கடந்து செல்ல 1965, ஆகஸ்டு 16-ம் தேதியன்று தேவன் இவரோடு தனிப்பட்ட விதத்தில் இடைப்பட்டதினிமித்தம் இவர் தனது பாவங்களை அறிக்கையிட்டு, கிறிஸ்துவில் புதுவாழ்வு பெற்றார். பின்னர் வேதாகம வகுப்புக்குழுவில் இணைந்து, தன்னுடன் பணிபுரியும் சக ஊழியர்களுக்கு இவர் சுவிசேஷத்தை அறிவித்ததோடு, தனது தாயாரையும் கிறிஸ்துவுக்குள் வழிநடத்தினார். இவ்வாறாக 18 வருடங்கள் விமானப்படைத் துறையில் பணியாற்றினார்.

திரு. தியாகராஜன், கிறிஸ்துவை இரட்சகராகப் பின்பற்றி வந்த கல்லூரிப் பட்டதாரியான சகோதரி. ஜெயகுமாரியை 21.07.1975-ல் திருமணம் செய்தார். தேவன் இவர்களது திருமண வாழ்வை ஆசீர்வதித்து, 17.01.1977-ல் ஜெரேமி ஜெபராஜ் என்ற மகனைக் கொடுத்தார்.

இந்நாட்களில் திரு. தியாகராஜன் நமது இயக்கத்தைக் குறித்து கேள்விப்பட்டு, ஜெபக்குழுக்களிலும் மற்றும் பிற அனைத்து மிஷனரி சவால் நிறைந்த கூட்டங்களிலும் பங்கேற்றார். இத்தகைய கூட்டமொன்றில் தேவன் இவரைத் தமது பணிக்கென அழைக்க, இவர் தன்னை முழுநேர ஊழியத்திற்கென அர்ப்பணித்தார். பின்பு முழுநேர ஊழியராக 1984, ஜூன் மாதத்தில் குடும்பமாக நமது இயக்கத்தில் இணைந்து, திரு. P. ஹேமச்சந்திரன் அவர்களோடு ஹைதராபாத்தில் விரிவுப்பணி பிரிவில் சேர்ந்து பணி செய்தார். பின் சிறிதுகாலம் கழித்து 1991-ல் மும்பை விரிவுப்பணியில் செயலாற்றினார். பின்னர் விரிவுப்பணி ஊழியத்திலேயே நன்கு பணியாற்றி 2009, மே 31-ம் தேதி பணி ஓய்வு பெற்றார். மும்பை விரிவுப்பணி ஊழியத்தில் மிகச் சிறப்பாக பங்காற்றிய திரு. K. தியாகராஜன் அவர்கள், தனது 79-ம் வயதில் 2023, மே 2-ம் தேதியன்று கர்த்தருடைய மகிமைக்குள் பிரவேசித்தார். அவருடைய நற்சாட்சியுள்ள வாழ்விற்காக கர்த்தரைத் துதிக்கின்றோம். அவருடைய மனைவி மற்றும் மகன் குடும்பத்தாரின் மனஆறுதலுக்காக ஜெபிப்போம்.

**– அருட்திரு. அறிவர். E. ராஜன்**



# பணித்தள விஜயம்

சென்னை - அடையாறு பிராந்தியத்திலிருந்து 12 பேர் அடங்கிய குழுவாக 20.02.2023 அன்று புறப்பட்டு சத்தீஸ்கர் மற்றும் ஒடிசா மாநிலங்களிலுள்ள பணித்தளங்களைப் பார்வையிட சென்றோம். பின்பு சத்தீஸ்கரிலுள்ள நமது மிஷனரிகளின் இனிய வரவேற்புடன் அங்குள்ள பணித்தளங்கள் மற்றும் சிறுவர் விடுதிகளைப் பார்வையிட்டோம். பின்பு ஒராவன் மக்கள் மத்தியில் நடைபெறும் ஊழியத்தில் பங்கேற்றோம். அதன்பின் லுடேகிலுள்ள திருச்சபை மற்றும் விடுதியைப் பார்த்துவிட்டு, அங்குள்ள மக்களின் சாட்சி பகர்வுகளைக் கேட்டு, நாங்களும் எங்கள் சாட்சிகளை தேவ நாமம் மகிமைப்படும்படி பகர்ந்து கொண்டோம். பின்னர் ஒடிசா மாநிலத்திற்குச் சென்று, நமது மிஷனரிகளின் உதவியோடு அங்குள்ள பல விடுதிகள் மற்றும் பணித்தளங்களைப் பார்வையிட்டோம். பின்பு ஞாயிறு காலை டுல்கியாடா சபை ஆராதனையில் கலந்து கொண்டு, அங்கு பூசாரியாக இருந்து இரட்சிக்கப்பட்ட சபை மூப்பரையும், முக்கிய கட்சித் தொண்டராக இருந்து இரட்சிக்கப்பட்ட சபை ஊழியரையும் சந்தித்தோம். பின்னர் அங்குள்ள மிஷனரிகள் மற்றும் விசுவாசிகளோடு சேர்ந்து நமது விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர்களுக்காகவும், வியாதியஸ்தர்களுக்காகவும் ஜெபித்து விட்டு, மிகுந்த ஊழிய பாரத்துடனும் அர்ப்பணிப்புடனும் ஊர் திரும்பினோம்.

# மிஷனரிப் பிரதிஷ்டை



2023, பிப்ரவரி 26-ம் தேதி சின்னாலப்பட்டி சி.எஸ்.ஐ. தூய பேதுரு ஆலயத்தில் வைத்து நடைபெற்ற மிஷனரிப் பிரதிஷ்டை சிறப்பு ஆராதனையில் மதுரை-திருமங்கலம் திரு. மைக்கேல் அப்போலோ & திரு. எட்வின் ஜான்சன் (து/பெ) குடும்பத்தினர் சார்பாக நமது மிஷனரி திருமதி. பாரதி மூர்த்தி (பிம்பள்நேர், மகாராஷ்டிரா), போதகர்கள் அருட்திரு. ஜெயசிங் ஜான்சன் திரவியம், அருட்திரு. டேனியல் ரவி, அருட்திரு. ஜான் ஜாஸ்வா, அருட்திரு. எபினேசர், அருட்திரு. ரோஜர் தேவ், அருட்திரு. ஆல்பர்ட் சாமுவேல் ஆகியோரால் பிரதிஷ்டை செய்யப்பட்டார். இக்கூடுகையை திரு. அமிர்தராஜ், திரு. விக்டர் ஞானராஜ் ஆகியோர் சிறப்பாக ஒழுங்குச் செய்திருந்தர்கள். தேவனுக்கே மகிமை!

மறக்க முடியாத
# மாமனிதர்கள்



## திருமதி. விமலா ஜான் ஸ்டீபன்
(1969- 2015)

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் 19 ஆண்டுகள் மிஷனரியாக ஊழியம் செய்த திருமதி. விமலா ஜான் ஸ்டீபன் (வயது-46), இரத்தத்தில் ஏற்பட்ட நோய்த் தாக்குதலின் காரணமாக விஜயவாடாவிலுள்ள மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுவந்தபோது 21.08.2015 அன்று கர்த்தருக்குள் மரித்தார்.

### இளமைப்பருவம்

சகோதரி. விமலா, விஜயவாடாவைச் சேர்ந்த கிறிஸ்தவப் பெற்றோரான திரு. லாசரஸ் & திருமதி. புஷ்பராஜம் தம்பதி யரின் மூத்த மகளாக 24.10.1969-ல் பிறந்தார். இவருக்கு இரு சகோதரர்களும், இரு சகோதரிகளும் உள்ளனர். இவருடைய தாய் திருமதி. புஷ்பராஜம் ஆண்டவரை ஏற்றுக்கொண்டவர். நன்றாக ஜெபிக்கக் கூடியவர். தன் பிள்ளைகளையும் அவ்விதமே வளர்க்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டார். சகோதரி. விமலா பள்ளியில் படித்துக்கொண்டிருக்கும்போது, கிறிஸ்துவை அறியாத அநேக இளம் பெண்களின் நட்பு இவரை ஆண்டவருக்குப் பிடிக்காத தவறான வாழ்க்கைக்கு அழைத்துச் சென்றது. தன் மகளின் வாழ்வில் கண்ட காரியங்களைக் குறித்து இவருடைய தாய் இவரோடு பேசி வேதம் வாசிக்க, ஜெபிக்க வற்புறுத்தி வந்தார். இது இவருக்கு அதிகக் கஷ்டமாக இருந்ததால், 'ஏன், எனது தாயார் என்னை இப்படி சித்திரவதை செய்கிறார்கள்?' என தனக்குள் யோசித்து வந்தார்.

### இரட்சிப்பின் அனுபவம்

இவர் பள்ளியில் படித்துக்கொணடிருக்கும் போது ஒருமுறை குடற்புண் காய்ச்சலினால் துயருற்றார். அந்த நோயின் தாக்கத்தால் ஆண்டவரை நோக்கி ஜெபிக்க ஆரம்பித்தார். தன் தாயின் அறிவுரைகளைத் தட்டிக்கழித்த இவர் ஆண்டவரை நோக்கிக் கூப்பிடுவது மட்டுமல்லாது, ''ஆண்டவரே, என் பாவங்களை மன்னித்து, உம்முடைய பிள்ளையாக என்னை மாற்றும்!'' எனவும் ஜெபித்தார். இவ்வாறு தாயாரின் உற்சாகமூட்டலால் இவர் செப்டம்பர் 17-ம் தேதி 1989-ல் இயேசுகிறிஸ்துவைத் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு கர்த்தருடன் தனிப்பட்ட உறவை வளர்த்தார். பின் தன் தாயைப்போலவே வேதம் வாசிக்க ஜெபிக்க ஆரம்பித்தார். அனுதினமும் காலை 5 மணி முதல் 6 மணி வரை தனியாக ஜெபித்து வந்தார். வேதம் வாசித்து அதை தியானம் செய்த பிறகே மற்ற வேலைக்குத் தயாராவார். அதே போன்று மாலையிலும் வேதம் வாசித்து ஜெபிக்கலானார். இப்படி ஆண்டவரோடு கொண்டிருந்த உறவின் வாயிலாக கிறிஸ்துவில் வளர்ந்து வந்தார். தன்னுடைய பள்ளி வாழ்க்கையில் ஆண்டவரை ஏற்றுக்கொண்ட இவர், கல்லூரியில் இணைந்து பி.காம்., பட்டப்படிப்பு படித்தார். திருச்சபையின் ஊழியங்களிலும் தவறாமல் பங்கேற்று வந்தார். அநேக கல்லூரி மாணவிகளோடு ஆண்டவரின் அன்பைப் பகிர்ந்து கொண்டதோடு, வாலிபப் பெண்களாகக் கூடி ஜெபிக்கவும் ஆரம்பித்தனர்.

## ஊழிய அழைப்பு

தாயார் திருமதி. புஷ்பராஜம், தனக்கு விமலா முதல் பிள்ளையாக இருந்தபடியால் அவரை ஊழியத்திற்கென அர்ப்பணித்திருந்தார்கள். சகோதரி. விமலா தான் பங்கேற்ற ஒரு மிஷனரிக்கூடுகையில் தேவனுடைய அழைப்பைப் பெற்றார். ஆந்திரா மாநிலத்தில் தேவப்பணி செய்ய ஆயிரமாயிரமான மக்கள் உள்ளனர். ஆனால், வட இந்தியாவில் ஆண்டவரை அறிவிக்க ஆள் இல்லையே என்ற ஏக்கம் அதிகமாக இவரை உந்தித் தள்ளியது. இவ்விதமாக கர்த்தரின் ஊழிய அழைப்பைப் பெற்ற இவர், தன்னை முழுநேரப்பணிக்கு அர்ப்பணித்து ஏதாவது ஒரு மிஷனரி இயக்கம் மூலம் மிஷனரியாகச் செல்ல வேண்டுமென தீர்மானித்தார். இவருடைய தாயாரும் அதை உற்சாகப்படுத்தி தன் மகள் ஒரு மிஷனரியாகச் செல்வது தனக்குக் கிடைத்த பாக்கியம் என்று மகிழ்ச்சியாக இருந்தார். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியங்களையும், அதில் பணிபுரியும் மிஷனரிகளின் பகிர்ந்து கொள்ளுதலையும் கேட்ட சகோதரி. விமலா, இந்த இயக்கத்தில் சேர முடிவு செய்து விண்ணப்பம் செய்தார். இவர் கல்லூரியில் பட்டப்படிப்பை முடித்து இரட்சிக்கப்பட்டவராய் இருந்தபடியால், உடனே நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்பட்டு மிஷனரியாகத் தேர்வு செய்யப்பட்டார். அதன் பின் 24.06.1996-ல் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் இணைந்தார். உத்தரப்பிரதேசத்திலுள்ள ஜான்சியில் தன்னுடைய ஓராண்டு மிஷனரிப்பயிற்சியை முடித்தார். மிகவும் எளிமையான தோற்றமுடைய இவர் பழகுவதற்கு இனிமையானவர். மிக அமைதியாகச் சிரித்த முகத்துடன் எப்போதும் காணப்படுவார். நன்றாகப் பாடவும் செய்வார்.

## திருமண வாழ்க்கை

வெற்றிகரமாகப் பயிற்சியை முடித்த இவரை உத்தரப்பிரதேசத்திலுள்ள கோண்டா என்ற பணித்தளத்திற்கு அனுப்பினார்கள். கோண்டாவில் தன் முதல் ஊழியத்தைத் தொடர்ந்தார். அங்கு ஊழியம் செய்து கொண்டிருக்கும்போதே பெற்றோருடைய முயற்சியினால் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஆந்திரா மாநிலத்தைச் சார்ந்த மிஷனரியான திரு. ஜான் ஸ்டீபனுடன் திருமணம் செய்ய அனைத்து ஏற்பாடுகளும் நடைபெற்றன. திரு. ஜான் ஸ்டீபனுடன் சகோதரி. விமலாவிற்கு 22.12.1997 அன்று திருமணம் நடைபெற்றது.

பின்னர் இவர்களைக் குடும்பமாக ஜார்க்கண்ட் மாநிலத்திலுள்ள பர்ஹர்வா என்ற பணித்தளத்திற்கு அனுப்பினார்கள். சிறிது காலம் மால்தோ மக்கள் மத்தியில் பணியாற்றிய இவர்கள், பின்பு உத்தரப் பிரதேசத்திலுள்ள பஸ்தி பணித்தளத்தில் பணியாற்றி, பின்னர் ஜான்சி பிராந்திய அலுவலகத்திற்கு மாற்றுதலாகி அங்கே பணியாற்றி வந்தனர். திருமதி. விமலா வின் சுகவீனத்தினிமித்தம் ஆந்திரா மாநிலத்திலுள்ள சித்தூர் முன்னேற்றப்பணி இவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. கர்த்தர் இவர்களுக்கு இரு பெண் குழந்தைகளைக் கொடுத்து ஆசீர்வதித்துள்ளார். மூத்த மகள் பிளஸ்ஸினா MBA., இரண்டாமாண்டு காருண்யாவிலும், இளைய மகள் ஐடா கிரேஸ் 12-ம் வகுப்பு ஆந்திராவிலும் படித்து வருகின்றனர்.

திருமதி. விமலா தனது சுகவீனத்தினிமித்தம் 2015 ஆகஸ்டு மாதம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அனைத்து வகையான மருத்துவ உதவிகள் கொடுக்கப்பட்டும் பலனில்லாமல் 2015, ஆகஸ்டு 21-ம் தேதி கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அவரது உடல், உயிர்த்தெழுதலின் நம்பிக்கையோடே 22.08.2015 அன்று விஜயவாடாவில் நல்லடக்கம் செய்யப்பட்டது. குறைந்த வயதில் அவருடைய நிறைந்த சாட்சியுள்ள வாழ்விற்காக தேவனைத் துதிப்போம்.

***– அருட்திரு. அறிவர். E. ராஜன்***

# ஆலயப் பிரதிஷ்டை



ஜார்க்கண்ட், ராஜ்மஹால் பிராந்தியம், பர்ஹர்வா பணித்தளத்திலுள்ள ஜோட்டா ஜரசா பகாட் கிராமத்தில் நமது இயக்கத்தின் சார்பாக கோவில்பட்டி – திரு. S. அனந்தப்பன் மற்றும் அவருடைய குடும்பத்தார் மூலம் ஓர் ஆலயம் கட்டப்பட்டுள்ளது. தூத்துக்குடி முன்னேற்றப்பணி செயலர் குடும்பம் மற்றும் நாங்கள் இருவரும் குடும்பமாகச் சென்று கட்டிமுடிக்கப்பட்ட அவ்வாலயத்தை 16.04.2023 ஞாயிறன்று தேவ நாம மகிமைக்காகப் பிரதிஷ்டை செய்துவர தேவன் கிருபை செய்தார். பின்பு பந்தேனியிலுள்ள நமது பள்ளி மற்றும் விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவ, மாணவியர்களைப் பார்த்து ஜெபித்துவிட்டு பாதுகாப்பாக ஊர் வந்து சேர்ந்தோம்.

## கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்



திரு. ராஜேந்திர மோசஸ் அவர்கள், பெருந்துறை தமிழ்நாடு மின்வாரிய துறையில் பணியாற்றியவர். இவர் நமது ஊழியர் அருட்திரு. இம்மானுவேல் ரஞ்சித்சிங் அவர்களின் தகப்பனார் திரு. அருள்சேகரன் அவர்கள் மூலமாக நமது ஊழியங்களைப் பற்றி அறிந்துகொண்டார். 1988-ல் முதுமலை பகுதி மஸனக்குடியில் பணியாற்றும்போது நமது ஊழியங்களைத் தாங்கவும், காணிக்கை கொடுக்கவும், பிற ஜெபக்குழுத்தலைவர்களிடமும் காணிக்கை விபரங்களைச் சேகரித்து அனுப்பவும் செய்தார். இவர் ஒரு சிறந்த ஜெபக்குழுத்தலைவராகவும், மிஷனரி ஆதரவாளராகவும் இருந்ததோடு, தனது ஓய்வு காலத்திலும் தான் முன்பு செய்துவந்த ஊழியத்தைத் தொடர்ந்து தன் இறுதி மூச்சுவரை செய்தார்; தனது 4 பிள்ளைகளையும் தேவ வழியில் வளர்த்ததோடு, மிஷனரி ஊழியர்களை ஆதரிக்கவும் கற்றுக்கொடுத்திருந்தார். இவரது மூத்த மகன் திரு. டேவிட் குமார் அவர்கள் திருப்பூரில் ஜெபக்குழுத்தலைவராக இருக்கிறார். திரு. ராஜேந்திர மோசஸ் அவர்கள், வயது மூப்பு மற்றும் சரீர பெலவீனத்தினிமித்தம் 26.02.2023 அன்று காலை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அவரது பிரிவால் வாடும் அவருடைய மனைவி, பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகளுக்கு தேவன் ஆறுதல் தர ஜெபிப்போம்.

### நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

தண்டையார்பேட்டை பணி மாவட்டம், வட சென்னை.

**பங்காளர் கூடுகை - 2023** நாள்: 11.06.2023, ஞாயிறு

நேரம்: மாலை 5.30 மணி இடம்: E.C.I. பள்ளி வளாகம்

**குறிப்பு:** *சிறுவர்களுக்கான தனிக்கூடுகை ஒழுங்குச் செய்யப்பட்டுள்ளது.*

ஜூன் 1
வியாழன்

## பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. சுகந்தி பெத்துவேல் பர்தன்
திருமதி. ஊர்மிளாபேன் ராம்சிங்பாய்
திரு. வசாவா பச்சியாபாய் பொஹ்னாபாய்
திரு. கமித் கம்லேஷ் சிங்கபாய்
திரு. போயா தேவுபாய் கங்காஜுபாய்
திருமதி. ரேச்சல் ஜாய்ஸ் பாபு புஷ்பராஜ்
திருமதி. கவித் ஜாமுபேன் தேவுபாய்
திருமதி. கிருத்தாஞ்சலி குணசந்திர பாய்க்
திரு. வசாவா சுனில் குமார்
திரு. வசாவா ரமேஷ்பாய் உல்சிங்
திரு. போர்சத் பாபுபாய் சீமான்பாய்
திருமதி. சௌமி ஆபிரகாம் தாமஸ்
திருமதி. பிரீத்திபாலா பிரதான் பிதுஷ்
திரு. ஹோசியல் நாயக்
திருமதி. கொன்கனி பாரதிபேன் திலீப்பாய்
திருமதி. ஜாதவ் சரஸ்வதிபெஹன் போர்சத்
திரு. வசாவா ஆஜுபாய் ராமுபாய்
திரு. போடார் அம்ருத்பாய் பச்சுபாய்
திரு. சுர்கார் ரமேஷ்பாய் ஜோஹுராம்பாய்
திருமதி. ஜெயந்தி கார்த்திகேயன்
திருமதி. லமானி ரத்னா மஞ்ஜ்யா நாயக்
திருமதி. ஜெலின் ஜெயபிரதா குமரன்
திரு. திம்மண்ணா @ தீமோத்தேயு
திருமதி. சுனந்தா குல்கர்னி ராஜா
திருமதி. மீனாக்கி பீரோ சுனில் தத்தகாரா
திரு. வசாவே அர்விந்த் காலுசிங்
திருமதி. தட்வி மனிஷா ஏல்முல்வார்
திருமதி. ஜெயராணி சுகின்லால்
திரு. பவார் தினேஷ் இந்தர்பாய்
திரு. கோண்ட் தேவு விஷ்ராம்
திருமதி. ராண்தே லக்ஷ்மிபேன் தேசாய்
திரு. ஸ்ரீனிவாசா V.
திரு. குமரன் G.
திரு. வினயராஜ் M.

# ஜம்மு

## நரோத்:

### ஜீவர் ஜோஸ்வா & ஷேத்ரிமயூம் பிரியா தேவி

**துதிக்க:** சுவிசேஷம் புதிதாக 8 கிராமங்களில் அறிவிக்கப்பட்டிருப்பதின் நிமித்தம் 1160 பேர் கிறிஸ்துவைக் குறித்து கேள்விப்பட்டுள்ளனர். அதில் 3 பேர் விசுவாசிகளாகி, கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். இப்பகுதியில் 14 சத்சங் கூடுகைகள் நடத்தப்பட்டுள்ளன. ஜமில்சாக் கிராமத்தில் புதிய ஆராதனைக் குழுவொன்று தொடங்கப்பட்டு, அதில் 3 குடும்பங்கள் வந்து கலந்து கொள்ள ஆரம்பித்துள்ளனர். நடக்க முடியாமல் இருந்த சிரேயாவின் 2 வயது குழந்தை ஜெபத்தின் மூலம் தற்போது நன்கு நடக்க ஆரம்பித்துள்ளது. தற்கொலை எண்ணங்களிலிருந்து பதார் மக்கள் மீட்கப்பட்டுள்ளனர். அதிக நாட்களாக நிலவிவந்த நிலப்பிரச்சினை தீர சங்சுவிற்கு நல்ல தேவ வழிநடத்துதல் கிடைத்துள்ளது. மகிமா தீய ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பல்வேறு சரீர பெலவீனங்களிலிருக்கும் பெரியவர்கள் பூரண சுகம் பெற; வச்சானி நீரிழிவு நோய்ப்பிரச்சினையிலிருந்தும், ராதா யூரிக் அமிலப்பிரச்சினையிலிருந்தும் முழு சுகமடைய; திருமணமாகி பல வருடங்களாக குழந்தை பாக்கியத்திற்குக் காத்திருக்கும் ரூபி, ரீனா வல்கோயி மற்றும் ஜமில்சாக் கிராம ரூபிக்காக; கிறிஸ்தவ எதிர்ப்பாளர் தீபக் மனந்திரும்ப; குடிப்பழக்கத்திற்கு ஆளாகியிருக்கும் நமது சபை வாலிபர்கள் அப்பழக்கத்திலிருந்து விடுபட ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. சோமாபாய் வலுபாய்
திரு. பிபாபா பானி, திரு. சுந்தர் துரை Y.
திரு. சுனில் பிரசாத் சிங்
திருமதி. விமலா பீட்டர் பிரபாகரன்
திருமதி. வசாவா சுனிதாபேன் உல்சிங்
திருமதி. சிவகாமி ஸ்டீபன்
திருமதி. நிஷா ஆனந்தன்
திருமதி. ஜோத்ஸ்னா ஜெரால்ட் சேவியர்

### சாம்பா: டேவிட் அய்யனார் & மன்பிரீத் கௌர்

**துதிக்க:** இயேசுவின் நற்செய்தி முதல் முறையாக 4 கிராமங்களில் பகரப் பட்டுள்ளதில், 850 பேர் கிறிஸ்துவைக் குறித்து அறிந்துள்ளனர். 22 வேதாகமங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. கட்லி கிராமத்திலுள்ள மக்கள் மகிழ்ச்சியோடு இயேசுவைத் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். சாக்மங்கா மற்றும் பொங்வால் கிராமங் களில் பெண்கள் ஜெபக்குழுக்கள் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன. பாரதிக்கு நல்ல தொரு வேலை கிடைத்துள்ளது. ஜொகிந்தர் பால் ஜெபத்தின் மூலம் கடும் ஒவ்வாமை பிரச்சினைகளிலிருந்து அற்புத சுக மடைந்துள்ளார். பிந்து தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து ஜெபத்தின் வல்லமை யால் முழு விடுதலை பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சம்ப், கூட்டாக், பொங்வால், சுங்வாலி மற்றும் அருகாமையிலுள்ள கிராமங்களில் நடைபெற்றுவரும் ஊழியங்கள் எவ்வித தடையுமின்றி நடைபெற; மஹாஷா மற்றும் ராஜ்புத் இனமக்களனைவரும் கிறிஸ்துவின் அன்பை ருசிக்க; குடுதேவி தீராத இருதயக்கோளாறிலிருந்தும், மஞ்சு டோக்ரா சிறுநீரகக்கல் பிரச்சினையிலிருந்தும் பூரண சுகமடைய; ராகேஷ், ரோஷன், தர்செம், ரூமி ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்து விடுபட; ராஜேந்தருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க; விசுவாசத்தை விட்டு வழிவிலகிச்செல்வோர் மீண்டும் கிறிஸ்துவண்டை வர; சம்ப் மற்றும் கூட்டாக் கிராமங்களில் ஆலயங்கள் கட்ட தகுந்த நிலங்கள் கிடைக்க ஜெபிப்போம்.

### ராம்கார்:
### ஜாண் எஸூங் & லிபெனி ஜமி

**துதிக்க:** இயேசுவின் நற்செய்தி புதிதாக 5 கிராமங்களில் எடுத்துரைக்கப்பட்டதில் 280 பேர் இயேசுவைத் குறித்து அறிந்திருக் கின்றனர். 9 புதிய ஏற்பாடுகள் மக்கள் பயன்பாட்டிற்கு தரப்பட்டுள்ளன. 2 ஆவிக் குரிய பயிற்சிக்கூடுகைகள் நடத்தப் பட்டுள்ளன. 7 வருட தொடர் ஜெபத்தின் பலனாக டோலேராவின் குடும்பத்தில் அழகிய பெண்குழந்தையொன்று பிறந்துள்ளது. பல சிரமங்களைத் தாண்டி சிறுபிள்ளைகளுக்கு வேதாகம வகுப்பு நடத்த சிறந்ததொரு இடம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தேடுவோர் முகாம் நிகழ்ச்சி மூலம் 2 பேர் தங்களது விசுவாசத்தை கிறிஸ்துவில் அறிக்கை செய்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பவன் பகத் குடிப்பழக்கத்திலிருந்து மீளவும், அவர் தனது பிள்ளைகளைச் சிறுவர் வேதாகம வகுப்புகளுக்கு அனுப்பி வைக்கவும்; குலாஷ் தோல் ஒவ்வாமை பிரச்சினையிலிருந்தும், ரஞ்சனின் மகள் அம்மைநோய்ப் பிரச்சினையிலிருந்தும், கமல்தீப் கௌர் முதுகு வலியிலிருந்தும் அற்புத சுகமடைய; சந்தோஷி மாந்திரீகப் பழக்கங்களிலிருந்தும், மன்தூரிபாய் இரவும் பகலும் அச்சமூட்டும் தீய ஆவிகளின் கொடிய அட்டகாசங்களிலிருந்தும் விடுதலையடைய; தங்களுக்கு எதிராக வரும் பிரச்சினைகள், எதிர்ப்புகளைக் கண்டு விசுவாசிகள் மனந்தளராமல் விசுவாசத்தில் உறுதியாக இருக்க; இந்நிதியாண்டின் ஊழிய இலக்குகளை ஊழியர்கள் எட்டிப்பிடிக்க ஜெபிப்போம்.

**ஜூன் 3 சனி**

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. குளோரி ராபர்ட் ராஜலிங்கம்
திரு. எட்வர்ட் சாம் T., திரு. வேடியப்பன் L.
திரு. பால் டேனியேல் V., திரு. விஜயகுமார் K.
திருமதி. ரஷ்மித்தா பரிடா வில்சன்
திருமதி. ஏசுமணி மயில்சாமி, திரு. பாலமுருகன் V.
திருமதி. ரூபா குமாரி பிரசாந்த்
திருமதி. அந்தோணி ராஜம் ஜெரோம்
திரு. ஆஷாபிராப்தா, திருமதி. வால்வி எஜூ காலுசிங்

# ஹிமாச்சலப் பிரதேசம்

## நேர்வா:

### S. இம்மானுவேல் & சங்கீதா ஜெசிந்தா

**துதிக்க:** முதல்முறையாக 4 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு, 430 பேர் அதன்மூலம் நற்செய்தியைக் கேட்டுள்ளனர். 3 புதிய விசுவாசிகள் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். ஒரு வேதாகமம் பகிரப்பட்டுள்ளது. 14 இரவுநேர ஜெபக் கூடுகைகளும், 2 சிறுவர் முகாம்களும் முறையாக நடத்தப்பட்டுள்ளன. அறுவை சிகிச்சை மூலம் கமலாவிற்கு சிறுநீரகக்கல் பிரச்சினை தீர்வுக்கு வந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஞாயிறு ஆராதனைகளின் முக்கியத்துவத்தை நன்குணர்ந்து நமது விசுவாசிகள் அதில் தவறாமல் பங்கேற்க; திட்டமிட்டுள்ளபடி வரும்நாட்களில் நடக்கவிருக்கும் ஆராதனையில் எவ்வித தடங்கலுமின்றி நமது விசுவாசிகள் தங்களது விசுவாசத்தை அறிக்கை செய்ய; சபைகளுக்குள் முரண்பட்ட கருத்துக்களோடு காணப்படுவோரின் இதயங்களில் நல் மாற்றங்கள் பிறக்க; போதைப்பொருட்களுக்கு அடிமையாகி இருப்போர் மனந்திரும்ப; சுவிசேஷம் பரவுவதற்கு இருக்கும் தடைகள் யாவும் மறைய; துணை மையங்களாக இருக்கும் அத்தல், பங்கல், பாரனு ஆகிய பகுதிகள் விரைவில் பணித்தளங்களாக மாற ஜெபிப்போம்.

## ரோஹ்ரு:

### ஜாண்சன் சங்கர் & ஜெபராணி

**துதிக்க:** சுவிசேஷம் 3 கிராமங்களில் புதிதாக அறிவிக்கப்பட்டுள்ளதை முன்னிட்டு 380 பேர் சுவிசேஷத்தைக் கேட்டுள்ளனர். ரனோல் கிராம விசுவாசி குட்டுவின் குடும்பம் தங்களது வீட்டை ஜெபக்கூட்டம் நடத்துவதற்குத் திறந்து கொடுத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தீய ஆவியின் தொந்தரவினால் அடிக்கடி பாதிப்பிற்குள்ளாகி பெலவீனமாயிருக்கும் நமது விசுவாசிகளான நர் பகதூர் மற்றும் பவி சுகமடைய; நமது சுதேச ஊழியரான சந்தீப்பிற்கு கால் நரம்பு பிரச்சினையிலிருந்து முழு சுகம் கிடைக்க; ரமேஷ், சன்னிலால், நமது சுதேச ஊழியர் பிரபா மற்றும் நமது விசுவாசி நிஷாவின் பெற்றோர்கள் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்க; ஜீனா, தினேஷ் மற்றும் அவரது தாயார் கிரமமாக ஆலய ஆராதனைகளில் வந்து கலந்துகொள்ள; ரனோல் திருச்சபையினருக்கு நல்லதொரு அர்ப்பணமுள்ள ஞாயிறுப்பள்ளி ஆசிரியர் கிடைக்க ஜெபிப்போம்.

## ஜூன் 4 ஞாயிறு

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. கராடோ பிஸ்வோ ரஞ்சன்
திருமதி. ஜெமிமா ஜெபராணி டேனியேல் டேவிட்
திரு. எபி ஞான செலின் S., திரு. ஜீவர் ஜோஸ்வா E.
திருமதி. வசாவா நிட்டா குமாரி ஆஜுபாய்

### கர்சோக்:

**பவன் குமார் & பிரபாஷினி தேவி**

**துதிக்க:** ஒரு கிராமத்தில் முதல்முறையாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளதில் 40 பேர் புதிதாக கிறிஸ்துவைக் குறித்து அறிந்துள்ளனர். 12 புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. அரசாங்க திட்டத்தின்படி அஞ்சலிக்கு நல்லதொரு வீடு கிடைத்துள்ளது. மரணத்தின் விளிம்பில் போராடிக்கொண்டிருந்த சப்னா ஜெபத்தின் மூலம் பூரண சுகமடைந்துள்ளார். இரு சக்கர வாகனத்திலிருந்து தவறி விழுந்த விபத்தினின்று நமது மிஷனரிகள் எவ்வித காயமுமின்றி காப்பாற்றப்பட்டுள்ளனர். இப்பணித்தளத்தைச் சார்ந்த டெக்சந்த் ஜெபத்தோடுகூடிய சிகிச்சையினால் விஷமருந்திய ஆபத்தின் தீய விளைவி னின்று அற்புதமாகக் காப்பாற்றப்பட்டி ருப்பதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஞாயிறுப்பள்ளி சிறுவர்கள் 10 பேர் இயேசுவை இரட்சகராக தனிப்பட்ட முறையில் அறிந்துகொள்ள; பிரஸ்து ஆலய ஆராதனைகளில் பழையபடி மீண்டும் வந்து பங்கேற்க; பசந்த்பூர் மற்றும் கர்சோகில் சிறிய ஆலயங்கள் கட்டப்பட; நல்ல அர்ப்பணமுள்ள உள்ளூர் சுதேச ஊழியர்கள் கிடைக்க; பசந்த்பூரில் முதியோர் கல்வித்திட்டம் தொடங்கப்பட; உள்ளுறுப்பு செயல்பாடு பாதிப்புகளினால் கஷ்டப்படும் 17 வயது வாலிபன் சாராபீத் அற்புத சுகமடைய; தொழிலினிமித்தமாக பல்வேறு பகுதிகளுக்கு இடம்பெயர்ந்துள்ள பல்யாத் கிராம நமது விசுவாசிகள் தங்களது விசுவாச வாழ்வில் எக்காரணம் கொண்டும் வழுவாமல் திடமாயிருக்க ஜெபிப்போம்.

### ஆனி:

**ஹின் சாவ்ம் & சிங் கோயி கிம்**

**துதிக்க:** சுவிசேஷம் 6 கிராமங்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ளதை முன்னிட்டு, 300 பேர் இயேசுவைக் குறித்து அறிந்துள்ளனர். 20 புதிய ஏற்பாடுகளும், 2 வேதாகமங்களும் பகிரப்பட்டுள்ளன. தான்பகதூரிலுள்ள நமது புதிய தொடர்பாளர் கடுமையான சுகவீனத்தி லிருந்து ஜெபத்தின் வழியாக சுகம் பெற்றுள்ளார். தேடுவோர் முகாமொன்றும், பெண்கள் முகாமொன்றும் சிறப்பாக நடத்தப்பட்டுள்ளன. 6 குடும்பங்களுக்கு ஆவிக்குரிய ஆலோசனைகள் கொடுக்கப்பட்டுள்ளன. 17 இரவுநேர ஜெபக்கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 10 பேர் தங்களது விசுவாசத்தை அறிக்கையிடும் வண்ணமாக நடத்தவுள்ள ஆராதனையொன்று எவ்வித தடையு மின்றி நன்கு நடந்துமுடிய; குடல் அறுவை சிகிச்சை மேற்கொள்ளவிருக்கும் மீனாவும், பித்தப்பை அறுவை சிகிச்சை மேற்கொள்ளவிருக்கும் கிருஷ்ணனும் விரைவில் இப்பெலவீனங்களிலிருந்து பூரண குணமடைய; தீய ஆவியின் பிடியிலிருந்து கமலாவின் குடும்பம் மீட்கப்பட; நமது புதிய தொடர்பாளர்களும், விசுவாசிகளும் தங்களது விசுவாசத்தில் உறுதியாக இருக்க ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. சாந்த குமார் சுதாகரன் B.
திரு. இப்ராயிம் மாலி, திரு. மயில்சாமி ஜோசப் T.
திருமதி. பியூலா சுலோச்சனா ஜாஷ்வா
திரு. சிவசங்கரன் @ ஜெபசீலன்
திரு. ஏல்முல்வார் சுவப்னில் ராமலு
திருமதி. ராம்புரம் பெடக்கா மேத்யூ
திரு. நரேந்திர குமார், திரு. சங்கர் A.

# பஞ்சாப்

## அஹ்மத்கட் மண்டி:

**சௌதரி ராஜேஷ் தவ்லேபாய் & சரிதா பால், தீப்திலால் மாலி & ரேணுமா**

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளதில் 620 பேர் இயேசுவைக் குறித்து கேள்விப்பட்டுள்ளனர். 15 புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. 5 புதியவர்கள் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கை செய்துள்ளனர். 2 சத்சங் நிகழ்ச்சிகள் சிறந்த முறையில் நடத்தப்பட்டுள்ளன. சரண்ஜீத் கௌர் கடும் மஞ்சள்காமாலை நோயிலிருந்து ஜெபத்தின்மூலம் பெற்றுள்ள சுகத்திற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இப்பணித்தளத்தைச் சார்ந்த பிரீத்தி கௌருக்கு அறுவை சிகிச்சை மூலம் கட்டி நீக்கப்பட்ட பின்பும், அவ்விடத்தில் காணப்படும் வலியிலிருந்து முழு நிவாரணம் கிடைக்க; தங்களுக்கு அருமையானவர்களை இழந்து தவிக்கும் கனிதா கௌர் மற்றும் சஞ்சய் குமாருக்கு மனஆறுதல் கிடைக்க; கடந்த 6 மாதங்களாக தீய ஆவிகளின் பிடியிலிருக்கும் ரிங்கு கௌர் மற்றும் ஜஷ்வீர் கௌருக்கு விரைவில் விடுதலை கிடைக்க; மேஜர் சிங் கல்லீரல் வீக்கத்திலிருந்தும், பிரிட்டோ கௌர் பித்தப்பை கல் பிரச்சினையிலிருந்தும், மன்பிரீத் கௌர் சர்க்கட்டி பிரச்சினையிலிருந்தும் மற்றும் அலோக் குமார் வலிப்பு நோயிலிருந்தும் பூரண சுகமடைய ஜெபிப்போம்.

## பர்னாலா:

**பிதன் ஹன்ஸ்தா & பன்சூரி மோஹ்லின்**

**துதிக்க:** இயேசுவின் நற்செய்தி புதிதாக 500 பேருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஒரு வேதாகமம் பகிரப்பட்டுள்ளது. ஊழியத்தில் உற்சாக ஈடுபாட்டைக் காண்பிக்கும் விசுவாசிகள் மற்றும் வாலிபர்களுக்கான பயிற்சிக்கூடுகைகள் வெற்றிகரமாக நடந்து முடிந்துள்ளன. சபை ஊழியச்செயல்பாடுகளில் நமது விசுவாசிகள் ஒற்றுமையுடன் செயல்பட்டு வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** திருமணமாகி 2 வருடங்களாகியிருக்கும் சுனில் & தியாவிற்கு குழந்தை பாக்கியம் கிடைக்க; ஜக்பால் சிங் காய்ச்சலிலிருந்தும், மிஸர் கௌர் 9 மாதங்களுக்கும் மேலாக இருக்கும் பக்கவாத கோளாறிலிருந்தும், போலி கௌர் காலிலுள்ள நோய்த்தொற்றிலிருந்தும் முழு சுகமடைய; தபால்துறை பணிக்கென தேர்வு செய்யப்பட்டிருக்கும் அமன்தீப் கௌர் அப்பணிக்கான பயிற்சியிலும் வெற்றி பெற ஜெபிப்போம்.

## ஜூன் 6 செவ்வாய்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. உதிப்த குமார் பாக்
திருமதி. ஷியாமளா ஷாமினி மேத்யூ
திருமதி. புஷ்பம் மகேந்திரன்
திருமதி. புக்யா ஜான்சிபாய்

### புத்லாடா பிராந்தியம்:
**கிருபா ரக்ஷனா பரே & ஷக்கினா**

**துதிக்க:** இங்குள்ள 18 கிராமங்களில் புதிதாக சுவிசேஷம் பறைசாற்றப் பட்டுள்ளதில், 5670 பேர் சத்திய வசனத்தைக் கேட்டுள்ளனர். 47 பேர் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கையிட்டுள்ளனர். தேவ கிருபையால் தற்போது இங்கே சுவிசேஷத்திற்கான வாசல்கள் திறக்கப் பட்டு நன்கு ஊழியங்கள் நடைபெற்று வருகின்றன. சிறுவர் விடுமுறை வேதாகமப்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சியொன்று நடைபெற்று முடிந்துள்ளது. இப்பயிற்சிக்கான புத்தகக் கையேடுகளை நமது மிஷனரி சகோதரிகளே சிறந்த முறையில் தயாரிக்க தேவன் காண்பித்துள்ள தயவிற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வருகிற மாதங்களுக்கான ஊழிய இலக்குகள் சந்திக்கப்பட; டேவிந்தர் கௌர் மூளை சம்பந்தமான பிரச்சினைகளிலிருந்து அற்புத சுகமடைய; லேஹ்ரகாகா பணித்தளத்தில் வைத்து நடைபெறவிருக்கும் 3 நாட்கள் ஆவிக்குரிய கூடுகைகளின் ஆசீர்வாதங்களுக்காக; அமர்ஜீத் கௌர், சஞ்ஜய் குமார் மற்றும் ஆர்த்தி கௌரின் குடும்பம் தங்களது விசுவாசத்தை கிறிஸ்துவில் வெளியரங்கமாக அறிக்கையிட; மிஸர் கௌரின் மகனுக்கு நல்ல வாழ்க்கைத்துணை அமைய ஜெபிப்போம்.

### மான்சா:
**தெப்ரத்தோ பிஸ்வாஸ் & மன்னா சிங்**

**துதிக்க:** தேவ வார்த்தையை 1050 புதியவர்கள் கேட்டுள்ளனர். அதில் 10 பேர் தேவ வார்த்தையை விசுவாசித்து கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். ஜூனிர் ஆலயக்கட்டுமானப்பணிக்கான தேவைகள் யாவும் சந்திக்கப்பட்டு, மேல்தளப்பணி வெற்றிகரமாக முடிவடைந்துள்ளது. கொட்டி பர்னாலா கிராமத்தில் சுவிசேஷ வாசல்கள் திறக்கப்பட்டுள்ளதோடு, அங்கே ஒரு சத்சங் கூடுகையும் நடத்தப்பட்டுள்ளது. சுவிசேஷத்தின்மீது நாட்டம் காட்டும் 20 புதிய தொடர்பாளர்கள் கிடைத்துள்ள தற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள சத்சங் கூடுகைகளில் அநேகர் பங்கேற்று அக்கூடுகைகள் வெற்றி கரமாக நடந்து முடிய; பல்வேறு வியாதிப்பிரச்சினைகளில் சிக்குண்டு இருக்கும் நமது விசுவாசிகள் ஜெபத்தின் மூலம் சுகமடைய; அநேக நாட்களாக தன்மீதிருக்கும் நீதிமன்ற வழக்கிலிருந்து விடுபட போராடிக் கொண்டிருக்கும் ஏழ்மையான நமது விசுவாசி சுர்ஜித் சிங்கிற்காக ஜெபிப்போம்.




### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. எலிசபெத் கருணாகரன்
திருமதி. டெய்ஸி இஸ்ரேல் டேனியல்
திருமதி. கமித் சாருபேன் கம்லேஷ்
செல்வி. ஆலிஸ் ஷீபா S.

### லேஹ்ரககா: ஐசக் ஆபேல் & அன்னா ரோஸ்லின்

**துதிக்க:** புதியவர்கள் 9 பேர் விசுவாசிகளாகி, கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் தஞ்சம் புகுந்துள்ளனர். 710 பேர் சுவிசேஷத்தைக் கேட்டுள்ளனர். சத்சங் கூடுகையொன்று மிக நேர்த்தியாக நடத்தப்பட்டுள்ளது. ஒருவகையான நோய்த் தொற்றுகளினால் பாதிக்கப்பட்டு, மருத்துவமனைகளின் அவசர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டிருந்த சிறு குழந்தைகளான ஹர்மன் சிங் மற்றும் நூர் கௌர் நன்கு சுகமடைந்துள்ளன. கிறிஸ்துவை அறிகிற அறிவிற்குள் 7 குடும்பங்கள் வநதிருப்பதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கை செய்திருப்போர் விசுவாச வாழ்வில் நன்கு வேரூன்றி வளர; நமது தொடர்பில் புதிதாக வந்திருக்கின்ற 3 கிராமங்களில் சுவிசேஷத்திற்கான வாசல்கள் திறக்கப்பட; நமது பழைய விசுவாசியொருவரால் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதன்கிழமை ஜெபம் தடையின்றி தொடர்ந்து நடைபெற; மஜ்பி இனத்தவர்களான கல்பன்ஜாரா கிராம சிரா சிங் மற்றும் மனோகன் சிங்கின் குடும்ப மக்கள் கிறிஸ்துவில் வளர்ந்து, அநேக ஆத்துமாக்களை ஆதாயம் செய்கிறவர்களாக மாற ஜெபிப்போம்.

## ஹரியானா

### ஜீவன் நகர்: அலியாக்கீம் ஜெனா & தீபிகா

**துதிக்க:** இயேசுவின் நற்செய்தியை 320 பேர் கேட்டுள்ளனர். 5 இடங்களில் இயேசுத் திரைப்பட நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன. 41 புதிய ஏற்பாடுகளும், 2 வேதாகமங்களும் பகிரப்பட்டுள்ளன. ராய்சீக் இனமக்கள் ஞாயிறு ஆராதனைகளில் கலந்துகொள்ள விருப்பம் காட்டுகின்றனர். தபாவாலி கிராம சர்தார் ஜாக்ரூப் சிங், பக்சிஷ் சிங் மற்றும் அவரது மகனும் பேரப்பிள்ளைகளும் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். போடோலியாவாலி மற்றும் திலீப் நகர் பகுதிகளில் 2 சிறிய ஜெபக்குழுக்கள் துவங்கப்பட்டுள்ளன. தங்களது உற்றார் உறவினர்களிடம் கிறிஸ்துவின் அன்பைப் பகிரவும், அவர்களைக் கிறிஸ்துவண்டை வழிநடத்துவதற்குமான 3 ஆத்தும ஆதாயப்பயிற்சிகள் நமது இப்பணித்தள விசுவாசிகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பால்மீகி, ஓட் ராஜ்புத் இனமக்களிலிருந்து சுவிசேஷத்திற்குச் செவிகொடுப்போர் தேவ மந்தைக்குள் வந்து சேரவும், ஏற்கனவே அவ்வின மக்களில் விசுவாசிகளாயிருப்போர் தங்களது சாட்சியுள்ள வாழ்வின் மூலம் அவர்தம் உறவினர்களுக்கு கிறிஸ்துவின் அன்பைப் பகிரவும்; ராய்சீக் மக்களினத்தைச் சார்ந்த ஜஹாசிங், சோனுசிங், அஜய்சிங், பல்தேவ்சிங், மின்டிசிங், பிரூசிங், சஹாப்சிங் மற்றும் பூட்டாசிங் குடி மற்றும் போதைப்பழக்கங்களிலிருந்து விடுதலை பெற; ஷெர்கார் கிராம பாப்புராமின் சகோதரரான ஜெத்தாராம் புற்றுநோயிலிருந்து அற்புத சுகமடைய; வரும் திருமண சம்பந்தங்கள் யாவும் தடைபட்டுப் போவதினால், விரக்தியில் காணப்படும் சமார் இனத்தைச் சார்ந்த தபாவாலி சபை விசுவாசியான குர்பிரீத் சிங்கிற்கு நல்லதொரு வாழ்க்கைத்துணை அமைய ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜாண் சுந்தர் சிங், திரு. தீப்திலால் மாலி
திருமதி. திலகவதி நாகராஜன்
திருமதி. சௌந்தர்ய ரேகா வியாசு பாபு

### கலான்வாலி:

#### விஜயகுமார் & ஜெபலா

**துதிக்க:** இப்பகுதியிலிருந்து 3 பேர் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டு, தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவின் பேரில் அறிக்கை செய்துள்ளனர். இப்பணித்தள அளவில் நடத்தப்பட்ட பெண்களுக்கான ஊழியப்பயிற்சி நிகழ்ச்சியில் 20 பேர் கலந்துகொண்டு பயனடைந்துள்ளனர். வெளிப்புற சந்திப்பு ஊழியத்தின் மூலம் 7 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. 4 இடங்களில் வைத்து திரையிடப்பட்ட இயேசுத்திரைப்படத்தின் மூலம் 60 பேர் இயேசுவைக் குறித்து அறிந்துள்ளனர். இப்பணித்தள அளவில் நடத்தப்பட்ட சிறுவர் முகாமில் 65 பிள்ளைகள் கலந்துகொண்டு ஆவிக்குரிய நன்மை பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக தேவ மந்தையில் இணைந்திருப்போர் தங்களது விசுவாசத்தில் உறுதியாக நின்று கிறிஸ்துவில் மேலும் வளர; விசுவாசிகள் தங்களது நண்பர்கள் மற்றும் உறவினர்கள் மத்தியில் சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு முன்வர; ஆசிர் கிராம நமது விசுவாசி சரண்ஜீத்திற்கு சொந்தமாக நல்லதொரு வீடொன்று கிடைக்க; சுவிசேஷ கைப்பிரதிகள், இயேசுத்திரைப்பட நிகழ்ச்சிகள், சத்சங் கூடுகைகள் மூலம் இயேசுவைக் குறித்து கேள்விப்பட்டிருப்போர் அவரைத் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

## உத்தராகண்ட்

### தினேஷ்பூர்:

#### ராமசாமி ஜெரோம் & அந்தோணி ராஜம்

**துதிக்க:** சுவிசேஷம் 80 பேருக்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. 2 கிராமங்கள் புதிதாக சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. 4 இடங்களில் சத்சங் கூடுகைகளும், 2 இடங்களில் வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகளும் நடைபெற்று முடிந்துள்ளன. பத்போஜி கிராம தரம்பாலின் குடும்பம் ஒரு வருடத்திற்குப் பின்பு மீண்டும் கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் அடியெடுத்து வைத்துள்ளனர். ஜாஃபர்பூர் கிராமத்தில் 2 இரவுநேர ஜெபக்கூட்டங்கள் முறையே நடத்தப்பட்டுள்ளன. நமது விசுவாசி ஸ்மித்ராவிற்கு பித்தப்பை அறுவை சிகிச்சை பாதுகாப்பான முறையில் செய்யப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுனில் மற்றும் ஜாங்கீர் கவேயின் குடும்பத்தார் இரட்சிக்கப்பட; கிருஷ்ணா ஜொகிந்தர் வயிற்றுக்கட்டிகளிலிருந்தும், குந்திதேவி பல்வேறு சரீர பெலவீனங்களிலிருந்தும், ரஜினி கௌர் வியாதிப் படுக்கையிலிருந்தும் விரைவில் பூரண சுகமடைய; தொழிலினிமித்தம் வெளிநாடு செல்லவிருக்கும் நமது விசுவாசி ஒருவரின் மகன் ஜக்தேவ் எச்சூழ்நிலையிலும் தனது விசுவாசத்தில் நிலைத்து நிற்க; வினோத் மற்றும் நிஷாவின் குடும்பங்கள் தங்களது விசுவாச பின்னடைவிலிருந்து மீண்டும் விசுவாசத்துடன் கிறிஸ்துவண்டை வந்து சேர ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. கோயில் புஷ்பம் பால்ராஜ்
திருமதி. ஜோஸிலா சுந்தரிபாய் பென்ஹர் Y.
திருமதி. செல்வம்மாள் செல்வராஜ்
திருமதி. சகரிகா பிரதான் பரிச்சா

# ராஜஸ்தான்

## உதய்பூர்:
## ஆஷிஷ் குமார் & சவிதா தேவி

**துதிக்க:** புதிதாக 19 பேர் கிறிஸ்துவின் மந்தையில் அடைக்கலம் புகுந்துள்ளனர். ஒரு ஆராதனைக்குழு உருவாக்கப் பட்டுள்ளது. 2 கிராமங்களில் சுவிசேஷம் பறைசாற்றப்பட்டதில், 120 பேர் கிறிஸ்துவைக் குறித்து கேள்விப்பட்டுள்ளனர். 10 சுவிசேஷ கைப்பிரதிகளும், 30 புதிய ஏற்பாடுகளும், 4 வேதாகமங்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன. ஜெந்திலால், விஜய் மற்றும் சுகுணாபாய் தீய ஆவிகளின் கட்டுகளிலிருந்து விடுபட்டுள்ளனர். திருமணமாகி அநேக வருடங்களுக்குப்பின் அனில் & மஞ்சு தம்பதியர் மழலை பாக்கியமடைந்துள்ளனர். பவ்ரிபாய் வலிப்பு நோயிலிருந்து அற்புத சுகமடைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தற்சமயம் உள்ளூர் குருவின் பிடியிலிருக்கும் நமது விசுவாசிகளான ஜலாம்ஜி சுரேஷின் குடும்பம் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; சுகப்பிரசவத்திற்குக் காத்திருக்கும் எஸ்தர், பாருபாய், ஷர்மிளா ஆகியோருக்காக; ஆஷா மற்றும் நீலாவிற்கு மழலை பாக்கியங்கள் அருளப்பட; ராஜ்குமார் புற்றுநோயிலிருந்து அற்புத சுகம் பெற; நமது விசுவாசிகள் யாவரும் தங்களது விசுவாசத்தில் ஸ்திரமாய் நிற்க ஜெபிப்போம்.

## சாம்ரானியா: மீனுகா அடப்பா
## மேத்யூ & ராம்புரம் பெடாக்கா ஆஷா

**துதிக்க:** சுவிசேஷம் 650 பேருக்கு பகரப்பட்டுள்ளது. 32 வேதாகமங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. திட்டமிட்டபடி சபை மூப்பர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சியொன்று சிறந்த முறையில் நடந்தேறியுள்ளது. இப்பணித்தளத்தில் வைத்து நடைபெறும் அனைத்து இரவுநேர ஜெபக்கூட்டங்களும், சமிதி கூட்டங்களும் எவ்வித தடையுமின்றி முறையே நடத்தப்பட்டு வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பரவிவரும் நோய்த்தொற்றினால் உண்டாகும் காய்ச்சலினால் அவதிப்படும் நமது லுஹாரி திருச்சபை விசுவாசிகள் நன்கு சுகமாகி சாட்சிப் பகர; ராஜ்கேதா மற்றும் சீக்காரி கிராமங்களில் நடைபெற்றுவரும் அடிக்குழாய் வேலைகள் எவ்வித இடையூறுமின்றி நடந்து முடிய; தீராத இருமல், சளி தொல்லையிலிருந்து சும்லிபாய் பூரண சுகமடைய; குட்டிபாய் கர்ப்பப்பை பிரச்சினையிலிருந்து விடுபட்டு, நல்லதொரு குழந்தை பாக்கியமடைய; விக்ரம், சுக்ராம், சுனிதா, சைரத், சஞ்ஜய், பிரகாஷ் மற்றும் கைலாஷிற்கு தேவ பயத்துடன்கூடிய வாழ்க்கைத்துணைகள் அமைய; மாற்றுத்திறனாளியான சம்பா பீல் மனநிலை கோளாறிலிருந்து தெய்வீக சுகம் பெற; சர்தார், சூரத், அம்பை, ஜமுதிபாய், ராகேஷ் பீல், நுடுடிபாய், ரேணு, பிரமிளாபாய், கிருஷ்ணா, சீமா ஆகியோரின் குடும்பங்கள் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டு, தங்களது விசுவாசத்தை அவரில் தைரியமாக அறிக்கை செய்ய; ரதி மற்றும் சுனிதா தங்களது ஆவிக்குரிய வாழ்வில் வளரவும், மழலை பாக்கியங்களை அடையவும்; இந்நிதியாண்டின் ஊழிய இலக்குகளை அடைவதற்கான தேவ வழிநடத்துதல் நமது ஊழியர்களுக்குத் தெளிவாய்க் கிடைக்க ஜெபிப்போம்.

ஜூன் 10 சனி

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. பால் ரவி ராஜ் B.N.
திரு. தாமஸ் R., திரு. நாகராஜன் M.
திருமதி. ராஜேஸ்வரி பிரதான் சம்புநாத்
திருமதி. நேத்ரவதி முத்துக்குமார்
திருமதி. பாலின் மேரி பூபதி

### தபுக்காரா:

**ராஜம்மாள் &
ஜாண்சன் தமிழ்ச்செல்வன்;
டேனியல் மார்வெல்ராஜ் & ஜெபசீலி**

**துதிக்க:** புதிதாக 3 பேர் கிறிஸ்துவின் மந்தைக்குள் அடியெடுத்து வைத்துள்ளனர். தீய ஆவியின் பிடியிலிருந்த ரவிசங்கர் தற்போது சுகமாகி, நன்கு சமாதானமாய் வாழ்ந்து வருகிறார். 15 புதியவர்கள் சுவிசேஷத்தைக் கேட்டுள்ளனர். திருமணமாகி 6 வருடங்களுக்குப்பின் கிருஷ்ணாவிற்கு குழந்தை பாக்கியம் கிடைத்துள்ளது. பரம்ஜீத் கௌருக்கு முதுகுத்தண்டுவட வலியிலிருந்து நல்ல சுகம் கிடைத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சத்பாலும், சகுந்தலாவும் இயேசுவைத் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; எந்தப் பிரச்சினைகளுமின்றி ஜெலாசிங் தனது வீட்டைக் கட்டிமுடிக்க; தீய ஆவிகளின் கட்டுகளிலிருந்து கிருஷ்ணா சத்பாலின் குடும்பத்தார் விடுவிக்கப்பட; வரும்நாட்களில் நடக்கவிருக்கும் சிறுவர், வாலிபர் மற்றும் பெண்களுக்கான பயிற்சிக்கூடுகைகள் ஆசீர்வாதமான நற்கனி தரும் வகையில் நடந்து முடிய; சிந்தாமணி மற்றும் ரவியின் குடும்பத்தார் யாவரும் தங்களது விசுவாசத்தை கிறிஸ்துவில் தைரியமாக அறிக்கையிட ஜெபிப்போம்.

## உத்தரப் பிரதேசம்

### காட்டம்பூர்:

**ஜங்கோலுன் தௌதாங் &
தியான்சிங் ஹௌசல்**

**துதிக்க:** சுவிசேஷம் 70 புதியவர்களைச் சென்றடைந்துள்ளது. துன்புறுத்தப்படுகின்ற விசுவாசிகள் தங்களது விசுவாசத்தில் இடறாமலிருக்க விடியற்காலை ஜெபங்கள் இப்பகுதியில் ஏறெடுக்கப்பட்டுள்ளன. தடை செய்யப்பட்டிருந்த காட்டம்பூர், ஜகனாபாத், சில்லி மற்றும் பவான் பகுதிகளிலுள்ள ஆலயங்கள் சீரமைக்கப்பட்டு, மீண்டும் ஆராதனைகள் துவங்கப்பட்டுள்ளன. கிறிஸ்தவ எதிர்ப்பாளர்களின் ஒத்தாசையோடு தவறான செய்திகளை அங்குள்ள உள்ளூர் பத்திரிக்கைகள் வெளியிட்ட போதிலும், நமது விசுவாசிகளை தேவன் தொடர்ந்து பாதுகாத்து வருகின்றதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** திட்டமிடப்பட்டு நடத்தப்பட்டுவரும் எதிர்ப்பாளர்களின் சதி வேலைகளினால் நமது ஊழிய நிகழ்ச்சிகள் பாதிக்கப்படாமல் இருக்க; மீண்டும் திறக்கப்பட்டுள்ள ஆலயங்களில் ஆராதனைகள் கிரமமாக நடைபெறவும், காவல் துறையினர் நமது விசுவாசிகளின் மீது தவறான குற்றச்சாட்டுகளைச் சுமத்தி அவர்களைக் கைது செய்யாமலிருக்கவும்; நமது புதிய தொடர்பாளர்கள் தீய ஆவியின் கட்டுகளிலிருந்து விடுபட; விடுமுறை வேதாகமப் பள்ளி நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பிள்ளைகளுக்கு அது மிகுந்த ஆசீர்வாதங்களைக் கொண்டு வர; வாழ்வின் எல்லா நடைமுறைகளிலும் நமது விசுவாசிகளின் விசுவாசம் பலப்படுத்தப்பட ஜெபிப்போம்.

ஜூன் 11 ஞாயிறு

## தேசிய மிஷனரிப்பயிற்சி மையம்:

### N. ராஜதுரை & பிரேமா

**துதிக்க:** மிஷனரிப்பணிக்கென 12 பேர் பயிற்சிப்பெற்று வருகின்றனர். மார்ச் மாத இறுதியில் 5 பேர் பயிற்சி நிறைவுப்பெற்று மிஷனரிகளாகப் பணித்தளங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். சுவிசேஷப்பணிக்கு ஊக்கப்படுத்தப்படும்வகையில் 36 மிஷனரிகளுக்கு ஹாகாய் பயிற்சி நிகழ்ச்சியொன்று நடத்தப்பட்டுள்ளது. குஜர்னா மற்றும் போஜிலா கிராமங்களில் நடத்தப்பட்ட வெளிப்புற சந்திப்பு ஊழியத்தின் மூலம் நூற்றுக்கணக்கான இயேசு சரித்திரப் புத்தகங்களும், கிதியோன் புதிய ஏற்பாடுகளும் விநியோகிக்கப்பட்டுள்ளன. ஜோகன்பாக் மருத்துவமனையில் தொடர்ந்து நடத்தப்பட்டுவரும் ஊழியச்சந்திப்பின் மூலம் அங்குள்ள நோயாளிகள் மத்தியில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு, அவர்களுக்காக ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டு வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இங்கு மிஷனரிப்பயிற்சிப் பெறுவோர் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் அபிஷேகிக்கப்பட; இங்கு நிலவிவரும் கோடைக்கால தட்பவெட்ப நிலை இங்குள்ள பணியாளர்களுக்கும், பயிற்சிப் பெறுவோருக்கும், பாடம் நடத்த அவ்வப்போது வந்துச்செல்லும் ஆசிரியர்களுக்கும் சாதகமாக அமைய; வெளிப்புற சந்திப்பு ஊழியத்தின் மூலம் சந்திக்கப்பட்டுள்ள 13 கிராமங்களில் உள்ளோர் கிறிஸ்துவின் அன்பை ருசிக்க; நமது மிஷனரிப் பயிற்சியாளர்கள் இங்குள்ள கலாச்சார பழக்கவழக்கங்களைக் கண்டு அதிர்ச்சியுறாமல், அந்த உள்ளூர் சூழ்நிலைகளுக்கேற்ப தங்களை மாற்றியமைத்துக் கொண்டு தேவனுக்கென்று பணிசெய்ய; தென் ராஜஸ்தான் பகுதியிலுள்ள அலிராஜ்பூரில் பணியமர்த்தப்பட்டிருக்கும் நமது புதிய ஊழியர்களான திரு. கெனோஸ், திரு. தங்பியாக்முவான், மகாராஷ்டிரா பகுதியிலுள்ள நந்தூர்பாரில் பணியமர்த்தப்பட்டிருக்கும் திரு. சீனு, சென்னை தலைமை செயலகத்தில் பணியமர்த்தப்பட்டிருக்கும் திரு. ஸ்டீபன் மற்றும் ஒடிசாவில் பணியமர்த்தப்பட்டிருக்கும் திரு. ராக்கி, திரு. சந்து மராண்டி ஆகியோர் நல்லமுறையில் ஊழியங்களைச் செய்ய ஜெபிப்போம்.

## விசுவாச கூட்டு ஜெபம்!

*ஹிமாச்சலப் பிரதேசம், ரோஹ்ரு பணித்தளம். கஸ்தா கிராம பூஜாரி வீர்தாஸ் கிராம மக்களுக்கு பூஜைகளையும், மாந்திரீக செயல்களையும் செய்து வந்தார். மக்கள் அதற்கீடாக அவருக்கு மதுபானம் கொடுத்தனர். 2 வருடங்கள் கழித்து இப்பூஜாரி பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டு, படுத்தப்படுக்கையானார். இவருடைய மகள்களை உள்ளூர் சுதேச ஊழியர்களுக்கு கல்யாணம் செய்து கொடுத்திருந்தபோதிலும், இவர் தனது தெய்வங்களை விட்டுப்பிரியவில்லை. தனது பெலவீனத்திற்கு மருந்தாக மருத்துவம், பூஜை மற்றும் மாந்திரீகங்களை மட்டுமே நம்பி இருந்தார். ஆனால் மாற்றம் ஏதும் நிகழவில்லை. இவரைக் குறித்து கேள்விப்பட்ட நமது மிஷனரிகளும், சுதேச ஊழியர்களும் குழுவாகச் சென்று அவருக்காக ஜெபித்தனர். விசுவாசத்துடன்கூடிய கூட்டு ஜெபம் அவரைச் சுகமாக்கியது. தேவ அன்பை இவ்வாறு ருசித்த அவர், தற்போது ஆலய ஆராதனைகளில் கிரமமாக வந்து பங்கேற்கிறார். அல்லேலூயா! அவரது மனைவியும், மகனும் இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.*




### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. மோங்வய் ஃபோம் B.
திருமதி. பிரின்சி சாம்பால்
திரு. வசாவா தாமஸ்பாய் குலாப்பாய்
திருமதி. மதுஸ்மித்தா பானி
திரு. அஜித் பாண்டியன் G.

### பர்த்தனா:

**சுரேஷ் மால்தோ & பிரேம்லதா**

**துதிக்க:** சுவிசேஷம் 7 கிராமங்களிலுள்ள 500 பேருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. 44 புதிய ஏற்பாடுகளும், 4 வேதாகமங்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன. வாலிபர் முகாமொன்றும், 8 சிறுவர்கள் முகாம்களும் சிறந்தமுறையில் நடத்தப்பட்டுள்ளன. ஆண்களுக்காக 5 வேதாகம வகுப்புக்குழுக்களும், பெண்களுக்காக 2 வேதாகம வகுப்புக்குழுக்களும் முறையே நடந்து முடிந்துள்ளன. தீய ஆவியின் தொந்தரவினால் வீட்டை விட்டு வெளியேறிய கரண், ஜெபத்தினால் 3 நாட்களில் மீண்டும் சுகபத்திரமாக வீடு திரும்பியுள்ளார். மனநோய் பிரச்சினையிலிருந்து பூனம் சுகமடைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இங்குள்ள வாலிபர்கள் கிரமமாக வந்து ஞாயிறு ஆராதனைகளில் பங்கெடுக்க; பர்த்தனா காலனியில் வசிக்கும் ரீனா மற்றும் முஸ்கானின் குடும்பங்கள் தங்களது விசுவாசத்தை கிறிஸ்துவில் தைரியமாக அறிக்கையிட; தீய ஆவியின் பிடியிலிருந்து கரண் அற்புதமாக விடுதலை பெற; மனநோயிலிருந்து பூஜா சுகமடைய; சியாராமின் குடும்பமும், நங்லா பன்தாவின் பிள்ளைகளும் இரட்சிக்கப்பட; ஞாயிறு ஆராதனைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் ராஜேஷ் நாத், ஶ்ரீஃப் நாத், ராமச்சந்திர நாத், தரம் நாத், முர்சா, திராஜ் நாத், அஞ்சுரா தேவி, சாந்தகுமார் ஷக்யா, அசோக்குமார் மற்றும் சுரேந்திர கதரியா யாவரும் மனந்திரும்ப ஜெபிப்போம்.

## மத்தியப் பிரதேசம்

### கர்கோன்:

**பினித் பிரசாத் பர்தன் & அமோஜிதா**

**துதிக்க:** சுவிசேஷத்தை 200 பேர் புதிதாகக் கேட்டுள்ளனர். கர்ப்ப காலத்தில் ஏற்பட்ட அதிக இரத்தப்போக்கு பிரச்சினையின் ஆபத்தான விளைவுகளிலிருந்து ரோஷினி தனது பெற்றோர்களின் ஜெபத்தின் மூலம் மீட்கப்பட்டு, தற்போது நல்லமுறையில் குழந்தையைப் பெற்றெடுத்துள்ளார். வெச்சிலி பிரசவ நேரத்தில் ஏற்பட்ட சிக்கல் களிலிருந்து மீண்டு, தற்போது அவரும் சேயும் நலமாக உள்ளனர். வெகு நாட்களாக காய்ச்சலினால் கஷ்டப்பட்டுவந்த காலுவின் குடும்பத்தினர் உபவாச ஜெபத்தின்மூலம் அற்புத சுகமடைந்துள்ளனர். ஜீத்தன் நமது ஞாயிறு ஆராதனைகளில் தொடர்ச்சியாக பங்கேற்க ஆரம்பித்தபின் தீய ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** எதிர்ப்புகளினிமித்தம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் ஜெபக்கூடுகைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட; மங்லி தீத் தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து விடுவிக்கப்பட; ரமேஷின் குடும்பத்தில் குழந்தை பாக்கியம் கிடைக்க; சபையில் பிரச்சினையை உருவாக்குகின்ற ஹீராலால் மனநிலை பாதிப்பிலிருந்து அற்புத சுகம் பெற ஜெபிப்போம்.

## ஜூன் 13
செவ்வாய்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. கெடம் ஸ்ரீனிவாச ராவ்
திருமதி. ஜெபராணி ஜாண்சன் சங்கர்
திருமதி. சகரிகா மோகினிமாலா பீரோ

### தூல்கோட்:
**ஜுபராஜ் பர்தன் & ஷீபா ஜாஸ்மின்**

**துதிக்க:** வெளிப்புற சந்திப்பு ஊழியம் மூலம் சுவிசேஷம் 4 கிராமங்களில் பறைசாற்றப்பட்டு, அதன் வாயிலாக 331 பேர் இயேசுவைக் குறித்து அறிந்துள்ளனர். 4 வேதாகமங்களும், 5 புதிய ஏற்பாடுகளும் கொடுக்கப்பட்டுள்ளன. பெண்கள் கூடுகையொன்று நடத்தப்பட்டதில், 25 பெண்கள் கலந்துகொண்டு ஆவிக்குரிய பெலனடைந்துள்ளனர். தானியங்களைத் தொடும்போதெல்லாம் மயங்கிவிழும் ஒருவித விநோதமான நோயிலிருந்து பாவ்டி கிராம ஜஸ்மிபாய் அற்புதமாகக் குணமடைந்துள்ளார். சிரோன்டிமால் கிராம சுமன் கழுத்துக்கட்டியிலிருந்து அறுவைசிகிச்சையின்றி தனது வீட்டாரின் உபவாச ஜெபத்தின் மூலம் பூரண சுகம டைந்துள்ளார். தண்டா கிராம சுர்லிபாய் தேள்கடியினால் மயங்கி விழுந்தபோது சபையார் செய்த ஜெபத்தினால் அவர் சுகம் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வேலைக்காக இடம்மாறி பட்டணங்களுக்குச் சென்றிருப்போர் தங்களது விசுவாச வாழ்வில் ஸ்திரமாக இருக்க; மொட்டகுத்ரா மற்றும் ஜமுனாலா கிராம விசுவாசிகள் ஆவிக்குரிய கூடுகைகளில் உற்சாகமாகப் பங்கேற்று, கிறிஸ்துவில் நன்கு வளர; கடந்த 10 வருடங்களாக தொழுநோயினால் அவதியுறும் மன்சாரி சுகமடைய; லக்ஷ்மிக்கு மழலை பாக்கியம் கிடைக்க; தீய ஆவியின் கிரியைகளினால் தனது குடும்பத்தாரில் அநேகரை இழந்து தவிக்கும் ராம்கட் கிராம பிரிஸ்டஸ் பெஸன்பாய் ஆறுதலைடையவும், கிறிஸ்தேசுவை இரட்சகராக ஏற்றுக்கொள்ளவும் ஜெபிப்போம்.

### தார்: கோபி கிருஷ்ணன் & மேனகா

**துதிக்க:** புதிதாக ஒரு கிராமத்தில் சுவிசேஷம் எடுத்துரைக்கப்பட்டதில், 50 பேர் முதல்முறையாக இயேசுவைக் குறித்து அறிந்துள்ளனர். 1 1/2 மாத பச்சிளங்குழந்தை வினய் அதிகளவிலான நுரையீரல் நோய்த்தொற்றிலிருந்து தேவ கிருபையால் சுகமடைந்துள்ளது. பல வகை சுகவீனங்களிலிருந்து கீஸ்ரிபாய், ஹீனாபாய் மற்றும் அருண்பாய் ஆரோக்கியமடைந்துள்ளனர். மாதுர் கிராமம் முதல்முறையாக சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளது. கார் கிராமத்தில் வைத்து நடத்தப்பட்ட வெளிப்புற சந்திப்புக் கூடுகையின் மூலம் 10 பேர் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இம்மாதம் நடைபெறவிருக்கும் அனைத்து கூடுகைகளும் தடைபடாமல் நடக்க; தலைவலியை உண்டுபண்ணும் தீய ஆவியின் கட்டுகளிலிருந்து பெண்கள் விடுவிக்கப்பட; எல்லாத் திருச்சபைகளிலும் சிறுவர்களுக்கென தொடங்கவிருக்கும் வேதாகம வகுப்புகள் திட்டமிட்டுள்ளபடி செயல்படுத்தப்பட; லங்குபேனிற்கு குடும்பப்பிரச்சினைகளிலிருந்து சுமூகமான தீர்வு கிடைக்க ஜெபிப்போம்.

ஜூன் 14 புதன்

உபவாச ஜெபநாள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. லால்மணி டிகல்

## நேப்பாநகர்:

### ஜூபராஜ் பர்தன் & ஷீபா ஜாஸ்மின்

**துதிக்க:** சுவிசேஷம் 2 கிராமங்களில் முதல் தடவையாக அறிவிக்கப்பட்டுள்ளதில் 50 பேர் கிறிஸ்துவைக் குறித்து கேள்விப் பட்டுள்ளனர். மண்ட்வா கிராமத்தில் புதிய ஜெபக்குழுவொன்று தொடங்கப்பட்டுள்ளது. இப்பணித்தளத்தில் புதிதாக 2 ஆலயங்கள் கட்டுவதற்கான அனுமதி கிடைத்துள்ளது. பலத்த புயல் காற்றில் தனசிங்கின் வீடு அடித்துச் செல்லப்பட்டபோதிலும், தேவ கிருபையால் எவருடைய ஜீவனுக்கும் பாதிப் பேதும் ஏற்படவில்லை. லக்கன் மற்றும் ரஜ்லிமய்யின் குடும்பப்பிரச்சினைகள் யாவும் சுமூகமான தீர்வு கண்டிருப்பதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ரய்ஜாபாய் மனநோயிலிருந்து குணமாக; ராஜேஷிற்கு கிறிஸ்துவுக் குள்ளான நல்ல வாழ்க்கைத்துணை கிடைக்க; கைலாஷ் தீய ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட; மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ள 2 வயது குழந்தை அன்மோல் விரைவில் பூரண சுகம் பெற; மனைவிகளைத் துன்புறுத்தும் பிங்கி மற்றும் லதாபாயின் கணவர்கள் மனந் திரும்ப; நேப்பாநகர் பழங்குடியினருக்கும் காவல் துறையினருக்கும் இடையே காணப்படும் பிரச்சினை முடிவுக்கு வரவும், அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் ஊழியம் தொடங்கப்பட்டு பன்மடங்கு ஆசீர்வதிக்கப்படவும் ஜெபிப்போம்.

# ஜார்க்கண்ட்

## பர்ஹர்வா:

### கிரிஷான் குமார் & சாந்திலால்

**துதிக்க:** புதிதாக 6 பேர் ஞாயிறு ஆராதனைகளில் கலந்துகொள்ள ஆரம்பித்துள்ளனர். ஜெபத்தின் மூலம் துளாரி, பிரின்ஸ் குப்தா, மான்சி, ஆபிரகாம் ரவிதாஸ் மற்றும் கணேஷ் ரவிதாஸ் தங்களது சரீர பெலவீனங்களிலிருந்து சுக மடைந்துள்ளனர். தொழுநோயினிமித்தமாக சரீரத்தில் ஏற்பட்ட நோவிலிருந்து தேவ கிருபையால் சுனில் ரவிதாஸ் விடுதலை பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுனில் ரவிதாஸ் தொழுநோய் பிரச்சினையிலிருந்து மருந்தில்லாமல் அற்புத சுகம் பெற; கப்துரியா தீய ஆவியின் பிடியிலிருந்து விடுபட; முகுந்த் சஹா, பப்லு பிரசாத் சஹா, சுனில் ரவிதாஸ் ஆகியோரின் குடும்பங்களும் மற்றும் துளாரியும் கிறிஸ்துவின் அன்பை ருசித்துப்பார்த்து அவரை இரட்சகராக ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

## *பரிபூரண தேவ கிருபை!*

*மகராஷ்டிரா, போரடி பணித்தளம். 18 வயது வாலிபனான ஷோகன் 2 வருடங்களாக மனநிலை பாதிக்கப்பட்டிருந்தான். அவனது பெற்றோர்கள் மாந்திரீகம் மற்றும் மருத்துவத் திற்கென்று அதிக பணம் செலவழித்தும் பலனொன்றுமில்லை. பெற்றோர்களின் அன்போ அல்லது பணமோ அவனைச் சுகப்படுத்த முடியவில்லை. இத்தருணத்தில் அங்குள்ள விசுவாசியொருவர் அவனை உமர்தா கிராம ஜெபக்கூட்டத்திற்குக் கூட்டிச் செல்லும்படி அவனது பெற்றோர்களிடம் கூறினார். விளைவு, நமது மிஷனரிகள் அங்குள்ள விசுவாசிகளுடன் இணைந்து அவனுக்காக ஜெபித்தபோது, அவன் தேவ கிருபையால் பரிபூரண சுகமடைந்தான். அல்லேலூயா!*




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. எனஸ் ஜலின் சந்திரன்
திருமதி. பேபி செலினா அருள்ராஜ்
திருமதி. புனிதா மெயின்ராஜ்
திரு. அருளானந்தம் வெங்கடேசன் M.
திருமதி. லதா ஐசக் தனசிங்
திருமதி. மரியாள் குமரவேல்
திருமதி. ஆல்பி இவாஞ்சலின் ஹாரிஸ்
திரு. பொன்னுசாமி S., திரு. டேவிட் S.
திரு. தேபதத்தா லிமா, திரு. ஹுசேன் ஜெராய்

## கங்குபாடா சிறுமியர் விடுதி:

**ஈவ்லின் பாக்கியா,**
**சுஷாஜித் சேனாபதி**

**துதிக்க:** உள்ளூர் மருத்துவ உதவிகள் பலன் கொடுக்காத நிலையில் மூளை மலேரியா காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருந்த நமது விடுதிப்பிள்ளை முங்லி தேவ கிருபையால் அற்புத சுகம் பெற்றுள்ளார். 10-ம் & 12-ம் வகுப்பு மாணவர்களின் கல்விநிலை மேம்பாட்டை மனதில் கொண்டு சிறப்பு ஆங்கில மொழிப் பயிற்சி வகுப்பும், கணினி பயிற்சி வகுப்பும் நடத்தப்பட்டுள்ளன. பிள்ளைகள் பள்ளிக்குச் சென்றுவர ஆட்டோ ரிக்ஷாவொன்று கிடைத்துள்ளது. நமது ஊழியத்திட்டத்தில் இணைந்து பங்காற்ற புதியதொரு மிஷனரி பணியமர்த்தப்பட்டுள்ளார். நமது விடுதியில் புதிதாக வந்து இணைந்துள்ள பிள்ளைகளுக்கு அருகாமையிலுள்ள பள்ளிகளில் சேர இடம் கிடைத்திருப்பதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தேவி, மேரி மற்றும் பப்லிக்கு காசநோயிலிருந்து பூரண சுகம் கிடைக்க; பழைய கட்டிடத்தைச் சீரமைக்கும் பணி சீக்கிரமாய் நடந்தேறி முடியவும், அங்கு 6-ம் &7-ம் வகுப்பு மாணவிகள் 55 பேர் தங்க வைக்கப்படவும்; நமது விடுதியிலிருக்கும் 300 பிள்ளைகளையும் பொறுப்புடன் பராமரிப்பதற்கேற்ற நல்லதொரு செவிலியர் கிடைக்க ஜெபிப்போம்.

## சாந்தோபானி:

**ஜேக்கப் ஞானப்பண்டிதன் & சாந்தி**

**துதிக்க:** வெளிப்புற சந்திப்பு ஊழியத்திற்கான ஊழியப்பின்தொடர்பணி 33 கிராமங்களிலுள்ள 9 இடங்களில் செய்யப்பட்டுள்ளது. 5 கிராமங்களில் இயேசுத்திரைப்படம் திரையிடப்பட்டுள்ளது. பல்வேறு கோணங்களில் 243 பேர் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளனர். 40 கிராமங்களில் புதிதாக ஜெபநடை ஊழியம் நடத்தப்பட்டுள்ளது. சுதிபஹாரி கிராம ஜூப்லிதேவி இந்த நிதியாண்டில் முதல் புதிய தொடர்பாளராகக் கிடைத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கடந்த நிதியாண்டில் தேவ வார்த்தையைச் சுவிசேஷமாகக் கேட்டிருப்போர் அனைவரும் இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொள்ள; அவ்வப்போது சுவிசேஷ கைப்பிரதிகளையும், பாடல் புத்தகங்களையும் புதிதாக வடிவமைக்க பாடல் கமிட்டி அங்கத்தினர்கள் முறையாக ஜெபத்துடன் கூடி ஆலோசிக்க; கொர்தா மொழி பேசும் வாலிபப்பிள்ளைகளுக்கு தகுந்த வாழ்க்கைத்துணைகள் அமைய ஜெபிப்போம்.

## ஜூன் 16 வெள்ளி

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ஜாண்சன் சங்கர் I.
திருமதி. சுஷீலா விஜயகுமார்
திரு. பினித் பிரசாத் பர்தன்
திரு. எலியா சந்திரன் S.

### ஜமா: முன்னா மொகந்தியர் & சுமித்தா தாஸ்

**துதிக்க:** சுவிசேஷத்தினால் 2450 பேர் சந்திக்கப்பட்டுள்ளனர். 23 கிராமங்களில் சத்திய வசனம் விதைக்கப்பட்டுள்ளது. 11 புதியவர்கள் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். 22 கிராமங்களில் ஊழியப்பின்தொடர்பணிகள் சிறப்பாக நடந்துள்ளன. 12 கிராமங்களில் இயேசுத்திரைப்பட ஊழியம் செவ்வனே நடந்தேறியுள்ளது. 28 பேர் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கையிட காத்திருக்கின்றனர். 75 வீடுகள் ஜெபத்துடன் சந்திக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது ஊழியத்தை எதிர்க்கும் கிராமத்தலைவர்கள், மந்திரவாதிகள், அரசியல்வாதிகள், கிராம வாலிபர்கள் யாவரும் இயேசுவின் அன்பினால் தொடப்பட; எதிர்ப்பினிமித்தம் தங்களது விசுவாசத்தை அறிக்கையிட தயங்குவோருக்காக; சுக்குடி முர்மு, சபதி முர்மு மற்றும் புதுல் ஹெம்ரோம் மழலை பாக்கியங்களினால் ஆசீர்வதிக்கப்பட; திடீரென கண்பார்வையை இழந்திருக்கும் 12 வயது சிறுவன் இஸ்மாயில் முர்மு அற்புத சுகமடைய; தலா மராண்டி வயிற்றுப் புற்றுநோயிலிருந்தும், சுதேச ஊழியர் அந்திரியாஸ் டுடு சிறுநீரகப் பிரச்சினையிலிருந்தும், நிர்மல் மராண்டி மற்றும் பீம் ஹன்ஸ்தக் பக்கவாதப் பிரச்சினையிலிருந்தும் சுகம் பெற ஜெபிப்போம்.

### பகையா & தீன்பஹாட்:
### ஜெபக்குமார் & பொன்லதா; நெகேமியா & அனாமிகா பெகு

**துதிக்க:** புதிதாக 5 பேர் விசுவாசிகளாகி, கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் தஞ்சம் புகுந்துள்ளனர். சற்றும் நிமிரக்கூடாத கூனியாயிருந்த பிந்துதேவி ஆராதனை வேளையில் அற்புதமான சுகம் பெற்றுள்ளார். விசுவாசிகளின் உதாரத்துவமான காணிக்கைகளைக் கொண்டு ஓர் ஆலயம் கட்டப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிராம மக்களால் அநேக பிரச்சினைகளை எதிர்நோக்கும் பதலா கிராம விசுவாசிகளின் இப்பிரச்சினைகள் நீங்கவும், இங்கு ஒரு ஆலயம் சீக்கிரத்தில் கட்டப்படவும்; மசுரியா மற்றும் பிசா கிராமங்களிலும் ஆலயங்கள் கட்டப்பட; புதிய பணித்தளங்களில் பணியமர்த்தப் பட்டிருக்கும் புதிய மிஷனரிகளின் பாதுகாப்பிற்காக ஜெபிப்போம்.

## *இழந்ததைத் திரும்பப் பெற்றார்!*

*சத்தீஸ்கட், லுடேக் பணித்தளம். கோண்ட் இனத்தைச் சார்ந்த கய்தாமா கிராம 20 வயது பெண் விசுவாசி, அங்கேல், திடீரென தீய ஆவியின் உட்புகுதலால் காடுகளுக்குள் ஓடிச்சென்று 4 உயரமான மரங்களில் ஏறத் தூண்டப்பட்டார். அவ்வாறு தூண்டப்பட்டவர் மரமேறி, 4-வது மரத்திலிருந்து கீழே விழுந்து தன் சுயநினைவை இழந்தார். ஏதேச்சையாக அவர் விழுந்ததைக் கண்ட அவரது இளைய சகோதரன் அவரைத் தூக்கிக்கொண்டு கிராமத்திற்கு வந்தான். ஜெப உதவியினால் அவர் அத்தீய ஆவியை மேற்கொண்டு, மீண்டும் தன் சுயநினைவைப் பெற்றார். அல்லேலூயா!*

## ஜூன் 17 சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. எட்வின் செல்வராஜ் R.
திரு. ராஜதுரை N., திருமதி. கவிதா

### குமானி:
**பிபின் பீஹாரி பிரதான் & ஜாரனா பரிச்சா**

**துதிக்க:** திட்டமிட்டப்படி நடத்தப்பட வேண்டிய கூடுகைகள் எல்லாம் சிறப்பாக நடந்து முடிந்துள்ளன. விசுவாசிகளுடைய ஜெபத்தினால் சாமு திகா அவரது பெலவீனத்திலிருந்து சுகமடைந்துள்ளார். தனது மனைவியை இழந்த லுக்கி லகதா நமது ஊழியப்பணிகளில் உதவி செய்து வருகிறார். இயேசுத்திரைப்படம் மூலம் 30 பேருக்குச் சுவிசேஷம் சென்றடைந்துள்ளது. தெத்ரி குஜுர் மற்றும் பிகாஷ் காகா கிறிஸ்துவின்மீது தாங்கள் கொண்டுள்ள விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்தமாய் இருப்பதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜமிதா் குஜுருக்கு வீடு கட்டுவதில் இருக்கும் பிரச்சினைகள் தீர; இப்பணித்தள வாலிப்பிள்ளைகள் கர்த்தருக்கென பரிசுத்தமாய் வாழவும், அவர்களுக்குச் சிறந்ததொரு எதிர்காலம் அமையவும்; விடுதியை விட்டு ஓடிவிட்ட சாந்தன் காகாவின் வாழ்வு நலமாய் இருக்க; இம்மாத ஊழிய இலக்குகளை ஜெபத்துடன் சிறப்பாய் அடைந்திட ஜெபிப்போம்.

### கெய்ராஜோடி:
**சுச்சௌ & காம்புங் தாபா**

**துதிக்க:** ஊழியப்பாதையில் ஆபத்து ஏதுமின்றி இங்குள்ள விசுவாசிகள் காக்கப்பட்டு வருகின்றனர். சரீர வீக்கத்திலிருந்து ஜோஹன் மால்தோ பூரண சுகம் பெற்றுள்ளார். பிங்கி மால்தோ குழந்தை பாக்கியத்தினால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வலிப்பு நோயினால் கஷ்டப்படும் மசிஹ் மால்தோ மற்றும் மூட்டு வலியினால் அவதிப்படும் டேனியல் மால்தோவின் குடும்பத்தார் யாவரும் நன்கு குண மடைய; பின்டு மால்தோ குடிப்பழக்கத்தி லிருந்து விடுதலை பெற்று, ஆலய ஆராதனைகளில் தவறாமல் பங்கேற்க; பெஞ்சமின் மால்தோவை இழந்து கண்ணீரில் வாடும் அவரது குடும்பத்தார் அனைவரும் விரைவில் மனஆறுதலடைய ஜெபிப்போம்.

### பாதர்காமா:
**மல்லா வித்யாசாகர் & தீபிகா**

**துதிக்க:** சில்காரா திருச்சபையில் 3 நாட்கள் உபவாச ஜெபக்கூட்டம் மிகச் சிறப்பாக நடந்தேறியுள்ளது. கடந்த நிதி யாண்டில் 29 புதியவர்கள் தேவ மந்தையில் இணைந்துள்ளதோடு, இந்நிதியாண்டில் இவ்வாறு இணைய 22 புதியவர்கள் ஆயத்தமாக இருக்கின்றனர். பான்தாவில் 250 பேரும், பதரியாவில் 320 பேரும், சில்காராவில் 450 பேரும் சுவிசேஷ ரத ஊழிய நிகழ்ச்சிகளை எவ்வித தடங்கலுமின்றி கண்டுகளித்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அம்மை நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதால் கிராம மக்களால் விக்கிரக வழிபாட்டிற்கு கட்டாயப்படுத்தப்படும் சுரேஷ் மற்றும் அவரது இரு மகன்களின் பூரண சுகத்திற்காகவும், இக்குடும்பம் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தில் நிலைத்திருக்கவும் ஜெபிப்போம்.

ஜூன் 18 ஞாயிறு

# மேற்கு வங்காளம்

## மால்டா:

### உதித்தகுமார் பாக் & சூர்ஜ்ய காந்தி

**துதிக்க:** லெந்துகால நாட்களில் முறையாக நடத்தப்பட்ட மாலைநேர ஜெபக்கூட்டங்களின் வாயிலாக தொடர்ந்து நமது பிச்சள்பாடா திருச்சபையினர் தங்களது ஆவிக்குரிய வாழ்வில் நன்கு வளர்ந்து வருகின்றனர். இங்கு நடந்து கொண்டிருக்கும் ஆலயக்கட்டுமானப் பணி சிறப்பாக நடந்தேறி வருகிறது. அருகாமையில் வாழும் ஆதிவாசிகளல்லாத மக்களும் நமது ஆலய ஆராதனைகளில் மனமகிழ்ச்சியுடன் வந்து கலந்து கொள்கின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஃபரேஷ் ஹல்தர் மற்றும் மினாட்டி ஹல்தர் கிறிஸ்துவைத் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; உபத்திரவங்களின் மத்தியில் மாமுனியின் குடும்பம் விசுவாசத்தில் உறுதியாயிருக்க; இங்கு நடத்தப்படுகிற பெரிதளவிலான வெளிப்புற சந்திப்பு ஊழியங்களும், இயேசுத்திரைப்பட ஊழியங்களும் அதிக ஆத்தும அறுவடையை நல்க; குடலிறக்கப் பிரச்சினையிலிருந்து பிதன் ஷர்மா முழு சுகமடைய; நமது சுதேச ஊழியர்கள் மற்றும் தன்னார்வ ஊழியர்களின் உடல் நலத்திற்காகவும், முழுபாதுகாப்பிற்காகவும் ஜெபிப்போம்.

### பாக்குவாஹாட்: ராமகிருஷ்ண அகிபாடா & அஞ்சலி தேவி

**துதிக்க:** சல்போனா, நித்தன்பூர் மற்றும் பிந்தர்கடியா கிராமங்களைச் சார்ந்த 7 பேர் கிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, தங்களது விசுவாசத்தை அவரில் அறிக்கை செய்துள்ளனர். மின்சார அதிர்வு ஆபத்திலிருந்து சோனேஷ் முர்மு அற்புதமாகப் பாதுகாக்கப்பட்டுள்ளார். முதுகுத்தண்டுவட பிரச்சினையிலிருந்து விகாஷ் முர்மு தேவ கிருபையால் பூரண சுகமடைந்துள்ளார். விசுவாசத்தில் பின்னடைவு கொண்டிருந்த சைலேன் டுடு மற்றும் கோமல் முர்முவின் குடும்பங்கள் மீண்டும் கிறிஸ்துவண்டை வந்து சேர்ந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ராஜிப் முர்மு, ரபி முர்மு, மரியம் முர்மு மற்றும் காந்தி முர்மு தவறாமல் ஞாயிறு ஆராதனைகளில் பங்கேற்க; அதிகமாய்ப் பெருகிவரும் திருட்டுத் தொல்லைகளிலிருந்து ஹபிப்பூர் பிளாக் பகுதி மக்கள் பாதுகாக்கப்பட; சுஜன் ஹெம்ரோம், லக்கிராம் சோரேன், காலு பெஸ்ரா, மனுமர்தி ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்து விடுபட; இங்குள்ள வாலிபர்களும் பெரியவர்களும் சுவிசேஷத்தின் மீது வாஞ்சை காண்பிக்க ஜெபிப்போம்.

## மனிதருள் மாணிக்கம்!

*ராஜஸ்தான்- வசாலா திருச்சபையைச் சார்ந்த ரோஷன்லால், ஒரு பேருந்து ஓட்டுனர். கடந்த 03.04.2023 அன்று இரவு 7 மணிக்கு லாடர்வாஜா என்ற இடத்திற்குப் பேருந்து சென்றபோது, பேருந்தில் துணி பையொன்று தனித்துக் கிடப்பதைக் கண்டார். அப்பைக்குள் ரூ.40,600/-ம், 10 கிராம் தங்கச் சங்கிலியும் இருந்தன. இதைக் கண்ட பேருந்து நடத்துனர் அப்பணத்தை இரகசியமாகப் பங்கிட்டுக் கொள்ளலாம் என்றார். ஆனால் ரோஷன்லாலோ அந்த நடத்துனரின் மனதை மாற்றி, அப்பொருளை அதன் உரிமையாளர் வந்து பெற்றுக்கொள்ளும்படி அதைப் பேருந்து உரிமையாளரிடம் கொடுத்துவிட்டார். மனிதருள் மாணிக்கமாக உண்மை மனதுடன் இதைச் செய்திட உதவிய தேவனுக்கு ஸ்தோத்திரம்!*

ஜூன் 19 திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. செல்வின் ஜேசுதாஸ்
திருமதி. ஜோதிலக்ஷ்மி இம்மானுவேல் கார்த்தி

# அஸோம்

## லோக்ரா:

### பாருட் பிரதாப் மாங்யா & குமாரி பாரதி

**துதிக்க:** தாரிகாதி மற்றும் ஆராதனா சபையில் வைத்து நடத்தப்பட்ட 3 நாட்கள் உபவாச ஜெபக்கூடுகையில் 25 முதல் 30 விசுவாசிகள் கலந்துகொண்டு ஆவிக்குரிய பெலனடைந்துள்ளனர். கோஹ்பூர் பணித்தளத்தில் நடத்தப்பட்ட சபை மூப்பர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சியொன்று எவ்வித பிரச்சினையுமின்றி நன்கு நடந்தேறியுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிறுநீரகக்கல் மற்றும் சிறுநீர் நோய்த்தொற்று பிரச்சினைகளிலிருந்து மக்கோனி சிரி முழு சுகமடைய; இப்பணித்தளத்தைச் சார்ந்த 36 கிராமங்களிலுள்ள மக்கள் கிறிஸ்துவின் அன்பை அறிந்துகொள்ளவும், சுவிசேஷத்திற்குச் செவிசாய்க்கவும்; பல இடங்களில் பணிசெய்து கொண்டிருக்கும் நமது விசுவாசிகளும், விடுதிகளில் தங்கி கல்வி பயின்றுவரும் அவர்களின் பிள்ளைகளும் கிறிஸ்துவின் அன்பை விட்டுப் பிரிந்து செல்லாமலிருக்க; எல்லைப்பகுதிகளில் படைவீரர்களாகப் பணியாற்றும் நமது சில விசுவாசிகள் வியாதி மற்றும் எதிர்பாராத தாக்குதல் களிலிருந்து பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.

## சிலபதார்:

### கோண்ட் தேவு விஷ்ராம் & ராந்தே நய்னாபேன்

**துதிக்க:** பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டு 4 மாதங்களாக நடக்க முடியாமலிருந்த திமேஷ்வர் தேவ கிருபையால் முழு சுகமடைந்து நன்கு நடக்க ஆரம்பித்துள்ளார். தீய ஆவிகளின் தொந்தரவினால் மனதளவில் பாதிக்கப்பட்டிருந்த தெரேசா டோலி ஜெபத்தின் மூலம் பூரண குணமடைந் துள்ளார். காமேஷ்வரி மேதக் மற்றும் கிஷ்னோ மேதக் கடும் காய்ச்சல் தொந்தரவுகளிலிருந்து சுகம் பெற்றுள்ள தற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தெரேசா டோலி, மோனிகா டோலி மற்றும் பாபா டோலியின் குடும்பங்கள் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்க; அகாஜன், கதல்குரி, ஜோரிகுரி மற்றும் மிஸ்ஸிங்பூர் கிராமங்களிலுள்ள வீடுகள் கடும் புயலினால் அதிக பாதிப்பிற் குள்ளாகியிருப்பதால் அம்மக்களின் தேவைகள் யாவும் சந்திக்கப்பட; விசுவாசிகள் தங்களது விசுவாசத்தில் உறுதியாயிருந்து நற்சாட்சியுள்ள வாழ்வு வாழ; தன்னார்வமாக வெளிப்புற சந்திப்பு ஊழியங்களில் தாங்களாகவே ஈடுபடும் நமது பெண் விசுவாசிகளுக்குத் தகுந்த பாதுகாப்பு கிடைக்க; சீத்தல்மரி மற்றும் அகாஜன் கிராமங்களில் இவ்வருடத்தில் ஆலயங்கள் கட்டப்பட; ஜெகதீஷ் மேதாக்கின் உறவினர்கள் தேவ அன்பை ருசித்திட; பிற இடங்களுக்குச் சென்று தொழில்புரியும் நமது விசுவாசிகளின் ஆவிக்குரிய வாழ்வு கிறிஸ்துவில் நிலைத் திருக்க ஜெபிப்போம்.

## ஜூன் 20 செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. செலினா ஜாய்ஸ் ஜாண்
திரு. கார்த்திகேயன் S., திரு. விஜயகுமார் R.
திரு. பசவராஜா K., திரு. பூபதி P.
திரு. கிரிஷான் குமார், திரு. லுன்ஜாலால் சோங்தட்

### கோகாமுக்:

**பிரவீன் தாஸ் & மார்கிரெட்**

**துதிக்க:** கமோன்சுக் கிராமத்தில் முதல் முறையாக சுவிசேஷம் அறிவிக்கப் பட்டுள்ளது. செங்கேலிசுட்டி கிராமத்தில் வைத்து நடைபெற்ற வெளிப்புற சந்திப்பு ஊழியத்தின் மூலம் 600 பேர் சுவிசேஷத்தைக் கேட்டுள்ளதோடு, அவர்கள் மத்தியில் சுவிசேஷ கைப்பிரதிகளும், புதிய ஏற்பாடுகளும் விநியோகிக்கப்பட்டுள்ளன. தனித்தாள் ஊழியத்தின் மூலம் 16 பேர் கிறிஸ்துவைக் குறித்து கேள்விப்பட்டுள்ளதோடு, புதிய ஏற்பாடுகளையும் ஆர்வமுடன் பெற்றுச்சென்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சியின் மூலம் சத்திய வசனத்தைக் கேட்டிருப்போர் அதை விசுவாசிக்க தங்களது உள்ளங்களில் இடங்கொடுக்க; தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கையிட காத்திருக்கும் அன்சுவர் மற்றும் அவரது மனைவி சிந்தி, தேம்ஸ் மற்றும் அவரது மனைவி ஃபுல்குமாரி ஆகியோருக்கு அவர்களது வீட்டார் மூலம் இருக்கும் எதிர்ப்புகள் மறைய; உபத்திரவங்களின் மூலம் விசுவாசத்திலிருந்து பின்மாற்றமடைந்து ஆலயம் வராமலிருக்கும் ரோமுகுன்தா மற்றும் அவரது மனைவி மீண்டும் விசுவாசத்தோடு ஆராதனைகளுக்கு வரத்தொடங்க; குடிப்பழக்கத்திற்கு அடிமையாகியிருப்போர் அப்பழக்கத்தி லிருந்து விடுபட; விசுவாசத்தில் பின் மாற்றமடைந்திருப்போர் மீண்டும் மனந் திரும்பி கிறிஸ்துவை விசுவாசிக்க ஜெபிப்போம்.

### மஜுலி:

**பாகிரதி பிசோயி & லால்மணி**

**துதிக்க:** சுவிசேஷத்தைக் கேட்டு 2 பேர் விசுவாசிகளாகி, கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். இங்கு இரவுநேர ஜெபக்கூட்டங்கள், உபவாச ஜெபக்கூட்டங்கள் மற்றும் சிறுபிள்ளைகளுக்கான ஆவிக்குரிய கூட்டங்கள் யாவும் ஆசீர்வாதமான முறையில் நடத்தப்பட்டுள்ளன. விசுவாசிகளின் வீடுகளை இடித்துப் போட நினைத்த மய்ஷா மாரா கிராம மக்களிடமிருந்து நமது விசுவாசி களையும், அவர்களது வீடு மற்றும் உடைமைகளையும் தேவன் பாதுகாத்து தந்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது புதிய விசுவாசி நபஜி யாதியின் குடும்பம் கிறிஸ்துவில் வளர; நமது விசுவாசிகளை உபத்திரவப் படுத்தும் கிராமச்செயலர் பத்ரா காந்தோ மற்றும் பனா கும்பங், ஜியோன், குணா, மிஞ்சியாதி, தமாரி, யங்மாலுங், சிக்காரி, பமே டோலி ஆகியோர் மனந் திரும்பி கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

ஜூன் 21 புதன்

உபவாச ஜெபநாள்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. கெத்சியா பால்ராஜ்
திரு. ஜாண் குமார் C.
திருமதி. சுவேரா மார்த்தாபெஹன் போடார்

## சத்தீஸ்கட்

### துர்கொண்டல்:

### பாஜி முர்மு & வயலட் ஹன்ஸ்தா

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளதில், 80 பேர் இயேசுவைக் குறித்து அறிந்துள்ளனர். குட்டியா, சின்பால் ஆகிய கிராமங்களிலிருந்து 2 புதிய தொடர்பாளர்கள் கிடைத்துள்ளனர். 4 நாட்கள் ஜெபக்கூடுகைகளும், ஒரு இரவுநேர ஜெபக்கூடுகையும் இப்பகுதி கிராமங்களில் நடத்தப்பட்டுள்ளன. நமது விசுவாசிகளே இல்லாத இப்புதிய பகுதிக்கு நமது ஊழியர்கள் சமீபத்தில் இடமாற்றம் பெற்று வந்திருக்கின்ற போதிலும், இவ்விடத்தில் புதிதாக ஊழியத்தை நல்லமுறையில் ஆரம்பிக்க தேவன் அவர்களுக்குப் பாராட்டியுள்ள தயவிற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இப்புதிய பணித்தளத்தில் ஊழியத்திற்கான வாசல்கள் நன்கு திறக்கப்பட; மண்டியா கோண்ட் இனமக்கள் சுவிசேஷத்திற்குச் செவிசாய்க்கவும், அவர்கள் பாவக்கட்டுகளிலிருந்து விடுபட்டு கிறிஸ்துவை இரட்சகராக விசுவாசிக்கவும்; ஊழியத்தை நிறுத்த நமது மிஷனரிகளுக்கு எதிராகச் செயல்படும் மதத்தீவிரவாத மக்கள் மனந்திரும்ப; இப்பகுதியிலிருக்கும் 178 கிராமங்களுக்குச் சுவிசேஷம் சென்றடையும் வாய்ப்பு கிடைக்க; குறைந்தபட்சம் 10 குடும்பங்களையாவது விசுவாசத்தின் மூலம் கிறிஸ்துவண்டை வழிநடத்த நமது ஊழியர்களுக்கு தேவ அநுக்கிரகம் கிடைக்க ஜெபிப்போம்.

### லுடேக்: கருணாகரன் & எலிசபெத்

**துதிக்க:** புதிதாக 10 கிராமங்களில் தேவ வார்த்தை அறிவிக்கப்பட்டிருப்பதை முன்னிட்டு, 250 பேர் முதல்முறையாக கிறிஸ்துவைக் குறித்து அறிந்துள்ளனர். அதில் 11 பேர் விசுவாசிகளாகி, தேவ மந்தையில் இணைந்துள்ளனர். 22 வேதாகமங்கள் பகிரப்பட்டுள்ளன. கடந்த ஏப்ரல் 13-ம் தேதியிலிருந்து தேவ நாம மகிமைக்காக சிவ்பூர் கிராம ஆலயக்கட்டுமானப்பணி தொடங்கப்பட்டுள்ளது. லோக்கேர் மற்றும் கட்டிடாப் கிராமங்களில் புதிய ஆராதனைக்குழுக்கள் தொடங்கப்பட்டுள்ளன. லுடேக்கில் வைத்து நடைபெற்ற ஆவிக்குரிய பெருவிழாவில் கலந்துகொண்ட நமது விசுவாசிகளுக்கு அது மிகுந்த ஆசீர்வாதமாக இருந்துள்ளது. அம்பரிபக்கா காசநோயிலிருந்து சுகம் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது சுதேச ஊழியரான எலிசு ஊழியத்தை விட்டுச்சென்றுவிட்டதால், அவரது பிரிவு நமது விசுவாசிகளை அவர்களது விசுவாசத்திலிருந்து இடறச்செய்யாமலிருக்க; புதிதாகக் கட்ட ஆரம்பித்துள்ள ஆலயக்கட்டுமானப்பணி மழைக்காலத்திற்கு முன்பாக முடிவடைய; மார்பகக்கட்டி பிரச்சினையிலிருந்து ஜெயா அற்புத சுகம் பெற; தவ்நாரா கிராமத்தில் ஆலயம் கட்ட தகுந்த நிலம் கிடைக்க; விடுமுறை வேதாகமப்பள்ளி நிகழ்ச்சியில் பங்கேற்ற சிறுபிள்ளைகள் தங்களது ஆவிக்குரிய வாழ்வில் நன்கு வளர ஜெபிப்போம்.

**ஜூன் 22 வியாழன்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஷண்முகம் R.S.
செல்வி. ஈவ்லின் பாக்கியா
திரு. மகேந்திரன் A.

## பையாதன் - 2:

### தாங் சின் லியான் & உங் தியான்சிங்

**துதிக்க:** புதியவர்கள் 3 பேர் விசுவாசிகளாகி, தேவ மந்தையில் இணைந்துள்ளனர். 5 கிராமங்களில் வாழும் 42 பேருக்கு கிறிஸ்துவின் நற்செய்தி பகரப்பட்டுள்ளது. வீடு சந்திப்பின் மூலம் 10 குடும்பங்கள் ஆவிக்குரிய உற்சாகம் பெற்றுள்ளனர். 3 நாட்கள் உபவாச ஜெபக்கூட்டம் பயனுள்ள விதத்தில் நடத்தப்பட்டுள்ளது. கோண்ட் பகுதிக்கான திட்டக்கூடுகை கொட்டாவில் வைத்து சிறந்த முறையில் நடத்தப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இப்பணித்தளத்தில் வைத்து நடைபெறவிருக்கும் ஊழியப்பின் தொடர்பணி, இரவுநேர ஜெபக்கூட்டங்கள், இயேசுத்திரைப்பட ஊழியங்கள் யாவும் ஆசீர்வாதமாக நடைபெற; நமது புதிய தொடர்பாளர்களான பன்ஜா கிராம ராம்விலாஸ் மற்றும் சவன்ரவன் கிராம ரமேஷ் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்க; தீய ஆவியின் செயல்பாட்டினால் தனது மனைவி, பிள்ளைகளை அடித்துத் துன்புறுத்தும் ஜக்லால் அத்தீய ஆவியின் பிடியிலிருந்து அற்புத விடுதலை பெற ஜெபிப்போம்.

## கர்கோடா:

### கிங்ஸ்லி ஐசக் ஜாண்சன் & மீனா

**துதிக்க:** சுவிசேஷம் 140 பேருக்குக் கூறப்பட்டதில் 4 பேர் விசுவாசிகளாகி, கிறிஸ்துவின் மந்தைக்குள் சேர்ந்துள்ளனர். 12 பஜன் கூடுகைகள் சுமதேசாவில் வைத்து நடத்தப்பட்டுள்ளன. 5 கிராமங்களில் ஊழியப்பின்தொடர்பணிகள் சிறப்பாக நடந்தேறியுள்ளன. வாலிபர்களுக்கென ஒரு வேதாகம வகுப்பு நடத்தப்பட்டுள்ளது. இங்குள்ள மக்கள் கிறிஸ்துவின்மீது தாங்கள் கொண்டுள்ள விசுவாசத்தை அறிக்கையிடுவதற்காக சிறப்பான ஆராதனையொன்று நடத்த தேவன் பாராட்டியுள்ள கிருபைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள தங்களுக்கு இருக்கும் சமூகத்தடைகளை ரத்தியா இனமக்கள் வெற்றிகரமாக மேற்கொள்ள; எதிர்ப்பைக் கண்டு சோர்படையாமல் முன்னேறிச் செல்லும் ஊழிய அர்ப்பணமுள்ள நல்ல ஊழியர்கள் கிடைக்க; ருக்மணி மற்றும் சுக்ரிதா தெளிந்த புத்தியடைய; இளவயது விசுவாசிகளுக்கு நல்ல கிறிஸ்தவ வாழ்க்கைத்துணைகள் அமைய; முதுகுத்தண்டுவடப் பிரச்சினையிலிருந்து அஞ்சலிக்கு பூரண நிவாரணம் கிடைக்க ஜெபிப்போம்.

## *பேச வைத்த ஜெபம்!*

*ராஜஸ்தான், சாம்ராணியா பணித்தளம். 15 வயது நிரம்பிய பெண் ரேணுபாய் தனக்கு ஏற்பட்ட பெலவீனத்தினிமித்தம் பேசும் திறனை இழந்தாள். அவளது பெற்றோர்கள் மந்திரவாதிகளிடம் சென்று பூஜை செய்தும், மருத்துவர்களிடம் சென்று மருந்து சாப்பிட்டும் அவளுக்கு சுகமேதும் கிடைக்கவில்லை. பல சிரமங்களைக் கடந்து இறுதியில் லுகாரி திருச்சபையினரிடம் வந்தனர். விசுவாசிகள் அவளுக்காக ஊக்கமாய் ஜெபித்தனர். தேவ கிருபையால் அவள் சுகமாகி நன்குப் பேச ஆரம்பித்தாள். இப்போது அவளது முழு குடும்பமும் கிறிஸ்துவில் தங்களது விசுவாசத்தை அறிக்கையிட்டு, தேவ நாமத்தை மகிமைப்படுத்தி வருகின்றனர். அல்லேலூயா!*




### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. அஜய்குமார் லிமா
திருமதி. மீனா கிங்ஸ்லி ஐசக் ஜாண்சன்
திருமதி. பிரபினா ராணி பிஸ்வோ ரஞ்சன்
திரு. ராமசாமி V. ஜெரோம்

### வாட்ராஃப் நகர்:

**பூபதி & பாலின் மேரி**

**துதிக்க:** ரூப்பூர் கிராமத்தில் வாழும் 25 பேருக்குப் புதிதாகச் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. 2 புதிய ஏற்பாடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. சீதா தீய ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். எதிர்ப்பினிமித்தம் கிராமத்திற்குள் மிஷனரிகள் செல்ல முடியாத சூழ்நிலையிலும் நமது விசுவாசிகள் மிஷனரிகளைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, தங்களது தேவைகளுக்காக ஜெபிக்கக் கேட்டுக்கொண்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வத்ராஃப் நகரைச் சார்ந்த 120 கிராமங்களுக்கும் சுவிசேஷம் எவ்வித தடையுமின்றி அறிவிக்கப்பட; 5 புதிய ஆராதனைக்குழுக்கள் தொடங்கப்பட; 25 பேரைப் புதிதாக தேவனுடைய மந்தைக்குள் சேர்க்க; பின் மாற்றமடைந்திருப்போர் கிறிஸ்துவை விசுவாசிக்க ஆரம்பிக்க; சுவிசேஷத்தை எதிர்ப்போர் தேவ அன்பால் தொடப்பட; எதிர்ப்பினிமித்தம் மிஷனரிகளும் விசுவாசிகளும் நேருக்குநேர் சந்திக்க முடியாமலிருக்கும் சூழ்நிலைகள் மாற ஜெபிப்போம்.

## ஒடிசா

### ராய்ரங்பூர்:

**சாமுவேல் J. & ஹவிலா பரமானந்த்**

**துதிக்க:** தேவ தயவால் சப்-கலெக்டர் மற்றும் நீதிபதியின் உதவியினால் குச்சேபால் நீதிமன்ற வழக்கு வெற்றிகரமாக முடிந்து, தற்போது விடுதலையுடன் தேவனை ஆராதிக்க வாய்ப்பு கிடைத்துள்ளது. காவல்துறையினரின் துணையுடன் சுனமாரா ஆலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. குச்சேபால் ஆலயமும் எவ்வித பிரச்சினையுமின்றி பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. டொங்காபானி ஆலயக் கட்டுமானப்பணி துவங்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிராம மக்களின் எதிர்ப்புகளிலிருந்து குச்சேபால் கிராம விசுவாசிகள் முழு விடுதலை பெற; நமது விசுவாசியொருவரின் வீட்டைத் தகர்த்திட உறுதியெடுத்திருக்கும் மதன் முண்டுயா மனம் மாற; தம்டியா குடும்பங்கள் பயமின்றி ஞாயிறு ஆராதனைகளில் கலந்துகொள்ள; மணி மராண்டிக்கு மழலை பாக்கியம் கிடைக்க; நீரிழிவு மற்றும் இரத்தக்கொதிப்பு பிரச்சினைகளிலிருந்து ரய்மத் டுடுவிற்கு பூரண சுகம் கிடைக்க; தூக்கமின்மை மற்றும் குடும்பப்பிரச்சினைகளிலிருந்து கீத்தல்லி டுடுவிற்கு சுமூகமான தீர்வு பிறக்க; சிங்கு டுடு சிறுநீரகப் பாதிப்பிலிருந்து அற்புத சுகமடைய ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. பால்ராஜ் ஆபிரகாம் P.
திருமதி. பிரத்யாசினி லிமா அஜய்குமார்
திருமதி. ரஸ்மித்தா ராணி ரவுத் ஹேமந்தா

# குஜராத்

## பாவ்நகர்:

### அகிலேஷ் குமார் & கிரண்தேவி

**துதிக்க:** இப்பணித்தள திருச்சபையில் 3 புதிய விசுவாசிகள் இணைந்துள்ளனர். ஒரு கிராமம் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளது. 20 புதிய ஏற்பாடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. சுகப்பிரசவத்தின் மூலம் ரேகாபேன் அழகிய ஆண்குழந்தையைப் பெற்றெடுத்துள்ளார். ஒரு மாதக் காலமாக காய்ச்சலினால் அவதிப்பட்டுவந்த ராம்ஹித் குமாரின் மனைவி குஷ்புபேன் பூரண சுகமடைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிறுவயதிலிருந்தே பேசும் திறனற்றிருக்கும் தீபக்பாயின் மகன் அற்புத சுகமடைய; ராஜ்குமாரி மற்றும் சரிதாபேனிற்கு குழந்தை பாக்கியங்கள் கிடைக்க; பிசம்பர்பாயின் குடும்பத்தார் இனந்தெரியாத வியாதிப்பிரச்சினையிலிருந்து விடுபட; விசுவாசிகள் தங்களது விசுவாசத்தை தைரியமாக அறிக்கையிடுவதற்கென நடத்தவிருக்கும் கூடுகை திட்டமிட்டுள்ளபடி சிறந்த முறையில் நடைபெற்று முடிய ஜெபிப்போம்.

## ஆரவல்லி பிராந்தியம்:

### ஐசக் ராஜா & மேக்தலின் கிரேஸ்

**துதிக்க:** புதிதாக 12 கிராமங்களில் சுவிசேஷம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. 8 திருச்சபைகள் உருவாக்கப்பட்டுள்ளன. மக்ரா கிராம சாந்திலால் பக்கவாதத்திலிருந்து சுகம் பெற்றுள்ளார். ஜெபத்தின் மூலம் பாவ்ரிபாய் வலிப்பு நோயிலிருந்து சுகமடைந்துள்ளார். சுனில் மற்றும் ஜுமாலிபேன் இரத்தவாந்தியெடுக்கும் பிரச்சினையிலிருந்து அற்புத சுகம் பெற்றுள்ளனர். காதுகேளாமலும், வாய்ப்பேச முடியாமலும் இருந்த நிலேஷ் தற்போது ஜெபத்தின்மூலம் கேட்கும், பேசும் திறன்களைப் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிறுநீரகக்கல் பிரச்சினையிலிருந்து சோனாவும், ஷில்பாவும் சுகம் பெற; நமது சுதேச ஊழியர் காந்தியின் மனைவி கங்குபேன் நுரையீரல் பிரச்சினையிலிருந்தும், மற்றொரு சுதேச ஊழியர் அசோக்கின் மனைவி அமரிபேன் சரீரக்கட்டி பிரச்சினையிலிருந்தும் சுகமடைய; சக்லால், போஜ்யா, கனுவாடா மற்றும் மோவடி கிராமங்களில் புதிய திருச்சபைகள் உருவாக்கப்பட; ராஜ்குமார் புற்றுநோயிலிருந்தும், பூமி, சிந்துபாய் மற்றும் தினேஷ்பாய் மனநிலை பாதிப்பிலிருந்தும் சுகமடைய; மான்சா பணித்தளத்தைச் சார்ந்த வாக்ரி இன குழந்தைகளுக்கென ஒரு சிறுவர் பராமரிப்பு மையம் தொடங்குவதற்கான தேவைகள் சந்திக்கப்பட; முகேஷ்பாய், கைலாஷ்பேன், விஷால், பல்தேவ், ஆகாஷ் மற்றும் ராஜ் இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; இறையியல் கல்லூரிக்குச் சென்று படிக்க விரும்பும் அரவிந்த்பாயின் எதிர்காலம் ஆசீர்வதிக்கப்பட; லக்கன்பூர் ஆலயக்கட்டுமானப்பணி மீண்டும் தொடங்கப்பட ஜெபிப்போம்.

## ஜூன் 25 ஞாயிறு

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஜெனிலா பொன்மலர் செலின்
திருமதி. பிரியா ஹெத்ஸி

### மெஹசானா:
### சம்புநாத் நாயக் & ராஜேஸ்வரி

**துதிக்க:** ஒரு காலத்தில் பாரம்பரிய இந்து குடும்ப ஜோதிடனாக இருந்து கிறிஸ்தவ கருத்துக்களை எதிர்த்து வந்த வினோத் ஸ்ரீமாலி, தற்போது வேதத்தை வாசிக்கவும், கிறிஸ்துவை அறிந்து கொள்ளவும் வாஞ்சை காட்டுகிறார். விரால்பேன் தனது விசுவாச வாழ்வில் நன்கு வளர்ந்து வருகிறார். ஃபுதேடா கிராம விசுவாசிகள் விசுவாசத்தில் உறுதியாக வளர்ந்து கிறிஸ்துவைக் குறித்தும், அவரது மாபெரும் தியாகத்தைக் குறித்தும் அறிய அதிக வாஞ்சை காட்டி வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவை அறிந்துகொள்ள ஆர்வம் காட்டும் வினோத் ஸ்ரீமாலி இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொள்ள; ஆகாஷ் ஸ்ரீமாலிக்கு கிறிஸ்துவுக்குள் வாழும் நல்ல வாழ்க்கைத்துணை அமைய; சோனல்பேனிற்கு வயிற்றுப்புண் பிரச்சினையிலிருந்து பூரண சுகம் கிடைக்க; மனநிலை பாதிப்பிலிருந்து தினேஷ் சுகமடைய; கீதாபேன் பட்டேல் மற்றும் சந்திரிகா தங்களது விசுவாச வாழ்வில் நன்கு வளர ஜெபிப்போம்.

### சூரத்: ஜெபதங்கம் & மாதவராய்

**துதிக்க:** முதல்முறையாக 20 பேர் இயேசுவின் நற்செய்தியைக் கேட்டுள்ளனர். 2 புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. 16 இரவுநேர ஜெபக்கூடுகைகளும், 8 நாட்கள் எழுப்புதல் கூட்டங்களும் நடத்தப்பட்டுள்ளன. நடக்க முடியாமலிருந்த ராம்பாய் ஜெபத்தின் மூலம் நடக்க ஆரம்பித்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கௌதம் நகர் ஆலயப்பிரச்சினை விரைவில் தீர்க்கப்பட; குடிப்பழக்கத்திலிருந்தும், தற்கொலை சிந்தையிலிருந்தும் சங்கீதாவின் கணவர் மீட்கப்பட; புற்று நோயிற்கான அறுவை சிகிச்சையை மேற்கொண்டிருக்கும் திலீப்பாய், அப்பெலவீனத்திலிருந்து சீக்கிரமாக மீண்டு வர; ஜெபத்தின் மூலம் மனச்சோர்பிலிருந்து விடுதலை பெற்று, தற்போது விசுவாசத்திலிருந்து பின்மாற்றமடைந்து, குருக்களை நாடிச் செல்லும் பிரியங்கா மீண்டும் கிறிஸ்துவின் அன்பிற்குள் வர; துணி வியாபாரம் மந்தமாகி வரும் நிலையில், பிற தொழில்களைத் தேடி இடம்பெயர்ந்து செல்லும் நமது விசுவாசிகளுக்காக ஜெபிப்போம்.

### முடிவுக்கு வந்த போராட்டம்!

*வட கிழக்கு மண்டலப் பணித்தளங்களைச் சார்ந்த பிலாங் ஜமுதா 2013-லிருந்து மனநிலை பாதிப்பிற்குள்ளானார். அநேக பூஜைகள் இவர் பேரில் செய்யப்பட்டும், ஏராளமான மருந்துகளை உட்கொண்டும் பலனேதுமில்லை. இவருடைய வீட்டிலும் அதிகமான சத்துருவின் போராட்டம் காணப்பட்டது. கடந்த மார்ச் மாதம் 4-ம் தேதி தங்கர்ஜோடா திருச்சபையிலுள்ள விசுவாசியொருவர் இவருடைய கணவருடன் சுவிசேஷத்தைப் பகர்ந்து கொண்டார். அதன் விளைவாக அவர் விசுவாசியிடம், 'என் மனைவி சுகமடைந்தால், நாங்கள் குடும்பமாக கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்வோம்' என்றார். மிஷனரிகளும், விசுவாசிகளும் கூடி ஜெபித்த ஜெபத்தைக் கேட்டு தேவன், ஜமுதாவிற்கு பூரண சுகமளித்தார். தேவனுக்கே மகிமை!*




பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. இம்மானுவேல் கார்த்தி P.

# தாத்ரா & நகர் ஹவேலி

### சில்வாசா: டேவிட்சன் ராஜாசிங் & கண்மணி பரிமளம்

**துதிக்க:** தேவ வார்த்தை 14 கிராமங்களில் பறைசாற்றப்பட்டதை முன்னிட்டு, 858 பேர் இயேசுவைக் குறித்து முதல்முறையாக அறிந்துள்ளனர். தேவ நாம மகிமைக்காக ஓர் ஆலயம் கட்டப்பட்டுள்ளது. 4 கிராமங்களில் சபை மூப்பர்களுக்கான கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. கவ்சா, பட்டி, போந்தா ஆகிய இடங்களில் வாலிபர்களுக்கான வேதாகம வகுப்புகள் முறையே நடத்தப்பட்டுள்ளன. சாலாபேன் மற்றும் ரதிபேன் பாம்புக்கடியிலிருந்து பாதுகாக்கப்பட்டுள்ளனர். மகேந்திரா குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுதேச ஊழியர் லக்குபாயின் மனைவி சத்ருபேன் தனக்குச் செய்யப்பட்டுள்ள முதுகுத்தண்டுவட அறுவை சிகிச்சையின் பெலவீனத்திலிருந்து விரைவில் முழு சுகம் பெற; சத்ருபேனின் மகன் அஜய்பாய், அனில்பாய், ஜெஸ்வந்த்பாய், சோட்டுபாய் ஆகியோர் ஞாயிறு ஆராதனைகளில் உற்சாகமாகப் பங்கெடுக்க; சவிதாபேனிற்கு மழலை பாக்கியங்கள் கிடைக்க ஜெபிப்போம்.

# மகாராஷ்டிரா

### அக்கல்குவா: ஜக்மோகன் சிங் & ஸ்வாதி

**துதிக்க:** சுவிசேஷம் 7 கிராமங்களில் அறிவிக்கப்பட்டுள்ளதில், 544 பேர் இயேசுவைக் குறித்து அறிந்துள்ளனர். 40 நாட்கள் தொடர்ச்சியாக 12 மணிநேர சங்கிலித்தொடர் ஜெபம் சிறப்பாக நடந்து முடிந்துள்ளது. 27 நாட்களாக தொடர் காய்ச்சலினால் கஷ்டப்பட்ட விஷால் ஜெபத்தின்மூலம் நன்கு சுகமடைந்துள்ளார். வலம்பா கிராமத்தில் ஜெபக்குழுவொன்று உருவாக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வரும்நாட்களில் நடத்தத் திட்டமிடப் பட்டுள்ள கூடுகைகள், இயேசுத்திரைப்பட ஊழியங்கள், ஞாயிறு ஆராதனைகள் யாவும் நல்லமுறையில் நடந்தேற; துர்காபாய் மீண்டும் கண்பார்வையடைவும், குலாப்சிங் தாதா கழுத்து வீக்கத்திலிருந்து சுகமடையவும் ஜெபிப்போம்.

### போரடி: ஓம்பிரகாஷ் & சப்னா

**துதிக்க:** ஹத்தேடாபாடா, குவா, பிப்ரிபாடா மற்றும் பல்குவா கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதை முன்னிட்டு, 204 பேர் கிறிஸ்துவைக் குறித்து கேள்விப்பட்டுள்ளனர். 111 புதிய ஏற்பாடுகளும், 10 ஆவிக்குரிய பிற புத்தகங்களும் மக்களிடையே பகிரப் பட்டுள்ளன. இப்பணித்தளத்தைச் சுற்றி அமைந்திருக்கும் பற்பல இடங்களில் உபவாச ஜெபங்கள் முறையே நடத்தப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மோதிலால், துமாடியோபாய் மற்றும் ராகேஷ்பாய் மனநிலை பாதிப்பிலிருந்தும், பிரேம் மற்றும் சாந்தேஷ் அம்மைக்கட்டு நோய்ப்பிரச்சினையிலிருந்தும் சுகமடைய; அர்ப்பண், திம்ரியாபாய் மற்றும் சாராதாபாய் தங்களது கால் காயங்களிலிருந்து சுகம் பெற; ரஞ்சனாபாய் மற்றும் மாயாபாய் வெள்ளைப்படுதல் பிரச்சினையிலிருந்தும், குஷாமாபாய் குடற்புழு நோய்த்தொற்றி லிருந்தும், ஜோதிபாய் பக்கவாதநோய்ப் பிரச்சினையிலிருந்தும் சுகமடைய; உமர்தா, புடக்கி விகிர் மற்றும் கொடிதா கிராமங்களில் நடந்துவரும் ஆலயக்கட்டுமானப்பணிகள் சீக்கிரத்தில் முடிவடைய ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. சார்லெட் ஜெசிந்தா செல்வின்
திருமதி. லில்லி ராணி வின்செண்ட் பிரேம்ராஜ்
திருமதி. லுன்சிங் N.

## சாலீஸ்காவ்:

**திம்மண்ணா தீமோத்தேயு & மமதா நான்சி**

**துதிக்க:** சுவிசேஷம் முதல்முறையாக 6 கிராமங்களில் பறைசாற்றப்பட்டுள்ளதி னிமித்தம் 450 பேர் இயேசுவைக் குறித்து கேள்விப்பட்டுள்ளனர். 12 வேதாகமங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. 80 சிறுபிள்ளைகள் விடுமுறை வேதாகமப்பள்ளி நிகழ்ச்சியில் கலந்துகொண்டுள்ளனர். ஜெபத்தின் மூலம் லதாதயிற்கு கர்ப்பப்பை அறுவை சிகிச்சையும், ஜங்காபாயிற்கு கண் அறுவை சிகிச்சையும் பாதுகாப்பான முறைகளில் நடந்து முடிந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** முகத் கிராமத்தில் எவ்வித இடையூறுமின்றி தொடர்ச்சியாக ஜெபக் கூட்டம் நடத்தப்பட; பாபு புற்றுநோய்ப் பிரச்சினையிலிருந்தும், மங்கள்பாய், சதீஷ் மனவளர்ச்சியின்மையிலிருந்தும் விரைவில் சுகமடைய; சுவிசேஷ எதிர்ப்பாளர்களிடமிருந்து நமது ஊழியர் களுக்கும், விசுவாசிகளுக்கும் நல்ல பாதுகாப்பு கிடைக்க ஜெபிப்போம்.

## மொல்கி & நர்மதா:

**பரணிதரன் & செல்வராணி**

**துதிக்க:** புதிதாக 2000 மக்கள் சுவிசேஷத்தைக் கேட்டுள்ளனர். அதில் 10 பேர் கிறிஸ்துவை விசுவாசித்து இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். வாவ்ரா, அல்பாடா, கும்பிமால், குப்பா ஆகிய கிராமங்களில் வெளிப்புற சந்திப்பு ஊழியக்கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. 45 பிள்ளைகள் விடுமுறை வேதாகமப் பள்ளி நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு தேவாசீர்வாதம் பெற்றுள்ளனர். பெண்கள் ஜெபக்கூடுகைகள் தொடர்ச்சி யாக நடைபெற்று வருகின்றன. நமது விசுவாசி குன்சிங்கின் மகளுக்கு அரசாங்க செவிலியர் பணி கிடைத்ததை முன்னிட்டு, குன்சிங் தனது விசுவாசத்தில் ஒருபடி முன்னேறியுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குலாபிபாய் கிறிஸ்துவை சொந்த இரட்சகராய் ஏற்றுக்கொள்ள; தோல் ஒவ்வாமை பிரச்சினையிலிருந்து சிறுமி ஈசாவிற்கு நல்ல சுகம் கிடைக்க; தங்களது விசுவாசத்தை வெளிப் படையாக அறிக்கையிட காத்திருப்போர் தங்களது தீர்மானத்தில் உறுதியா யிருக்க; 15 இடங்களில் நடத்தப்பட்ட விடுமுறை வேதாகமப்பள்ளி நிகழ்ச்சி களில் பங்கெடுத்த பிள்ளைகளின் ஆவிக்குரிய வாழ்வு செழித்தோங்க; லலிதாவிற்கு குழந்தை பாக்கியம் கிடைக்க; சபை மூப்பர்கள் மற்றும் ஜெபக்குழு தலைவிகளுக்கென நடத்தப்பட்ட பயிற்சிகள் மூலம் அதில் கலந்துகொண்டவர்களின் வாழ்வில் நல் ஆவியின் கனியுள்ள வாழ்வு மலர ஜெபிப்போம்.

ஜூன் 28 புதன்

உபவாச ஜெபநாள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. டேவிட் ராஜாசிங் T.
திருமதி. செல்வி தெய்வநாயகம்

## முக்காடா: M. சங்கர் & ஆனந்தி

**துதிக்க:** சுவிசேஷத்தை 30 பேர் முதல் முறையாகக் கேட்டுள்ளனர். 4 புதியவர்கள் விசுவாசிகளாகி, கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். 10 வேதாகமங்கள் மக்களிடையே பகிரப்பட்டுள்ளன. ஆஷா மற்றும் டோலேரா கிராமங்களில் வெளிப்புற சந்திப்பு ஊழியம் மூலம் சுவிசேஷம் பரவியுள்ளது. கோஸ் கிராமத்தில் புதியதொரு ஆராதனைக்குழு உருவாகியுள்ளது. புதிய தொரு பெண்கள் ஜெபக்குழுவும் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. ஜெபத்தின் மூலம் அதிகப் படியான இரத்தப்போக்கிலிருந்து விமல் சுகம் பெற்றுள்ளார். திலீப், லக்ஷ்மண் ஆகியோரின் குடும்பத்தில் குழந்தை பாக்கியம் கிடைத்துள்ளது. மயக்க நிலையிலிருந்த அஜய்யின் 6 வயது மகளுக்கு ஜெப எண்ணெயைப் பூசி ஜெபித்ததின் மூலம் அவள் அற்புத சுகம் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கத்தரி, கோலி மற்றும் வார்லி இனமக்கள் மத்தியில் சுவிசேஷத்தின் மூலம் நல்லதொரு தாக்கத்தை உருவாக்க; பொஷிரா ஆலயம் மற்றும் பிற ஆராதனைக் குழுக்களில் சபை மூப்பர்களாகப் பணிபுரிய தகுந்த ஆட்கள் தெரிந்தெடுக்கப்பட; நமது விசுவாசிகளை விசுவாசத்திலிருந்தும், சத்திய கோட்பாடுகளிலிருந்தும் பிரித்து கொண்டுச்செல்லும் தன்னிச்சையாக இயங்கும் பிற சபை மக்கள் மனந்திரும்ப; சிவராம், மனிஷா, சகுனி, கல்பேஷ், கங்காராம், விமல் ஆகியோரின் குடும்பத்தார் இரட்சிக்கப்பட; பர்தேசியாமெத், மொரந்தா மற்றும் பாவர்பாடா கிராம திருச்சபை மக்களைச் சோர்படையச் செய்வோர் மனந்திரும்ப ஜெபிப்போம்.

## ஜிம்மலாகட்டா:
### ஸ்ரீனிவாசா & சுனிதா

**துதிக்க:** கிறிஸ்துவின் நற்செய்தி 300 பேருக்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள ஆலயக்கட்டுமானப்பணி நன்கு நடைபெற்று வருகிறது. 5 புதிய ஏற்பாடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. 12 இடங்களில் வேதாகம வகுப்புகள் முறையாக நடத்தப்பட்டுள்ளன. ஒரு கிராமத்தில் வெளிப்புற சந்திப்பு ஊழியம் பெருமளவில் நடத்தப்பட்டுள்ளது. பயத்தின் பிடியிலிருந்தும், அதிக இரத்தக்கொதிப்பு பிரச்சினையிலிருதும் ஷங்கரக்கா அற்புதமாகச் சுகமடைந்துள்ளார். மாரப்பள்ளி, எர்ரகடா, பெர்காபட்டி ஆகிய கிராமங்களில் விடுமுறை வேதாகமப்பள்ளி ஊழியங்கள் சிறந்த விதத்தில் நடைபெற்று முடிந்துள்ளன. இச்சிறுபிள்ளைகளின் ஊழியம் மூலம் கிறிஸ்துவை அறியாத குடும்பப்பிள்ளைகள் அநேகர் கதை, பாடல் மற்றும் குறுநாடகங்கள் மூலம் சுவிசேஷத்தைக் கேட்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** எர்ரகடா கிராமத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆலயக்கட்டுமானப் பணி விரைவில் முடிவடைய; பல்வேறு கிராமங்களைச் சார்ந்த நமது புதிய தொடர்பாளர்கள் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்கவும், தங்களது விசுவாசத்தை கிறிஸ்துவில் அறிக்கையிடவும்; திருமணமாகி 14 வருடங்களாகியுள்ள சந்தோஷ் & வெங்கடக்கா, 10 வருடங்களாகியுள்ள திலீப் & லக்ஷ்மி மற்றும் சுகுமார் & மாதுரி தம்பதி களுக்கு குழந்தை பாக்கியங்கள் அருளப்பட; 4,500 பேரைச் சுவிசேஷத்தினால் சந்திப்பது, 50 விசுவாசிகளையும் 2 ஆராதனைக்குழுக்களையும் உருவாக்குவது மற்றும் ஒரு ஆலயம் கட்டுவது போன்ற ஊழிய இலக்குகளை ஜெபத்துடன் எட்டிப்பிடிக்க ஜெபிப்போம்.

ஜூன் 29 வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஜெபதங்கம் மாதவராய், திரு. பால்ராஜ் P.
திரு. வடேகர் திலீப்பாய் ரங்குபாய்
திருமதி. சோனியா ராணி ஜெனா
திரு. மின்ட்டு குட்டும், திருமதி. மன்னா சிங்

## கர்நாடகா

### கானாப்பூர்: வினயராஜ் & சாந்தா

**துதிக்க:** இப்பணித்தள மிஷனரி திரு. வினயராஜ் ஜெபத்தின் மூலம் தனது சுகவீனத்திலிருந்து நன்கு சுகமடைந்து வருகிறார். 4 வேதாகமங்களும், 6 புதிய ஏற்பாடுகளும் விசுவாசிகளினால் தன்னார்வமாகப் பெறப்பட்டுள்ளன. சிநேகா, நிக்கிதா மற்றும் மஞ்சுளா புதிதாக ஆலய ஆராதனைகளுக்கு வருகை தர ஆரம்பித்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** முழங்கால் தசைநார் கிழிந்திருக்கும் பிரச்சினைக்கு அறுவை சிகிச்சை செய்ய மருத்துவ ஆலோசனையைப் பெற்றிருக்கும் நமது ஊழியர் வினயராஜின் இளைய மகன் சாமுவேல் ஜாய்சனுக்கு விரைவில் நல்ல சுகம் கிடைக்க; நமது விசுவாசி பசவராஜின் தந்தை பசப்பா பட்டிலுக்கு இருக்கும் புண்கள் எளிதில் குணமாக; சமீபத்தில் தாயை இழந்திருக்கும் பெக்காவத் கிராம நமது விசுவாசி சிவரஞ்சினியின் குடும்பத்தாருக்கு மனஆறுதல் கிடைக்க; அடிக்கடி வரும் பெலவீனங்களிலிருந்து பீனா முழு சுகம் பெற ஜெபிப்போம்.

### கோலார்: சாமுவேல் பெபர்தா

**துதிக்க:** கோகிலு கிராமத்தைச் சார்ந்த நமது விசுவாசி ரோஜாவிற்கு அழகிய பெண் குழந்தை பிறந்துள்ளது. புதிய விசுவாசியான வஸ்மதியா கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளார். சத்ரகோடா ஹள்ளி கிராமத்தில் வைத்து நடைபெற்ற இரவுநேர ஜெபக்கூட்டத்தில் 15 பெண்கள் கலந்துகொண்டு தேவாசீர்வாதம் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜெயாம்மாவின் இரட்சிப்பிற்காக; நமது விசுவாசி நாராயம்மா தனது கண்களிலிருக்கும் பெலவீனத்திலிருந்து பூரண குணமடைய; தேவப்பணியில் உற்சாகமாக ஈடுபட சபைத் தலைவர்களுக்கும், மூப்பர்களுக்கும் தேவ ஆவியானவரின் உந்துதல் கிடைக்க; விவசாய தொழில் செய்யும் நமது விசுவாசிகள் இக்கோடைக்கால வெயிலின் தாக்கத்திலிருந்து பாதுகாக்கப்பட; பெஞ்சனஹள்ளி மற்றும் கீஞ்சபுரா கிராமங்களில் விசுவாச வாழ்வில் பின்னடைந்திருப்போர் மீண்டும் கிறிஸ்துவை விசுவாசிக்க ஆரம்பிக்க ஜெபிப்போம்.

## *நடக்க வைத்த நாதர்!*

*குஜராத், சூரத் பணித்தளம். நமது மத்தியப் பிரதேச மாநில விசுவாசிகளான லக்கன்பாய் & மம்தாபேன் இங்குள்ள ஆலயத்திற்கு ராம்பாயை அழைத்து வந்தனர். அவருடைய சரீர பெலவீனத்தினிமித்தம் அவரால் சீராக நடக்க முடியாமலும், எந்த வேலையையும் செய்ய முடியாமலும் இருந்தது. பல நாட்கள் ஜெபத்திற்குப்பின் தேவ நாமம் மகிமைப்படும்படியாக ராம்பாய் முழு சுகமடைந்தார். அவர் தற்போது எவருடைய உதவியுமின்றி தானாகவே நடப்பதோடு, தனது மனைவியுடன் வந்து நமது ஆலய ஆராதனைகளில் கலந்து கொள்கிறார். அல்லேலூயா! இத்தம்பதியருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க ஜெபிப்போம்.*

## ஜூன் 30 வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. அசரியா ராஜ்குமார்
திரு. வெங்கடேசன் C. கிரசன்ஸ்
திரு. விக்னேஷ்வரன் N., திரு. ஷிஷு பால்

# தமிழ்நாடு

### செங்கம்: K.S. ஜாஷ்வா

**துதிக்க:** ஊழியப்பயிற்சிகள் 9 ஆலயங்களைச் சார்ந்த சபை மூப்பர்களுக்கும், மற்றும் 3 நாட்கள் சுதேச ஊழியர்களுக்கும் சிறந்த முறையில் கொடுக்கப்பட்டுள்ளன. திருமணமாகி 4 வருடங்களுக்கு பிறகு உமா தேவ கிருபையால் குழந்தை பாக்கியமடைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வரும்நாட்களில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள சுதேச ஊழியர்களுக்கான பயிற்சி நல்ல முறையில் நடந்தேற; சபை மூப்பர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சியில் பங்கேற்ற 21 பேருக்கு அது ஆசீர்வாதமான பலனைத் தர; பியூலாவிற்கு குழந்தை பாக்கியம் கிடைக்க; மண்டல அளவில் நடைபெறும் கூடுகைகளில் சபை மூப்பர்கள் தவறாமல் பங்கெடுக்க ஜெபிப்போம்.

### இளம்பிள்ளை:
### செல்வகுமார் R. ஜோசப் வில்சன் & ஜெயா ஹெலன் ரோஸ்

**துதிக்க:** சுவிசேஷத்தைப் பருக தாகமாயிருப்போர் மத்தியில் 5 வேதாகமங்களும், 2 புதிய ஏற்பாடுகளும் விநியோகிக்கப்பட்டுள்ளன. சாலை விபத்தினின்று கல்லியப்பன் மற்றும் ஜோசப் தேவ தயவால் அற்புதமாகக் காப்பாற்றப்பட்டுள்ளனர். பூங்கொடி மற்றும் குப்புராஜ் ஜெபத்தின் மூலம் தங்களது பெலவீனங்களிலிருந்து சுகம் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஞானமுத்து மற்றும் மோனிஷாவிற்கு குழந்தை பாக்கியம் கிடைக்க; குமார், அழகம்மா மற்றும் நீலாவிற்கு தங்களது விசுவாசத்தை கிறிஸ்துவில் அறிக்கை செய்ய இருக்கும் தடைகள் யாவும் அகல; சுவிசேஷத்தை ஆர்வத்துடன் கேட்டிருக்கும் குடும்பங்கள் கிறிஸ்துவின் மீது நம்பிக்கை வைக்க ஆரம்பிக்க; நமது புதிய விசுவாசி கீதாவிற்கு நல்லதொரு வேலை கிடைக்க; சரீரக்கட்டியிலிருந்து விஜயாவிற்கு நல்ல நிவாரணம் கிடைப்பதின் மூலம் அவர்களது குடும்பத்தாரும் கிறிஸ்துவின் மீது விசுவாசம் வைக்க; பக்கிரகடை, பச்சலியூர், கலியகாவந்தனூர் ஆகிய கிராமங்களில் ஆத்தும அறுவடை பெருக; கல்லூரிகளில் படிக்கும் நமது சபை வாலிபர்கள் கர்த்தருக்குகந்த சாட்சியுள்ள வாழ்வு வாழ ஜெபிப்போம்.

### அஞ்செட்டி:
### டேவிட் நிக்கல்சன் & ஐவி

**துதிக்க:** கிறிஸ்துவை சொந்த இரட்சகராக 5 குடும்பங்களுக்கும் மேலானோர் ஏற்றுக்கொண்டுள்ளனர். புதிய ஏற்பாடுகளும், சுவிசேஷ கைப்பிரதிகளும் விநியோகிக்கப்பட்டுள்ளன. கௌரம்மா மற்றும் எஸ்தர் காய்ச்சல் நோய்த்தொற்றிலிருந்து பூரண சுகமடைந்துள்ளனர். ஜெபத்தின் வாயிலாக அநேக மக்கள் குணமடைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கர்ப்பப்பை மற்றும் இருதயக் கோளாறினால் அவதிப்படும் பிரியாவிற்காக; கௌரம்மாவின் வீடு கட்டுமானப்பணியின் தேவைகள் அனைத்தும் சந்திக்கப்பட; வரும்நாட்களில் நடக்கவிருக்கும் இயேசுத் திரைப்படம், முழு இரவு ஜெபக்கூட்டங்கள் மற்றும் ஆவிக்குரிய பிற கூடுகைகள் மூலம் நற்பலன்கள் விளைய ஜெபிப்போம்.

385 மிஷனரி ஆல்பம்



## திரு. அமரேந்திரன் & திருமதி. கௌரம்மா ஸ்வேதா குடும்பம்

திரு. அமரேந்திரன், தமிழ்நாடு – கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சார்ந்த கலிங்கவரம் என்ற கிராமத்தில் கிறிஸ்தவரல்லாத பெற்றோர்களான திரு. சிவ சங்கர் & திருமதி. சுகன்யா என்போருக்கு அன்பு மகனாக 05.04.1986–ல் பிறந்தார். இவர் 2 வயது சிறுவனாக இருக்கும்போதே தனது தந்தையை இழந்ததினால், இவரது தாய் ஒரு கிறிஸ்தவ சகோதரியுடன் கொண்ட நட்பின் மூலம் கிறிஸ்துவைக் கண்டுகொண்டார். அவர் கிறிஸ்துவையே தழுவிக்கொண்டு, தனது மீதி குடும்ப அங்கத்தினர்களையும் கிறிஸ்துவின் மந்தைக்குள் கொணர்ந்தார். பின்பு சிலகாலம் சென்றப்பின், இவருக்கு இடையன்குடியிலுள்ள FMPB விடுதியொன்றில் படிக்கும் வாய்ப்பு கிடைத்தது. அங்குள்ள ஆவிக்குரிய சூழல் இவருக்குள் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியதின் விளைவு, இவர் தன் வாழ்வை கிறிஸ்துவுக்கென அர்ப்பணித்தார். கிறிஸ்துவுடனான உறவின் ஆரம்பத் திலிருந்தே, இவருக்கு கிறிஸ்துவுக்காக ஊழியம் செய்ய வேண்டும் என்ற வாஞ்சை அதிகம் இருந்தது. எனவே, இவர் தனது பள்ளிப்படிப்பிற்குப்பின் இறையியல் கல்விக்காக SIBS–ல் இணைந்தார். இவரது பட்டப்படிப்பைத் தொடர்ந்து, இவர் 2009–ம் ஆண்டில் நமது இயக்கத்தில் இணைந்தார். பின்பு ஜான்சியில் மிஷனரிப்பயிற்சியை முடித்தப்பின், இவர் குஜராத் – தனக்லா பணித்தள டுங்ரா பீல் இன மக்கள் மத்தியில் ஊழியம் செய்ய பணியமர்த்தப்பட்டார். பின் கவாண்ட் பணித்தளம், பிராந்திய அலுவலகம் மற்றும் ஜாவ்டா பள்ளி என பணிமாற்றம் பெற்று, பின்பு 2013–ல் நாக்பூர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டார். இவர் சகோதரி. ஸ்வேதாவை 05.06.2014–ல் திருமணம் செய்தார். அதன்பின், இருவரும் ஜார்க்கண்டிலுள்ள சந்தால் இன மக்கள் மத்தியில் ஊழியம் செய்து வந்தனர்.

சகோதரி. ஸ்வேதா, பெங்களூரைச் சார்ந்த கிறிஸ்தவரல்லாத குடும்பத்தில் திரு. எர்ரப்பா & திருமதி. சாந்தம்மா தம்பதியருக்கு மகளாக 04.04.1988–ல் பிறந்தார். இவர் பிறக்கும்போது ஆண்குழந்தையாக இருக்குமென்று இவரது தந்தை எதிர்பார்த்து ஏமாற்றமடைந்ததினால், தனது தந்தையால் இவர் முழுவதும் வெறுக்கப்பட்டார். எனவே, இவர் தனது அத்தையோடு தங்கி உணவு, படிப்பு மற்றும் பிழைப்பிற்காக மிகவும் போராடினார். இவர் மிகுந்த பக்தியுள்ளவராக இருந்ததால், தான் வழிபடும் தெய்வங்கள் தன்னைக் காப்பாற்றுமென அவைகளிடம் சென்று கண்ணீருடன் மன்றாடினார். அடிக்கடி தனது அத்தையின் கொடிய தாக்குதலுக்கும் ஆளானார். ஒருமுறை அவ்வாறாக அடிவாங்கி இரத்தம் வடிந்துகொண்டிருக்கும்போது சரீரத்தின் வலி தாங்க முடியாமல், தனக்கு ஆறுதல்கூற யாருமற்ற மனவேதனையோடு அழுதுக்கொண்டிருக்கும்போது, திடீரென இவரது இதயத்தில் ‘இயேசு’ என்ற நாமம் தென்படவே, உடனேயே வலி நீங்கியது. அந்த நாள் முதற்கொண்டு, இவர் இயேசுவை ஒரு மனிதரென நினைத்து தேட தொடங்கினார். ஒருமுறை ஒரு ஆழமான படுகுழியில் கால்தவறி விழப்போன சமயத்தில் இவர் ‘இயேசு’ என்ற பெயரை சத்தமாக உச்சரித்தபோது, அக்குழியில் விழாதவாறு இவர் காப்பாற்றப்பட்டார். உடனே இவரோடிருந்த ஒரு கிறிஸ்தவ தோழி, இயேசுவை உனக்கு எப்படி தெரியும்?’ என வினவியபோது, இவர் அவருக்கு அனைத்தையும் விபரமாக எடுத்துரைத்தார். பின்பு அத்தோழியின் மூலம் இயேசுவை இரட்சகராகக் கண்டுகொண்டார். அதன்பின் ஆலயம் செல்லத்தொடங்கி, கிறிஸ்துவுக்குள் நன்கு வளரலானார். பின்பு முழுநேர ஊழியத்திற்கான தேவ அழைப்புக்கிணங்கி ஊழியராகி, தற்போது குடும்பமாக 2018–லிருந்து ஜார்க்கண்டிலுள்ள லால்மட்டியா பணித்தளத்தில் ஊழியம் செய்து வருகின்றனர். தேவன் இத்தம்பதியருக்கு இரு பிள்ளைகளைக் கொடுத்து ஆசீர்வதித்துள்ளார். முதல் பிள்ளை ஜொசியா பிரின்ஸ் (D.O.B. 18.06.2017) 1–ம் வகுப்பு டோனாவூர் – சந்தோஷ வித்யாலயாவில் படித்து வருகிறான். 2–வது பிள்ளை ரிவைவா ஜய்ரா (D.O.B. 21.09.2019) பெற்றோர்களோடு பணித்தளத்தில் இருக்கிறாள். இம்மிஷனரிக் குடும்பத்தை நமது அனுதின ஜெபத்தில் நினைவுகூருவோம்.

**Online Banking**

# நிதி அலுவலகத்திலிருந்து

## இணையதளம் வாயிலாக காணிக்கை அனுப்புவதற்கான விபரங்கள்

A/c Name: **FRIENDS MISSIONARY PRAYER BAND**

ICICI - A/c No. 602701216912 - IFS Code ICIC0006027 - Branch: Anna Nagar

**ICICI Bank UPI ID: fmpb01@icici**

SBI - A/c No. 10402752621 - IFS Code SBIN0000987 - Branch: Ambattur

Indian Bank - A/c No. 406157474 - IFS Code IDIB000A599 - Branch: Venkatapuram

தாங்கள் காணிக்கை அனுப்புகிறபோது remark column பகுதியில் தங்களது பெயர், விலாசம் மற்றும் பிரத்தியேக எண் ஆகியவற்றைப் பூர்த்திசெய்து அனுப்பவும். முதல் முறையாக online-இல் அனுப்பும்போது முகவரியுடன் எந்த வகை ஊழியத்திற்கு பயன்படுத்தப்படவேண்டும் என்பதையும் **receiptsfinance@fmpb.org** என்ற மின்னஞ்சல் வழியாக, **WhatsApp: 7904648270** உடனுக்குடன் எங்களுக்குத் தெரிவிக்க வேண்டுகிறோம்.

**கௌரவ முன்னேற்றப்பணி செயலர்கள் மற்றும் ஜெபக்குழுத் தலைவர்கள் கவனத்திற்கு:**
காணிக்கை செலுத்தும் படிவத்தில் தங்களின் கைப்பேசி எண்ணை தயவுசெய்து தெரியப்படுத்துங்கள்.

## நன்கொடையாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கவனத்திற்கு....

இணையதளம் மூலமாக பணம் பரிவர்த்தனை செய்ய, பாரத ஸ்டேட் வங்கியில் கட்டண நுழைவாயில் **(Payment gateway)** மூலமாக அனைவரும் பணம் செலுத்தும் வசதி பெற்றுள்ளோம். நன்கொடையாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் இந்த வசதியைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**FMPB SB COLLECT** என்ற இணையதளத்தின் மூலமாக பணம் அனுப்பும்போது எந்த நோக்கத்திற்காக பணம் செலுத்துகிறீர்கள் என்பதைத் தெரிவிக்கும்படி பட்சமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

கட்டண நுழைவாயிலுக்குள் நுழைவதற்கு உங்கள் இணையதளத்தில் **FMPB SB COLLECT Online subscription** என்ற வார்த்தைகளைப் பதிவு செய்து பிற தகவல்களையும் பரிமாற்றம் செய்ய தயவுடன் வேண்டுகிறோம்.

**Online Fund Transfer**

In google search type: **FMPB SB Collect**

it will show **State Bank Collect - Online SBI**

**Tick the box**

☑ (Click check box to proceed for payment)

**Proceed** State of Corporate / Institution: Select **All India**

Type of Corporate / Institution: Select **Religious Institutions**

**Go** Religious Institutions Name: **Friends Missionary Prayer Band**

**Submit** Select Payment Category: **Donations and subscriptions**

***Published by:*** S. John Berlin on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Rasi Graphics Private Limited 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. ***Editor: S. John Berlin***